# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-18 Issue-12 டிசம்பர்-2025 ஜமாதுல்ஆகிர் 1447




## தாலிபான்கள் வந்தார்கள் வென்றார்கள்!

## இஸ்ரேலை விட்டு ஓடும் யூதர்கள்

## SIR களத்தில் நமது சேவை

பாபரி மஸ்ஜித் என்றும் நம் நினைவில்....

## பாபரி மஸ்ஜித்..! இனி என்ன?

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

டிசம்பர்-2025 | ஜமாதுல்ஆகிர் 1447

வரலாற்றுத் தடத்தில்
இஸ்லாமியப் பார்வையில்
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்
படியுங்கள் பரப்புங்கள்
பாதுகாத்து வையுங்கள்


- தனிஇதழ் - ரூ. 40
- ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps
G Pay UPI BHIM Paytm


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





வரலாற்றில் பாபரி மஸ்ஜித் பாசிசம் - 18
பாபரி மஸ்ஜித் பற்றி நியூயார்க் மேயர் ஷேஹ்ரான் மம்தானி - 20
ஆர்.எஸ்.எஸ் அடிவருடிகள் செய்த பொய் அவதூறு - 22
சட்டம் நிரபராதிகளைத் துன்புறுத்த ஒரு கருவி அல்ல! - 23
வக்பு திருத்த சட்டம்-2025 - 33
இஸ்லாமிய சொற்கள் எவ்வாறு ஆயுத பாணியாக்கப்படுகின்றன? - 36
பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 38
தமிழகத் துறைமுகங்களில் கப்பலோட்டிய கீழக்கரை முஸ்லிம்கள் - 42
டெல்லி கலவரம் (தொடர்) - 46
பூமிக்குள் வெற்றிடம் - 55
பெற்றோர்கள்/ஜிஹாத்? - 57
சிலுவைப் போர் 2.0 - 59
மருத்துவம் - 61
தலையங்கம் - 62


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



# தாலிபான்கள் வந்தார்கள் வென்றார்கள்!

**ஆகஸ்ட் 15,2021 வரை தீவிரவாதிகள் என சித்தரிக்கப்பட்டவர்கள்.**

அநியாயத்திற்கு எதிராக - குறிப்பாக ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடு பவர்களுக்கு அமெரிக்காவும் அதன் அருவருடி களும் சூட்டும் பெயர், "தீவிரவாதிகள்"

இந்தியாவின் உச்சநீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக அமர்ந்திருந்தார், மார்க்கண்டேய கொச்சு. இவர் ஒருமுறை முஸ்லிம்கள் எதிர்கொண்ட வழக்கில், "நாம் தாலிபான்களாக மாணவர்கள் மாறுவதை அனுமதிக்க முடியாது என்றார்."

உடனேயே நாடெங்கும் கிளர்ந்தது எதிர்ப்பு. நாமும் நமது வைகறை வெளிச்சம் இதழில் "நீதிபதிகளுக்கு வேண்டும் வாய்ப்பூட்டு என்றொரு தலையங்கத்தைத்" தீட்டினோம்.

அந்த வழக்கை எதிர்கொண்ட அடுத்த அமர்வில் தன் வருத்தத்தை தெரிவித்தார் நீதிபதி மார்க்கண்டேய கெச்சு. அன்றே நாம் தாலி பான்கள் தீர்ப்பு நியாயத்தை தெளிவுபடுத்தி னோம்.

இப்படி தாலிபான்கள் என்ற சொல்லே தீவிரவாதத்தோடு நேரடியாக தொடர்பு படுத்தப்பட்டது.

அமெரிக்காவும் அதன் அடிவருடிகளும் தொடர்ந்து மேற்கொண்ட பிரச்சாரத்தின் வழி. இதற்காக அவர்கள் ஊடகங்களுக்கு அள்ளிக் கொட்டிய பணத்திற்கு அளவில்லை. செலவு செய்த மனித ஆற்றலும் அதிகம். ஆனால் அத்தனையும் தாலிபான்கள் மேற்கொண்ட 21 வருட ஜிஹாதிற்கு முன்னால் தவிடு பொடியானது.

இந்த இறைவழிப்போர் என்பது 21 ஆண்டு களாக 51 நாடுகளை எதிர்த்து வெற்றிகண்ட வரலாறு.

அல்லாஹ் அவர்களுக்கு அறுதி வெற்றியை ஆகஸ்ட் 15,2021இல் தந்தான்.

ஆப்கானிஸ்தான், ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய அமீரகம் என்று முடிசூட்டப்பட்டது.

இந்த வெற்றி அன்றுவரை வளர்க்கப் பட்டுவந்த இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாமிய வெறுப்பை 1000 ஆண்டுகளுக்குப் பின்னே தள்ளியது.

இந்த வெற்றிக்குப் பின்தான் ஆப்கானிஸ் தான் முஜாஹித்களின் இன்னொரு பகுதி வெளிச்சத்திற்கு வந்தது.

அது இராஜாங்க பரிபாலனத்தில் அவர்களின் வெற்றி.

51 நாடுகளின் கூட்டணி இராணுவம் அவர்களின் அந்த சிறிய நிலப்பரப்பில் இருந்த அனைத்து கட்டுமானங்களையும் தரைமட்ட மாக்கியது.


vaigarai velicham official

● தண்ணீரை தேக்கி வைத்திடும் அணைகளை உடைத்தெறிந்தது.

● நீர் வீழ்ச்சிகளிலிருந்துதான் ஆப்கானிஸ் தானுக்கு வேண்டிய மின்சாரம் பெறப்பட்டது. அவையும் தாக்கித் தரைமட்டமாக்கப்பட்டன.

● 1,29,000 அப்பாவி மக்களைக் கொன்று குவித்தார்கள்.

அத்தனையிலிலுமிருந்து இரண்டே ஆண்டு களில் எழுந்தார்கள் தாலிபான்கள் என்ற முஜாஹித்கள்.

ஆப்கானிஸ்தான் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பினார்கள்.

இதில் ரஷ்யா, சீனா, ஈரான் ஆகியவை உதவி செய்தன.

இந்தியாவும் சில நிவாரணப் பொருள்களை வழங்கியது.

ஆப்கானிஸ்தான் (கரன்சி) நாணயம் உலகில் அதிக மதிப்புகளைப் பெற்றது.

அமெரிக்க டாலரைச் சார்ந்துதான் உலக நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை வைத்து வருகின்றன. இதனை பயன்படுத்திக் அமெரிக்கா அடிக்கடி பொருளாதாரத் தடைகளை விதிக் கின்றது. இதனால் பல நாடுகளின் வளர்ச்சிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன.

அமெரிக்காவை சார்ந்து நமது பொருளா தாரத்தை வைத்துக் கொண்டால் நிச்சயமாக நாமும் எதிர்காலத்தை இழப்போம் என்பதை உணர்ந்தார்கள் தாலிபான்கள்.

அதனால் டாலர் சாராத பொருளாதாரம் ஒன்றை கட்டி எழுப்பி வருகின்றார்கள்.

இதனால் இவர்கள் வெறும் போராளிகள் அல்ல. மாறாக, மிகப்பெரிய பொருளாதார நிபுணத்துவம் அவர்களிடையே புதைந்து கிடக்கின்றது என்பதை உலகம் உணர்ந்தது.

ஆப்கானிஸ்தானில் அண்மையில் அவர்கள் தோண்டிய ஒரு பெரும் ஆறு 280 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டது. அதை பார்த்து அங்கலாயித்த உலக நிபுணர்கள் ஒரு செயற்கை கடலையே ஊருக்குள் கொண்டுவந்து விட்டார்கள் எனப் பாராட்டினார்கள்.

இந்த நீர்வளம், நிலவளத்தை பெருக்கிற்று. விவசாயம் தழைத்து வருகின்றது.

ஆப்கானிஸ்தான் பொருளாதாரம் என்றால் கஞ்சா, அபின் செடி வளர்ப்பு என்ற நிலையை மாற்றினார்கள்.

அபின், கஞ்சா செடிகளை வளர்க்க வேண்டும் என்ற மன நிலையையே வேரோடும் வேரடி மண்ணோடும் கெல்லி எறிந்தார்கள். இவற்றை வளர்ப்பவர்களுக்கு கடும் தண்டனையை விதித்திருந்தார்கள்.

இதிலெல்லாம் ஒரு பெரும் விவசாய நிபுணத்துவம் அவர்களிடம் சிறந்து நிற்கின்றது என்பதை பறைசாற்றியது.

இப்படி ஆப்கானிஸ்தானை எல்லா நிலையிலும் உயர்த்த உழைத்து வருகின்றார்கள் ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள்.

## இப்போதைய பிரச்சனை

ஆப்கானிஸ்தான் எல்லா உலக நாடுகளோ டும் சுதந்திரமாக வியாபாரம் செய்திடவும், இராஜாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டி டவும் நாடுகளின் அங்கீகாரம் தேவை.



டெல்லி, சாணக்கியாபுரி, விவேகானந்தர் சர்வதேச ஃபவுண்டேஷனில் நடந்த ரகசிய சந்திப்பின்போது அமீர்கான் முத்தக்கி.



இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் ஒரு மாபெரும் முட்டுக்கட்டை.

ஐக்கிய நாடுகள் சபை, அவர்கள் முஜாஹித் களைத் தீவிரவாதிகள் எனப் பட்டியலிட்டுள்ளது. இது அமெரிக்காவின் ஏற்பாட்டில் வந்தது.

இப்போது அவர்கள் அதிலிருந்து மெல்ல, மெல்ல விடுபட்டு வருகின்றார்கள். இப்போது ஆப்கானிஸ்தான் அமீரகத்தின் சார்பில் இந்தியா வந்த ஆப்கானிஸ்தான் வெளிவிகாரத்துறை அமைச்சர் அமீர்கான் முத்தகி அவர்கள், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தீவிரவாதி என பட்டியலிடப்பட்டவர். அந்த பட்டியலிலிருந்து விடுதலை பெற்ற பின்னர்தான் அவர் இந்தியா வந்திட இயன்றது.

அவருடைய வருகையின் முக்கிய நோக்கம், இந்தியாவின் அங்கீகாரத்தைப் பெற்றிட வேண்டும் என்பதே! அவர் அக்டோபர்-9 ஆம் தேதி முதல் 16, 2025 தேதி வரை இந்தியாவில் பயணம் செய்தார். இந்த முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றார்.

இந்தியா தனது தூதரகத்தை ஆப்கானிஸ் தானில் திறந்தது ஆப்கானிஸ்தானின் டெல்லி தூதரகத்தில் தாலிபான்களின் தூதர் நியமிக்கப்பட்டார்.

இன்றளவும், தோற்று விரண்டோடிய அமெரிக்க எடுபுடி ஆட்சியாளர் அஷ்ரப் கனியால் நியமிக்கப்பட்ட தூதர்களே அங்கே இருந்தார்கள். அமீர்கான் முத்தக்கி அவர்களின் வருகையின் போதும் டெல்லியிலுள்ள ஆப்கானிஸ்தான் தூதரகத்தில் அன்றைய அஷ்ரஃப் கனியின் ஆட்சி காலத்திலிருந்த கொடியே பறந்தது. அந்தக் கொடியை அகற்றிடச் சொல்லிவிட்டு, அந்த இடத்தில் தற்போதைய ஆப்கானிஸ்தான் அமீரகத்தின் கொடியை ஏற்றினார்கள். இது அமீர்கான் முத்தக்கி பெற்ற இன்னொரு வெற்றி.

விவசாயம், ஆரோக்கியம் எனப்பகுதிகளில் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் பரஸ்பரம் உதவிக்கு வாக்களித்துள்ளன.

**விவேகானந்தர் ஃபவுண்டேஷன்**

முத்தக்கி அவர்களின் பன்முகச் சந்திப்பில் மிகவும் முக்கியமானது அவர் நெஞ்சுரத்தோடு விவேகானந்தர் ஃபவுண்டேஷன் சென்றதுதான்.

இந்த ஃபவுண்டேஷன் விவேகானந்தா இண்டர்நேஷனல் டிரஸ்ட் பற்றி பக்கம் பக்கமாக நாம் ஏற்கெனவே வைகறை வாசகர்களுக்குச் சொல்லி இருக்கின்றோம். இது ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின் வழிகாட்டும் மைய்யமாகும். இதை ஆர்.எஸ்.எஸ்.இன் மூளை அமைப்பு என்பார்கள்.

இங்கே ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்த நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் உளவுத் துறையினர் பத்திரிகையாளர்கள் உயர் பதவியில் இருக்கும் அரசு அதிகாரிகள் இவர்களெல்லாம் வந்து குழுமிடுவார்கள்.

எஸ்.எம். முஷ்ரிஃப் ஐ.பி.எஸ். அவர்களின் கணிப்பின்படி நாட்டில் நடக்கும் சங்கப்பரி வாரத்தின் அடாவடித்தனங்களெல்லாம் செயல்படுகின்றன.

இந்த ஆர்.எஸ்.எஸ். மூளை அமைப்பில் ஒரு (Closed Doors) இரகசிய உரையாடல் நடந் திருக்கின்றது. இதில் அமீர்கான் முத்தக்கி உரையாற்றினார். பின்னர் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னார். இந்தக்


vaigarai velicham official

கூட்டத்தில் நமது இராஜாங்க அதிகாரிகள் பலர்கலந்துகொண்டார்கள். அத்தோடு முன்னாள் உளவுத்துறை அதிகாரிகளும் கலந்துகொண் டார்கள். அதேபோன்று இராஜதந்திரிகளும் கலந்துகொண் டார்கள்.

இங்கே நடந்த விவாதம் இந்தியாவுக்கு அப்பால் "South Asia" தெற்காசிய (பகுதிகளின்) நாடுகளின் பாதுகாப்பு, தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், அதற்கான ஒத்துழைப்பு வியாபார வாய்ப்புகள், ஆப்கானிஸ்தானில் மனிதாபிமான கஷ்டங்கள் இவையெல்லாம் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இதில் தாலிபான்கள் இந்தியாவுடன் ஆக்கப்பூர்வமான கண்ணியமான உறவுகளை வைத்துக்கொள்ள விரும்புகின்றது என்றும், அதேபோல் தென்ஆசியா நாடுகளின் ஸ்ரத் தன்மை, பொருளாதார வளர்ச்சி நிலைத்தன்மை ஆகியவற்றில் அதிக அக்கறை வைத்துள்ளது என்றும் கூறியுள்ளார் முத்தக்கி. - இதனை அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கூறினார்கள். (Source : Indian Insight) 13-10-2025

**தாருல் உலூம்**

தாருல் உலூம் தேவ்பந்த் தாலிபான்களின் கொள்கைகளின் தாய் சபை. அதன் பாடத் திட்டத்தின் கீழ் பயின்றவர்தான் முத்தக்கி.

விவேகானந்தர் சர்வதேச ஃபவுண்டேஷன் ஆர்.எஸ்.எஸ்.இன் தாய் சபை. இவை இரண்டும் நேர் எதிரான சித்தாதங்களைக் கொண்டவை.

ஆப்கானிஸ்தானில் முத்தக்கி இந்த இரண்டு விஷயங்களையும் கையாண்ட விதம் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது, பாராட்டத்தக்கது.

முத்தக்கியின் விஜயம் இந்தியாவின் பொருளாதாரத்தை பன்மடங்கு உயர்த்தும், அதேபோல் ஆப்கானிஸ்தானுக்கும் பல பில்லியன்களுக்கு பயன்தரும்.

**பாகிஸ்தான்**

உலக அரங்கில் முத்தக்கியின் இந்திய வரவு பல அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் தாலிபான்களை இந்தியாவுக்கு எதிராகத் திருப்பிட பல முயற்சிகளை மேற் கொண்டது. ஆனால் தாலிபான்கள் நடுவு நிலையோடு நடந்துகொண்டார்கள். பாகிஸ்தான் இன்னும் தாலிபான்கள் அரசை அங்கீகரிக்க வில்லை.



சாணக்கியாபுரியில் கேள்விக்கு
பதில் தருகிறார் அமீர்கான் முத்தக்கி

சைனாவுக்கும், ரஷ்யாவுக்கும், இந்தியா வுக்கும் ஆப்கானிஸ்தான் உறவில், தகவல் பரிமாற்றவும் பற்றி இடம்பெற்றுள்ள ஒப்பந்தம் சற்று கவலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

அமெரிக்காவும், இந்தியாவுக்கும் இடையே உள்ள உறவு நெருடல்களுக்கு ஆளாகி நிற்கும் நிலையில். அமெரிக்காவை அனைத்துத் தளத்திலும் வீழ்த்திக் காட்டிய தாலிபான்களின் டெல்லி வருகை அமெரிக்காவுக்கு பெரும் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மொத்தத்தில் தாலிபான்கள் வந்தார்கள் வென்றார்கள்.

**பெண்கள்**

முத்தக்கி அவர்களின் முதல் பத்திரிகையாளர் களின் சந்திப்பில், பெண் பத்திரிகையாளர்கள், இல்லை; இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பத்திரிகையாளர்கள் வட்டாரத்தில். இதனால் பின்னர் பெண் பத்திரிகையாளர்களை உள்ளடக்கிய பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

இதில் பெண் பத்திரிகையாளர் ஒருவர், ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்படுகின்றதா என்ற கேள்வியை எழுப்பி னார். அதற்கு முத்தக்கி அவர்கள், ஆப்கானிஸ் தானில் 2.5 லட்சம் பெண்கள் கல்விக் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள் எனப் பதில் சொன்னார்.

விவேகானந்தா ஃபவுண்டேஷன் சந்திப்பின் போது பெண்களும் கலந்துகொண்டார்கள். இப்படி வந்தார்கள், வென்றார்கள். **- MGM**



பாபரி மஸ்ஜித்
என்றும் நம் நினைவில்....

# பாபரி மஸ்ஜித்..! இனி என்ன?

எல்லாம் கெட்டுப் போய்விடவில்லை. நமது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புதான் பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோயில் வரக்காரணமாக அமைந்தது.

ஆனால் அந்த உச்சநீதிமன்றத்தில் அந்தத் தீர்ப்பு எப்படி வாங்கப்பட்டது என்ற உண்மைகள் மக்கள் மன்றத்தில் இப்போது தெளிவாகி வருகின்றன.

பாபரி மஸ்ஜித், இடிக்கப்பட்ட பின்னணியில் நடந்த தேர்தலில் அயோத்யா தொகுதியில் பாரதீய ஜனதா கட்சி ஜெயிக்க இயலவில்லை, படு தோல்வியடைந்தது.

அதேபோல், அதிக அதட்டலோடும், படோடபத்தோடும் கட்டப்பட்டது, பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோயில், அடுத்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் (2024) அயோத்தியா இருக்கும் பைஜாபாத் தொகுதியில் இந்துத்துவ பாசிச கட்சி தோல்வியைத் தழுவியது.

இத்தனைக்கும் இந்த 2024ஆம் ஆண்டு தேர்தலில் இந்திய தேர்தல் ஆணையம் தங்கு தடையின்றி பாரதீய ஜனதா கட்சிக்கு எல்லா உதவிகளையும் செய்தது.

மின்னனு வாக்கு இயந்திரங்கள் தேவையான அளவுக்கு பாரதீய ஜனதா கட்சிக்கு சேவை செய்தன.

அயோத்தியா இடம் பெறும் உத்திரப் பிரதேசத்தில் முன்னர் நடந்த மாநில தேர்தலிலும் பா.ஜ.க. பெரும் பின்னடைவையே சந்தித்தது. இவையெல்லாம் அயோத்திவாழ் மக்கள் - பாபரி மஸ்ஜித் இடிப்பையும், ராமர் கோயிலையும் அங்கீகரிக்கவில்லை என்பதையேக் காட்டுகின்றன.

மின்னனு வாக்கு இயந்திரத்தின் உதவியால் தான் யோகி ஆதித்யாநாத் மீண்டும் ஆட்சிக்கு வந்தார்.

மட்டுமல்லாது 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மொத்த பாரதீய ஜனதா கட்சியும் பெரும் பின்னடைவையே சந்தித்தது. அறுதி பெரும்பான்மை என்ற ஆணவ கோஷம் தகர்ந்தது. கூட்டணி ஆட்சியே மத்தியில் அமைந்தது.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் இந்து பாசிச சிந்தனையிலிருந்து மக்கள் பெருமளவில் விடுபட்டு வருகின்றார்கள் என்பதைத்தான்.

*இனி அவர்களாக ஏற்பாடு செய்யும் குண்டு வெடிப்புகளும் முன்னர்போல் எடுபடாது. ஏனெனில் குண்டு வெடிப்புகளை நடத்தியதே சங்கப் பரிவாரந்தான் என்ற உண்மை எல்லோருக்கும் தெரிந்துபோனது. அதனால் இன்றளவும் பழியைச் சுமந்த முஸ்லிம்கள்மேல் ஓர் அனுதாபம் தோன்றியுள்ளது.*

*இதில் பாசிச பயங்கரவாதிகளே பல ஒப்புதல் வாக்குமூலங்களை வழங்கிவிட்டார்கள். அவையும் மக்களை வெகுவாகவே சென்றடைந் துள்ளன.*

**“கர்கரேயைக் கொலை செய்தது யார்?” “இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்” இந்த நூல் இந்தியாவில் 8 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு மக்களைச் சென்றடைந்துள்ளது.**

**“26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?” “பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்”**

**“புரோகித் இன் லேப்டாப்-இல் இருந்ததென்ன?”**

**“இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு”**

**“நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்”**

**“கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிடப்பட்டது ஏன்? என்று அடுக்கடுக்காய் அணிவகுத்து வந்த நூல்கள் மக்கள் மன்றத்தில் நிறைவான விளக்கத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி உள்ளன.**

*மக்கள் இந்துத்துவ பாசிசத்தின் பிரித்தாளும் சூழ்ச்சியையும் கொள்கைகளையும் ஊழல் களையும் ஊதாரித்தனத்தையும் நன்றாகவே புரிந்துகொண்டார்கள்.*

*அதேபோல் பாபரி மஸ்ஜித் வழக்கில் நடந்த தகிடுதத்தங்கள், தீர்ப்பின்போது வழக்குத் தலைமை தாங்கிய தலைமை நீதிபதியின் பாலியல் குற்றங்கள், அதை வைத்து வாங்கப்பட்ட தீர்ப்பு, இவையும் மக்கள் மன்றத்தில் வெட்ட வெளிச்சம்.*

*அதன்பின்னர் அவரும், அவரது மனைவியும் பெற்ற பதவிகள் எல்லாம் இந்தியாவில் மட்டு மல்ல உலக மக்கள் மத்தியிலும் பெரியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது.*

*ஆக, மக்கள் கருத்து பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் நீதியின் பக்கம் வெகுவாகத் திரும்பி வருகின்றது.*

*அடித்தட்டு மக்களின் கருத்துக்கள் மட்டு மல்ல, அறிவார்ந்த ஆன்றோர்கள், ஆராய்ச்சி யாளர்கள், மூத்த வழக்கறிஞர்கள், இவர்களும் பாபரி மஸ்ஜித் வழக்கிலும் தீர்ப்பிலும் நடந்த அநீதிகளை நன்றாகவே உணருகின்றார்கள், விமர்சிக்கின்றார்கள்.*

*மக்கள் மன்றத்தில் இடைவிடாமல் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.*

*பாசிசம், இப்போது பல்வேறு தகிடுதத்தங்கள் வழி இந்தியாவில் ஆட்சியில் தன்னை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. குண்டு வெடிப்பு களைத் தொடர்ந்து, வாக்குத் திருட்டு, இவை இவர்களின் உண்மை முகம் அதுவும் விழும் நீதி பின்னர் எழும்! முதல் வாய்ப்பிலேயே பாபரி மஸ்ஜித் மீளும்! இன்ஷாஅல்லாஹ்.*

*அன்றளவும் பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் வழக்கில் நடந்த அனைத்து உண்மைகளையும் மக்கள் மன்றத்தில் விளம்பிக் கொண்டே இருக்க வேண்டும். அறிவுப்பூர்வமாக எதிர்வரும் தலைமுறைக்குப் புரிய வைத்திட வேண்டும்.*

*இதை அமைதியாக, ஆரவாரமில்லாமல் ஆதாரங்களோடு செய்துகொண்டே இருக்க வேண்டும். இதில் தொய்வோ, தளர்வோ கூடாது.*

*உலக அரங்கில் நடக்கும் விவாதங்களிலும், நம் நாட்டில் நடக்கும் விவாதங்களிலும், பாபரி மஸ்ஜித் வழக்கும் தீர்ப்பும், ஏளனத்திற்கு உள்ளாகி வருகின்றது. பாபரி மஸ்ஜித் இருந்த*

**26/11/2025 அன்று மதுரையில், தமிழ் இசைச் சங்கத்தில் நடந்த சமத்துவ வழக்கறிஞர்கள் மாநாட்டில்ட உரையாற்றிய மூத்த வழக்கறிஞர் லஜபதிராய் “பாபரி மஸ்ஜித்” தீர்ப்பை அநீதியின் அடையாளமாக மேற்கோள் காட்டினார்.**

**தன்னுடைய உரையில், தீர்ப்பை வழங்கிய அனைவருக்கும் பின்னர் பதவிகளும் சலுகைகளும், வழங்கப்பட்டதைக் குறிப்பிட்டார்.**

**ஆக பாபரி மஸ்ஜித் தீர்ப்பு அனைவருக்கும் - வழங்கப்பெற்ற பதவிகள், சலுகைகள் ஆகியவையின் விலை. பதவிகளும் பரிசில்களும் லஞ் சமாகத் தரப்பட்டு, வாங்கப்பட்டத் தீர்ப்பு என்பது உரக்க முழங்கப்பட்டு வருகின்றது. இந்த முழக்கங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இதனை மூலதனமாகக் கொண்டு மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினால் நல்ல தீர்வும், தீர்ப்பும் கிடைக்கும்.**

இடத்தில் இருக்கும் கட்டிடம் அநீதியின் அடையாளமாகவே பார்க்கப்படுகின்றது. இதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இதுகுறித்து வேர்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ள “பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்” என்ற நூலில் நிரம்பவே ஆதாரங்கள் உள்ளன. அதனை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த நூலை பரவலாக்கும் பணி நடந்துகொண்டே இருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ் அதில் நாமும் கலந்துகொள்ளலாம். 20 அக்டோபர் 2024இல் சந்திரசூட் என்ற நீதிபதி, நான் பாபரி மஸ்ஜித் தீர்ப்பை கடவுளிடம் கேட்டுத்தான் எழுதினேன் என்றபோது எல்லா உண்மையும் வெளியே வந்தன. - சந்தி சிரித்தது.

இது மீண்டும் பாபரி மஸ்ஜித் வழக்கின் தீர்ப்பு சட்டங்களின் அடிப்படையில் வழங்கப் பட்டதல்ல என்பதை உறுதி செய்தது. மூட நம்பிக்கைகளே வழக்கையும் தீர்ப்பையும் வழி நடத்தின என்பதை பறை சாற்றின.

இதை பாபரி மஸ்ஜித்-ஐ இழந்த முஸ்லிம் களைவிட, சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோர்கள் கடுமையாக விமர்சித்தார்கள். தீர்ப்பு ஒரு துரோகம் என்றார்கள்.

இப்படி அடிக்கடி தீர்ப்பு விமர்சனத்திற்கு நிச்சயமாக வரும். அநீதியை தீர்ப்பாகத் தந்தவர்களின் வாயிலிருந்தே! அந்தச் சந்தர்ப்பங்கள் மக்கள் மனங்களை திரும்பும் தீர்ப்புகள் மாறும். இன்ஷாஅல்லாஹ்!

பல மூத்த ஆய்வாளர்கள் அது தீர்ப்பு அல்ல, அநீதி என்பதை பொட்டில் அறைந்தார்கள் முழங்கினார்கள்.

இறைவன் நிலைகுலையாமல், எடுத்தப் பணிகள் உறுதியாக நிலையாக நிற்பவர்களுடன் இருக்கின்றான்.

சூதும் வாதும் நிலைக்க மாட்டா (சத்தியம்) உண்மை மட்டுமே நிலைக்கும்.

சத்தியம் வரும், அசத்தியம் அழியும்! அசத்தியம் அழிந்தே தீரும்!

மனித வரலாறு என்பது நீதிக்கும் அநீதிக்கு மிடையே நடக்கும் போரின் வரலாறுதான் என்பதைக் கருத்தில் நிலையாகக் கொள்ள வேண்டும்.

**ஹிட்லரின் நாஜிசம்**
**17 ஆண்டுக்குள் நின்றது.**

**முசோலினியின் பாசிசம்**
**15 ஆண்டுக்குள் நின்றது.**

**இந்திய பாசிசம்....?**

இந்த தீவிரவாத கொள்கைகள் எல்லாம் நிச்சயமாக விழும். அப்போது எழும். நீதி நிலை நாட்டப்படும் பாபரி மஸ்ஜித்.

இன்ஷா அல்லாஹ்!

சிலரை பல காலம் ஏமாற்றலாம்

பலரை சில காலம் ஏமாற்றலாம்

எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்றிட இயலாது.

இது வரலாறு புகட்டும் பயனுள்ள தத்துவம் அறிவீர். இன்ஷாஅல்லாஹ் இதை மக்கள் இயக்கமாக மாற்றுவீர்!


vaigarai velicham official



# SIR களத்தில் தாருல் இஸ்லாம்/ வைகறை வெளிச்சம் சேவைகள்!

**SIR** என்கின்ற இந்த மூன்று எழுத்து தமிழ்நாட்டையே பெரும் பரபரப்புக்குள்ளாக்கி உள்ளது. ஒருபடி கூடுதலாக சொல்ல வேண்டுமென்றால் 12 மாநிலங்களில் சுமார் 37 (BLO)க்களின் உயிர்களை காவு வாங்கியுள்ளது. கடந்த SIR 2002 என்பது மூன்று வருடங்களாக வீடு வீடாக சென்று அதிகாரிகளால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பாகும். ஆனால் இந்த SIR-2026 எந்த பயிற்சிகளோ அல்லது மாதிரி முறைகளையோ கற்றுத்தராமல் மக்கள் கைகளில் தேர்தல் ஆணையத்தால் கொடுக்கப்பட்ட ஒரு படிவம் தான் பரபரப்புக்குக் காரணம், ஆம் மக்கள் கைகளில் கொடுக்கப்பட்ட இந்த படிவத்தில் மக்கள் தங்கள் உறவினர்களாகிய ஆவியானவர்களின் விபரங்களை தேடி அலைந்துக்கொண்டிருப்பது தான் இந்த SIR-2026இன் வினோதம்.

**Nov-4, - Dece-11**

SIR-2002ல் கொடுக்கப்பட்ட கால அவகாசத்தைத் விட SIR 2026ல் கொடுக்கப்பட்ட கணக்கெடுப்பு காலம் வெரும் ஒருமாத காலம்தான். அதுவும் 6.36 கோடி மக்களுக்கு, பா.ஜ.காவின் கைப்பாவையயாக மாறிப்போன தேர்தல் ஆணையம் தங்களது தகிடுதத்தங்களை பீஹாரில் கையாண்டதை போல் இந்த 12 மாநிலங்களையும் மாற்ற அரும்பாடு படுகிறது.

இன்னும் ஒருபடி மேலாக தேர்தல் ஆணையம் செய்யும் அநீதிகளை யாரும் நீதிமன்றங்களுக்கு வழக்காக எடுத்துச் செல்லாத விதமாக ஒன்றிய அரசு ஓர் அந்நிய சட்டத்தை இயற்றித்தான் தேர்தல் ஆணையத்தோடு இணைந்து செயல்படுகிறது. இந்த சட்டம் அரசியல் சாசனத்திற்கு எதிரானதாகும்.

**BLOக்களும் தேர்தல் ஆணையமும்**

போதிய பயிற்சி அளிக்காமல் அன்றாட அங்கன்வாடியில் பணிபுரியும் ஊழியர்களை BLOக்களாக களமிறக்கி பெரும் பணிச்சுமையை பணித்துள்ளது தேர்தல் ஆணையம். அவர்களுக்கு இதை பற்றிய புரிதல்களுக்குகூட நேரம் தரவில்லை. மாறாக, தேர்தல் ஆணையம் 12 மாநிலங்களில் தமிழ்நாடு உட்பட 37 BLOக்களின் உயிர்களை காவு வாங்கியதுதான் மிச்சம்.

சில BLOக்களிடம் கொடுக்கப்படும் படிவங்களை SCAN செய்ய ஆன்ட்ராயிட் கைபேசிகூட இல்லை என்பதே நிதர்சன உண்மை. ஆனால், அதற்கான தொகையை கொடுக்காமல் ஆன்ட்ராயிட் கைப்பேசியை வாங்க தங்கள் திணிப்பையும் செய்துள்ளதாக BLOக்கள் புகார் தெரிவித்தனர். கூடுதலாக பணிச்சுமை காரணமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ளிருப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர். அய்யோ பரிதாபம்.

வெளி மாநிலத்தைச் சேர்ந்த 869 பேர் தமிழ்நாட்டில் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறிய நிலையில் வாக்காளர் இறுதி பட்டியல் தயாரித்த பின்பும் திமுக, கம்யூனிஸ்ட் பார்ட்டி, காங்கிரஸ், விசிக போன்ற கட்சிகள் மிக கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் பீகாரில் மாநிலத்தில் வேட்பாளர் மனுதாக்கலின் பத்து நாட்களுக்கு முன்னர் பல லட்ச வாக்காளர்களை இணைத்துள்ளதாக அறிவித்தது தேர்தல் ஆணையம். ஆகையால் தமிழ்நாட்டில் ஆளும் கட்சிகள் மற்றும் கூட்டணி கட்சிகள் மிக விழிப்புணர்வோடு இருந்தால் மட்டுமே இதுபோன்ற சதிகளை முறியடிக்க முடியும்.

## வைகறை வெளிச்சமும் - களமும்

SIRன் தீவிர நிலையை அறிந்த வைகறை வெளிச்சம் குழு SIR படிவ பூர்த்தியை முன் கூட்டியே தேர்தல் ஆணைய வலைதளத்தில் கண்டறிந்து Nov-3 முதலே தங்கள் உதவி பணிகளை ஆரம்பித்துவிட்டது.

ஆம் தேர்தல் ஆணைய வலைத்தளத்தில் கண்டறிந்த Annexure-III-ஐ மாதிரியாக கொண்டு பல மாவட்டங்களில் மக்களின் துயரங்களைப் போக்கும் விதத்தில் மாதிரி பயிற்சிகளை வழங்கினோம். வாக்காளர்களின் படிவ பூர்த்தியான பெரும் சுமை அதில் தீர்ந்தேவிட்டது என கூறலாம். அல்ஹம்துலில்லாஹ்.

வைகறை வெளிச்சம் குழு கொடுத்த இந்த மாதிரி பயிற்சி இரண்டு விதமாக கொடுக்கப் பட்டது. ஜமாஅத் ரீதியாக சென்று மக்களுக்கு நேரடி பயிற்சியும், களத்தில் மக்களுக்கு பூர்த்தி செய்து தர பயிற்சி பட்டரைகளையும் ஏற்பாடு செய்து தந்தது. இதனால் பல மக்கள் பெரும் சுமையில் இருந்து நீங்கினார்கள்.

வைகறை வெளிச்சம் குழு வெறும் ஜமாஅத் துகள் மட்டுமல்லாது பிற மத சகோதரர்கள் வாழும் கிராமங்களுக்குச் சென்று மாதிரி பயிற்சிகளை கற்றுக் கொடுத்தது. அப்படி பயிற்சி கொடுத்த ஊட்டுவாழ்மடம் கிராம மக்களிடம் தங்களுக்கு அறிந்ததை பூர்த்தி செய்து தாருங்கள் என்று படிவத்தை மட்டும் கொடுத்து சொன்ற BLOக்களிடம் மிகத்திறனாக நமது உதவியால் இரண்டே நாளில் அதை சரியான வழியில் பூர்த்தி செய்து கொடுக்க வழிவகை செய்தது. அவர்கள் நன்றி பாராட்டி னார்கள்.

## BLOக்களும் - முன்னுக்கு முரணும்

போதிய பயிற்சி அளிக்காத தேர்தல் ஆணை யத்தின் BLOக்கள் ஒவ்வொருவரும் முன்னுக்கு முரணாகவே தங்கள் படிவங்களை பூர்த்தி செய்ய சொன்னனர். ஒரே ஓட்டுச் சாவடியை சார்ந்த ஒவ்வொரு பாகத்தின் BLOக்களும் தங்களுக்கு ஏற்றவாறு படிவங்களில் உள்ள உறவினர்களின் பெயர்களையும், விபரங்களையும் எழுத சொன்ன வினோதம் மக்களுக்கு ஒரு பெரும் குழப்பத்தத ஏற்படுத்தியது. தேர்தல் ஆணையத்தால் படிவத்தில் கேட்கப்பட்ட உறவுமுறைகளை மக்கள் தங்கள் உறவினர்களாகிய ஆவியான வர்களை தேடும் நிலையில் BLOக்களின் இந்த முன்னுக்கு முரணான அணுகுமுறை மக்களை வாட்டி வதைத்தது என்றே கூறலாம். காரணம் போதிய கால அவகாசமும் இல்லை, போதிய பயிற்சியும் இல்லை.

## படிவத்தில் மேல் பகுதி

படிவங்கள் வழங்கப்பட்ட ஆரம்ப நாட்களில் மாவட்ட ஆட்சியர் அறிவித்ததாக BLOக்கள் மக்களிடம் படிவத்தின் மேல்பகுதியை மட்டுமே கொடுத்தால் போதுமானது என கூறி பல மக்களின் படிவங்களை அவ்வாறே




vaigarai velicham official



பூர்த்தி செய்து வாங்கிச் சென்றனர். ஆனால், சிறிது நாட்கள் கழித்து அப்படிவங்களை மக்கள் கையில் திருப்பிக் கொடுக்க மாவட்ட ஆட்சியர் ஆணையிட்டதால் BLOக்கள் மக்களை அலைபேசியில் மீண்டும் அழைத்து அதை பூர்த்தி செய்து தர அலைக்கழித்தனர். மக்கள் பட்ட பெரும்பாடு ஓர் துயரம்தான். அப்படி திருப்பி கொடுக்கப்பட்ட மக்களுக்கும் நமது வைகறை வெளிச்சம் குழுக்களாக இறங்கி உதவிகளை செய்தது.

### படிவங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை

SIR படிவங்கள் இன்னும் முழுமையாக வழங்கப்படவில்லை. அங்கன்வாடியில் பணி புரியும் சில வயதானவர்களின் கையில் பெரும் சுமைகளை தூக்கிச் செல்லும் அளவிற்கு அந்த படிவங்களை கொடுத்திருப்பது ஒரு காரணம். மேலும் பலர் தங்கள் வாடகை வீடுகளை வேறு தெருவிற்கோ அல்லது வேறு மாவட்டத்திற்கோ மாறி புலம்பெயர்ந்திருப்பதும் ஓர் காரணம். இதனால் BLOக்கள் அந்த நபர்களை அல்லது அந்த குடும்பங்களை எவ்வாறு இந்த ஒரு மாதக் காலத்தில் தேடி மூன்று முறை அவர்களின் வீடுகளுக்குச் சென்று படிவங்களை வழங்க முடியும். இன்னும் ஒவ்வொரு BLOக்களிடம் சுமார் 150 முதல் 200 படிவம் வரை மக்களுக்கு வழங்கப்பட முடியாமல் அலைந்துக் கொண்டிருக்கின்றனர். இந்த படிவத்தை பெற்றுத் தரும் முயற்சியிலும் வைகறை வெளிச்சம் குழு தங்கள் முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் இன்னும் வழங்கப்படாமல் இருக்கும் படிவங்கள் கொண்ட மக்களின் நிலையை தேர்தல் ஆணையம் கையாளும் விதம் ஓர் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

### BLOக்கள் மீது FIR

மாறாக போதிய கால அவகாசம் அளிக்காமல் நொய்டாவில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஸ்குமாரின் மகள் மேதாரூபம் நவ.4 முதல் 130 BLOக்கள் அதிகாரிகள் மீது FIR பதிவு செய்துள்ளார். காரணம் SIR-ஐ நேரத்தில் நடத்தி முடிக்கவில்லை என்று நவ.27, 181 BLO அதிகாரிகள், 191 ஆசிரியர்கள், 113 ஜூனியர் ஆசிரியர்கள் மீதும் விசாரணை நடத்தி வேலையை விட்டு தூக்கப்பட்டனர். மேலும் பலர் மீது தண்டனையாக ஒருநாள் சம்பளமும் பிடிக்கப்பட்டுள்ளது. இப்படி செய்யப்படும் தேர்தல் ஆணையத்தின் அநியாயங்களையும் நாம் வழக்காக எடுத்துச் செல்ல முடியாத நிலையை பா.ஜ.க. ஒன்றிய அரசு ஓர் அநியாய சட்டத்தை இயற்றியுள்ளது ஓர் பெரும் துயரம்.

### மக்களுக்கு பார்வையிடப்பட்ட காணொளியை நீக்கியது யூட்யூப்

படிவம் கிடைக்கப்பட்ட நாள்முதல் யூட்யூபிலும், வலைத்தளங்களிலும் மக்கள் தங்களுக்கு அறிந்தார்போல் படிவத்தை

விண்ணப்பிக்கும் முறையை பதிவேற்றி வந்தனர். இந்நிலையில் வைகறை வெளிச்சம் தங்கள் யூட்யூப் சேனலில் தேர்தல் ஆணையம் வெளியிட்ட Annexure-III முறைப்படி படிவத்தை பூர்த்தி செய்யும் முறையை ஓர் சிறப்பு காணொளியாக வெளியிட்டது. அதை பொருக்க இயலவில்லை நமது அன்பர்களுக்கு வெறும் மூன்று மணி நேரத்தில் 600 காட்சிகள் போய்க் கொண்டிருந்த நேரத்தில் திடீரென நீக்கியது யூட்யூப் நிறுவனம். ஆயினும் வைகறை வெளிச்சம் குழு அந்த காணொளியை பல வலைத்தளங்களில் வெளியிட்டு மக்கள் பார்வைக்கு வழிவகை செய்து உதவியது.



## வீடுகளும், அலுவலகங்களும், ஜமாஅத்துகளும் நிரம்பி வழிந்தது

வைகறை வெளிச்சம் குழுவால் பல மாவட்டங்களில் சுமார் 21 பயிற்சி முகாம்களும், பயிற்சிப் பட்டரைகளும் நடத்தப்பட்டது. இதன் விளைவாக, பல வீடுகளிலும், சிலரின் அலுவலகங்களிலும் இன்னும் ஜமாஅத்களிலும் பல முகாம்கள் அமைக்கப்பட்டு மக்களின் படிவங்கள் பூர்த்தி செய்துக் கொடுக்கப்பட்டன. பெரும்பாலும் வீடுகளிலும், ஜமாஅத்திலும் பெண்கள் திரளாக கலந்து மக்கள் பாரங்களை தீர்க்கும் வகையில் படிவங்களை பூர்த்தி செய்துக் கொடுத்தனர். இதனால் மக்கள் தங்கள் படிவங்களை விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு BLOக்களிடம் ஒப்படைத்தனர். மேலும் BLO இந்த படிவத்தின் விண்ணப்பங்களை தங்கள் அதிகாரிகளுக்கு வாட்ஸ்ஆப் மூலம் அனுப்பிக் கொடுத்து சரியான நிலையில் அவர்கள் பூர்த்தி செய்துள்ளார்கள் என்று கிடைக்கப்பட்ட தகவல்களையும் குறுஞ் செய்தியாக மக்களுக்கு அனுப்பியும் வைத்தனர். வைகறை வெளிச் சத்தின் இந்த முயற்சி பெறும் வெற்றி. அல்ஹம்து லில்லாஹ்.

## தேர்தல் ஆணையத்தால் வலைதளம் ஏற்படுத்திய தடங்கல்கள்

போதிய முன் ஏற்பாட்டை முன்பே மக்கள் பெற வழிவகை செய்யாமல் 2002க்கான தரவுகளை மக்கள் நவம்.4 முதல் தேட ஆரம்பிக்கும் நிலையில் இடையூறாக அடிக்கடி தங்கள் வலைதள மாற்றங்களை செய்து கொண்டிருந்தது தேர்தல் ஆணையம். இதனால் மக்கள் பட்ட துயரம் சொல்லி மாளாது. சுமார் 30 நாட்களில் 15 நாட்களுக்கு மேலாக மக்கள் தங்கள் 2002-2005 தரவுகளை பெற இயலாமல் அல்லோலப்பட்டுக் கிடந்தனர் என்பது உலகம் அறிந்த உண்மை. இந்த 15 நாட்களும் சரி அதற்குப் பிறகும் சரி மக்கள் தங்கள் தரவுகளை பெறுவதில் சிக்கலில்தான் உள்ளனர்.

பதிவுகள் ஏதும் கிடைக்கவில்லை. (No Record found) என்ற வார்த்தைதான் தேர்தல் ஆணையத்தின் இணையதள பிரதான வார்த்தை. ஆம் எங்கு இருந்தது, யார் தங்கள் 2002/2005க் கான தரவுகளை வலைதளம் மூலம் தேடினாலும் நூற்றில் 85% நபருக்கு தரவுகள் கிடைக்கப் பெறவில்லை. மேலும் ஒரே தெருவில் வசிக்கும் பலரின் தரவுகளும் வேறு சாவடிகளிலோ அல்லது வேறு தொகுதியிலோ மாறி கிடக்கும் அவலநிலையும் ஏற்பட்டுள்ளது. அதிலும் மக்கள் தங்கள் உறவினர்களாகிய ஆவியானவர்களின் விபரங்களை தேடி அலைந்து தங்கள் சக்தி களையே இழந்துவிட்டார்கள். அதுமட்டு மல்லாது நூற்றில் 50% நபருக்கு தங்கள் வாக்குரிமை பெற்றிருந்தும் தங்கள் வாக்குகளை சரியாக நிறைவேற்றியிருந்தும் படிவங்கள் கிடைக்கவில்லை. அவர்கள் இனி புதியதாய் சேர்வதுபோல் Form-6ஐ இணைத்து சேர வேண்டும் என்பதுதான் அவர்களுக்கான காரண மின்றிய தண்டனை. இன்னும் அவர்களுக்கு தன் வாக்குரிமை ஏன் பறிபோனது தனது பெயர் ஏன் நீக்கப்பட்டது என்ற விபரம்கூட அறியமுடியவில்லல.

**ஒரு பாகமே பறிபோன பரிதாபம்**



vaigarai velicham official



சென்னையில் உள்ள புரசைவாக்கம் தொகுதி 183ஆம் பாகம் அத்திப்பட்டி கிராமம் போல் தேர்தல் ஆணையம் இணைய தளத்தில் தொலைந்துபோனது. இந்த 183ஆம் பாகம் என்பது ஓர் எடுத்துக்காட்டுதான் இதுபோல் பல தொகுதிகளில் பல வாக்குச்சாவடி பாக தரவுகள் தொலைந்துபோயுள்ளன. இதன் பொறுப்பை தேர்தல் ஆணையம்தான் ஏற்க வேண்டும். அவ்வாறு தொலைந்துபோன பாகத்தின் வாக்காளர்கள், தங்கள் படிவத்தின் மேல் பகுதிகளை மட்டுமே பூர்த்தி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் பெயரை தேர்தல் ஆணையம் இறுதி வரைவுப் பட்டியிலிலிருந்து நீக்கக்கூடாது.

## தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட புகார்

தங்கள் 2002 தரவுகளை காணக்கிடைக்கா தவர்கள் படிவங்களை பெற முடியாதவர்கள் எந்தக் காரணமின்றி தங்கள் பெயர் நீக்கப்பட்டு படிவம் வராதவர்கள் தங்கள் புகாரை தேர்தல் ஆணைய இணைய தளத்தில் புகார் அளிக்க முற்படும்போது தேர்தல் ஆணையம் செய்த பெரும் கொடுமை என்ன தெரியுமா? அவர்களின் துயரங்களை தான் அறிய விரும்பாதவாறு தன் புகார் பெட்டியை முடக்கி வைத்துக்கொண்டது. வைகறை வெளிச்சம் குழு இதை சாதுரியமாக கையாண்டது. அதாவது தேர்தல் ஆணையத்தின் மின்அஞ்சல் முகவரியை கண்டறிந்து, பாதிக்கப் பட்ட மக்களுக்கு புகார் செய்யும் பொருட்டு வழிவகை செய்தது. அதாவது tnsec.tn@nic.in, complaints@eci.gov.in, ceo@tn.gov.in போன்ற மின்னஞ்சல் மூலம் தங்கள் காணக்கிடைக்காத அல்லது பதிவேற்றம் செய்யப்படாத பாகங் களின் விபரங்கள் குறித்து புகார் கொடுக்க உதவி செய்தது. இன்ஷாஅல்லாஹ் இதில் நாம், சென்னை புரசைவாக்கம் பாகம் 183 மட்டும் எடுத்துக்கொண்டால் சுமார் 3782 வாக்காளர்கள் பெயர்கள் விடுபடாமல் பயன்பெறுவர், இதுபோல் மற்ற புகார்தார்களுக்கும், நன்மை பயக்கும் என நம்பப்படுகிறது.

## மாவட்ட ஆட்சியர்கள் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்

கடையநல்லூர், அதிகராம்பட்டினம், இன்னும் பல ஊர்களிலும் பல ஆயிரத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்களின் 2002-2005 தரவுகள் மற்றும் படிவங்கள் தரப்படவில்லை, கிடைக்கப்படவில்லை. அதை அவ்வூர் மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் தெரிவித்து மாவட்ட ஆட்சியர் நேரில் வந்து நடவடிக்கை எடுப்பதாக கூறி சென்றார். ஆனால் அது எங்ஙனம் என்பது டிச.16இல் தான் தெரியவரும். இதுபோன்று முஸ்லிம்களின் வாக்குகள் பாதிக் கப்பட்ட நிலையை பார்க்கும்போது பீஹாரின்





சாயல் இங்கு தமிழ்நாட்டில் வந்துவிடுமோ என்ற ஐயம் தோன்றுகிறது.

மாவட்ட ஆட்சியர்கள் இதுபோன்ற மக்கள் துயரங்களுக்கு நடவடிக்கை எடுப்பதாக தன் வாய் மொழியாக மட்டும் கூறாமல், தன் செயலால் தீர்வுகளை செய்து தர வேண்டும். மக்களின் பெயர்கள், தரவுகள், படிவங்கள் தேர்தல் ஆணைய இணையதளத்தில் அவர்கள் உறுதி அளித்தபடி வரும் 2026 SIR வரைவு படப்பட்டியலில் இடம்பெற வழிவகை செய்யப் பட வேண்டும். அல்லது அந்த தடங்களுக்கு தாங்களே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

## நடந்தது 2% வேலைதான்

மக்கள் தங்கள் படிவங்களில் முழு தரவு களையோ அல்லது கிடைக்கப்பட்ட தரவு களையோ பூர்த்தி செய்து கொடுத்திருப்பது வெறும் 2% வேலைதான். டிச.16க்கு பிறகுதான் மீதி 98% வேலையும் காத்திருக்கிறது. பொதுவாக மக்கள் தங்கள் படிவங்களை பூர்த்தி செய்து கொடுத்ததோடு தங்கள் வேலை முடிந்தது என்ற முடிவுக்கு வந்துவிட வேண்டாம். ஏனென்றால் டிச.16 முதல் பிப்.12 வரை வரைவு பட்டியலில் தங்கள் பெயர் இடம் பெற்றிருப்பதை உறுதிபடுத்த வேண்டும். பெயர் இடம் பெறாதவர்கள் தங்கள் ஆவணங்களை கொண்டு நிரூபிக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசின் குடியுரிமை சரிபார்க்கும் செயலை இந்த தேர்தல் ஆணையம் கையில் எடுத்துள்ளது. இது அரசியல் சாசனத்திற்கு எதிரானது.

ஆகையால் வாக்காள மக்கள் அனைவரும் தங்கள் ஆவணங்களை முறைபடுத்தும் விதமாக அந்த 13 ஆவணங்களில் தங்களிடம் இருக்கும்




மற்ற ஆவணங்கள் இருப்பினும், ஜாதி சான்றிதழையும், வசிப்பிட சான்றிதழையும் கூடுதலாக எடுத்து வைக்குமாறு வைகறை வெளிச்சம் குழு கேட்டுக்கொள்கிறது.

## Form-6

வாக்காளர் பட்டியிலிருந்து தங்கள் பெயர் களை நீக்கி, படிவம் பெறாதவர்கள், புதிய வாக்காளர்களாக இணைய நினைப்பவர்கள் இந்த இணைத்தளம் மூலம் https://rotes.eci.gov.in மூலம் Form-6ஐ பதிவிறக்கம் செய்து தங்கள் உறவினர்களின் விபரங்களையும் கொடுத்து பூர்த்தி செய்துகொள்ளுங்கள்.

டிச.11 அன்று முடியவிருக்கும் படிவம் பூர்த்தி செய்யும் பணியில் வைகறை வெளிச்சம் குழு முழு வீச்சாக செயல்படும். அதேபோன்று டிச.16இல் வெளியிடப்படும் வாக்காளர் வரைவு பட்டியலில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் அங்கும் மக்கள் பணிக்காக இந்த வைகறை வெளிச்சம் குழு முழு வீச்சில் களம் இறங்கும். தங்களால் இயன்ற உதவிகளையும் செய்யும். இன்ஷாஅல்லாஹ். **– அப்துல் பாஸித்**


vaigarai velicham official



மதுரையிலும் வைகறை வெளிச்சம் குழு சார்பாக SIR படிவங்கள் பூர்த்தி செய்யும் பணி.



என் கடன்
பணி செய்து கிடப்பதே
என்றார் திரு வி.க. என்ற
திரு வி.கலியாணசுந்தரனார்.

நாகர்கோவில் கோட்டார்
48ஆவது வார்டு
கச்சேரி ரோட்டில் வசிப்பவர்
அப்துல் பாஸித்.
சமூக ஆர்வலர் மற்றும்
சமூக சேவகர்.
சமூக மக்களிடம்
அன்பு நேசம பாச நட்புடன்
ஆர்வங் கொண்டு
சமூக சேவை செய்பவர்.
சமூகத்தில் ஆர்வம்
இருப்பவரால் தான்
சமூக சேவை செய்திட
முடியும்.

அதனால் தான்
அப்துல் பாசித் ஒரு
சமூக சேவராக திகழ்கிறார்.

பொது நலனுக்காக
எத்தனையோ விசயங்களை
தன்னுள் எடுத்து
பொதுநலத்துக்கு
சேவை செய்து வருகிறார்.

தற்போது **SIR** பணியில்
தன்னை பெருநேரமாக
ஈடுபடுத்தி
பொது இடங்களில்
சொற்பொழிவுகளுடன்
தனியாகவும்
விவரங்களை
புரியும் வண்ணம்
விளக்கி வருகிறார்.

பொறுமையுடன்
தான் ஈடுபடும் செயல்களில்
தன்னை அர்ப்பணித்து
நல் பணி செய்பவரை
பாராட்டி வாழ்த்துவோம்.

ஒரு வழக்குரைஞராக
பயிற்சி எடுத்து வரும் இவர்
வழக்கறிஞராக சிறக்க
அருளாளன் வல்ல ரஹ்மான்
அருள் புரிவானாக.

பொது சேவை என்பது
இரக்கம் உடையவர்
மனதில் ஏற்பட்டு
பரந்து விரிவது...
இந்த மொழி
பாஸித்துக்கு
ரொம்பவே பொருந்தும்.

**- கவி.கவிஞர் காஜா முகைதீன்**

# வரலாற்றில் பாபரி மஸ்ஜித் பாசிசம்



இந்தியாவின் வரலாற்றில் ஆங்கிலேயர்களுக்கு அடுத்தாற்போல் அநியாயங்களை முஸ்லிம்கள்மேல் கட்டவிழ்த்துவிட்டவர்கள் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள். ஆங்கிலேயர்களுக்கு எட்டு மன்னிப்புக் கடிதங்கள் எழுதியவர்கள். முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் செய்யும்போது இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு அடிவருடி நின்று ஆங்கிலேயர்களுக்கு ஆள்காட்டி வேலை செய்தார்கள், ஏவல் செய்தார்கள்.

சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்பதில் மிகவும் உறுதியாக நின்றார்கள். 1920 முதலே இந்திய பெருநிலத்தைப் பிரித்தாக வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்தார்கள்.

விடுதலை கிடைத்தவுடன் 1944 டிசம்பர் 22/23இல் பாபரி மஸ்ஜித்-க்குள் சிலைகளை வைத்தவர்கள், காந்தியைக் கொன்றவர்கள், காந்தியைக் கொலை செய்த அதே கும்பல்தான் பாபரி மஸ்ஜித்குள் சிலையையும் வைத்தது.

இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர்களை விரட்டியது ஒரு வரலாற்றுத் திருப்புமுனை என்றால், பாபரி மஸ்ஜித்-க்குள் சிலையை வைத்து, இன்னொரு திருப்புமுனை. ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு வெளியேறி விடுவார்கள் என்பதைத் தெரிந்தவுடன், பல்வேறு இந்துத்துவ பாசிச அமைப்புகளில் இருந்தவர்களும், காங்கிரஸ்-இல் இணைந்தார்கள். பலர், காங்கிரஸ் கட்சியின் முக்கியமான பொறுப்புகளைப் பிடித்துக்கொண்டார்கள்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர்களாகவும் ஆனார்கள். விரிவான தகவல்களுக்கு “தேசப் பிரிவனைக்கு யார் காரணம்?” வேர்கள் பதிப்பகம்.

காந்திஜியை கொலை செய்தார்கள். ஜவஹர்லால் அவர்களைத் தொடர்ந்து வசைபாடினார்கள். அவர்களைவழிமறித்தார்கள்.

ஜவஹர்லால் நேரு அவர்களின் தந்தை மோதிலால் நேரு அவர்கள், இந்த இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் பிர்லாவைக் கையிலே போட்டுக்கொண்டு இந்து முஸ்லிம் பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றார்கள். இது எதிர்கால இந்தியாவிற்கு ஆபத்துகளை விளைக்கும் என



vaigarai velicham official

தன் மகனை - (பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை எச்சரித்தார்கள்.) ஆனால் நேருஜி அவர்களால் அவர்களை, அதாவது காங்கிரஸ்-க்குள் ஊடுருவிய இந்துத்துவ பாசிஸ்ட்டுகளை எதுவும் செய்திட இயலவில்லை.

நேருவின் அமைச்சரவையில் இடம்பெற்ற சர்தார் வல்லபாய் பட்டேல் ஓர் முஸ்லிம் வெறுப்பு சனாதனவாதி. அவர் நேருவின் கட்டளைகளை மதிப்பதே இல்லை.

பாபரி மஸ்ஜித்-இல் சிலைகளை வைத்தது ஒரு பெரும் குற்றம். அதில் FIR முதல் தகவல் அறிக்கையும் பதியப்பட்டுள்ளது என்பதை அறிந்தும், உள்துறை நிர்வாகம் நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.


செய்தி அறிந்த நேரு சிலைகளை அப்புறப் படுத்திவிட்டு மஸ்ஜித்-ஐ மீண்டும் இயங்க விடுங்கள் என ஆணையிட்டார். அந்த ஆணையும் செயல்படவில்லை.

நானே அயோத்தி வருகின்றேன் என்றால் சூழ்நிலை சரியில்லை, நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன என சர்தார் பட்டேல் தட்டிக்கழித்தார்.

சிலை வைத்த வழக்கை விசாரித்த கே.கே.கே. நாயருக்கு பெரும் பதவியையும், பெரும் நிலப் பரப்பையும் அன்றைய உத்தரப்பிரதேச நிர்வாகம் வழங்கிற்று. அதனால் வழக்கை தடம்பிறழச் செய்தார். பின்னர் பெரும் பதவியையும் பணத்தையும் பெற்றார். அவரோடு சேர்த்து அவருடைய மனைவிக்கும் வெகுமானங்கள் வழங்கப்பட்டன.

இதே அணுகுமுறைதான், பாபரி மஸ்ஜித்-இன் இறுதித் தீர்ப்பில், தீர்ப்பளித்த இந்தியாவின் தலைமை நீதிபதியின் விவகாரத்திலும் நடந்தது. முதன் முதலில் ரஞ்சன் கோகைக்கு பாலியல் வன்கொடுமை வழக்கிலிருந்து விடுதலை, அடுத்து நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவி, அதே போன்றதொரு பதவி அவருடைய மனைவிக்கு மாநில அளவில் வழங்கப்பட்டது.

இப்போது நம் நாட்டு மக்களும் உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கும் தலைவர்களும், பாபரி மஸ்ஜித் விவகாரம் முஸ்லிம்களுக்குத் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதி என்பதை அறிந்து உரக்க முழங்கி வருகின்றார்கள். இதை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் மக்கள் கருத்தை உருவாக்கிட.


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

“ஹஜ்“ பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குமு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887




# பாபரி மஸ்ஜித் பற்றி நியூயார்க் மேயர் ஷேஹரான் மம்தானி

உலகின் மிகவும் முக்கியமான நகரங்களில் ஒன்று நியூயார்க். அமெரிக்காவின் அதிமுக்கியமான நகரம்.

இதன் மேயராக அண்மையில் அமோக மக்கள் பலத்துடன் வெற்றி பெற்றார், ஷேஹரான் மம்தானி. வயது 34. இந்திய வம்சாவளியைக் கொண்டவர். இந்தியாவில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இவருடைய பெற்றோர்கள்.

இவரோடு இன்னும் 42 முஸ்லிம்கள் அமெரிக்காவின் அதிகாரப் பீடங்களில் அமர்ந்தார்கள். அத்தனையும் நவம்பர் 2025ஆம் ஆண்டில்.

அவரோடு, அமெரிக்காவின் இன்னொரு மாநிலமான வெர்ஜீனியாவில் துணை ஆளுநராக வென்றவர். காஸாலா ஹஸ்மி என்ற நங்கைநல்லால் இந்தியாவில் ஹைதராபாத்-ஐ வம்சாவளியாகக் கொண்டவர்.

இந்த வெற்றிகள் எல்லாம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்-இன் குடியரசு கட்சிக்கு எதிரானது. குடியரசு கட்சியின் எதிர்கட்சி, ஜனநாயக கட்சி, அதனைச் சார்ந்தவர்கள் இவர்கள்.

இதனால், இந்த வெற்றிகள் உலக அரங்கில், அமெரிக்க அதிபர் டிரம்புக்கு எதிரான வெற்றிகளாகவே பார்க்கப்படுகின்றது.

தேர்தலின்போதும், தேர்தலுக்குப் பின்னும் டிரம்ப் கொட்டிய வெறுப்பால் மம்தானியின் வெற்றி. இன்னும் உலக மக்களின் கருத்தை அதிகமாகக் கவர்ந்து வருகின்றது.

இந்த வயதில் அவர் பாபரி மஸ்ஜித் பற்றி கூறிய கருத்துக்கள் உலக மக்களின் கருத்தை பாபரி மஸ்ஜித்-இன் பக்கம் திருப்பியதில் ஆச்சர்யமில்லை.

### மம்தானியும் - பாபரி மஸ்ஜித்-ம்

நியூயார்க் மேயர் மம்தானியும் அவர்கள் உலக அளவில் பல்வேறு உலக நிகழ்வுகள் பற்றிய தன்னுடைய கருத்தை கூறி வருகின்றார்.

அதில் அவர் பாபரி மஸ்ஜித் குறித்தும் தன்னுடைய கருத்தை வெளியிட்டுள்ளார்.

400 ஆண்டுகால மஸ்ஜித் அநியாயமாக இடிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். பின்னர் கோயிலும் கட்டப்பட்டுள்ளது என வேதனைப் பட்டார்.

கோயில் கட்டியதை, ஒரு குரூரம் Atrocity எனவும் கூறியுள்ளார். அவர் தன்னுடைய டியூட்டர் பக்கத்தில் 2020இல் இது குறித்து ஒரு தனி பதிவையே வெளியிட்டிருந்தார். அதில் இந்துத்துவ தீவிரவாதிகள் பாபரி மஸ்ஜித் இடிப்பு என்ற அட்டூழியத்திற்கு நியூயார்க்கில்


vaigarai velicham official

விழா எடுக்க முயற்சி செய்கின்றார்கள். அதை (ஆடம்ஸ்) அப்போதை நியூயார்க் மேயர் அனுமதிப்பாரா? எனக் கேட்டிருந்தார்.

2020இலும் 2024இலும் நியூயார்க் பெருநகரில் நடைபெற்ற "ராம் மந்திர்" எதிர்ப்பு ஊர்வலங்களில் கண்டன நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதோடு அவற்றில் தனியாக உரையும் ஆற்றினார்.

இந்தக் கண்டன நிகழ்ச்சி நியூயார்க்கின் கீர்த்திமிக்க "Time Squre" டைம்ஸ் ஸ்கொயிரில் நடைபெற்றது.

ஆகஸ்ட் 2024இல் India Day Parade என்ற இந்தியா நாள் அணிவகுப்பு ஒன்றில் கலந்து கொண்டார். அதில் ஒரு ரதம் ஊர்வலகமாக எடுத்து வரப்பட்டது. அதிலும் கலந்துகொண்டு உரையாற்றினார். அதில் ராம் மந்திர் - என்பது "வெறுப்பின் அடையாளம்" எனக் குறிப்பிட்டார். அதனை அகற்றிட வேண்டும். அதன்மூலம் இந்தியாவின் கீர்த்தியைக் காப்பாற்றிட வேண்டும் என்றார்.

தன்னுடைய இன்னொரு பதிவில் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் பாரதீய ஜனதா கட்சி, இந்தியாவின் பன்முகத்தன்மையை அழித்து வருகின்றது என ஆதங்கப்பட்டார்.

தீபாவளி உரை ஒன்றில் - திரு மோடி அவர்கள் குஜராத் கூட்டுப்படுகொலை, பாபரி மஸ்ஜித் இடிப்பு ஆகியவற்றிற்கு காரணமானவர். அதனால் அவர் - மோதியை ஒரு "போர் கிரிமினல்" என்றார்.

ஆதாரம் Wion Article Edited by Vinod Janardhanan, Published, Nov.5, 2025

இவையெல்லாம் ஒன்றை எடுத்துக்காட்டு கின்றன. அது, "பாபரி மஸ்ஜித் இடிப்பு" என்ப திலும் "கிராம் மந்திர்" என்பதும் அநியாயங்கள் என்பதும் இந்தியாவில் மட்டுமல்ல உலக அரங்கிலும் வலுவாகப் பேசப்பட்டு வரும் ஒன்று. வளர்ச்சி பெற்ற நாடு வல்லரசு என்றெல்லாம் உலக மக்களால் பார்க்கப்படும் அமெரிக்காவில் இந்த கருத்து பெரிதாகப் பேசப்பட்டு வருகின்றது, வெறுக்கப்படுகின்றது.

இனிவரும் நாள்களில் மம்தானி போன்ற வர்கள் அமெரிக்காவின் அதிபராக ஆகிடும் வாய்ப்புகள் அதிகம். ஆகவே உண்மைகள் இன்னும் உரக்க ஒலிக்கும். இந்தியாவில் வளரும் இளைய தலைமுறையினர் இந்துத்துவ கொள்கை யையும், பாரதீய ஜனதாவின் பாசிசத்தையும் நன்றாக அறிவர். ... பாபரி மஸ்ஜித்-இல் நீதி கிடைக்கும்.

# அதிராம்பட்டினம் மக்கள் வழக்கில் மதுரை உயர் நீதிமன்ற கிளை தீர்ப்பு

# 304 பேர் விடுதலை..!!



வழக்கறிஞர் கலந்தர் ஆசிக்

இஸ்லாமியர்களின் வீடுகளில் 'ரெய்டு' என்ற பெயரில் நடந்ததாக கூறப்படும் அத்துமீறல் நடவடிக்கைகளை கண்டித்து அதிராம் பட்டினத்தில் நடந்த மக்கள் திரள்போராட்டத்திற்கு பிறகு, அதில் கலந்து கொண்ட 304 பேரை காவல்துறை கைது செய்து வழக்குப் பதிவு செய்தது.அவ்வழக்கு மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் விசாரணைக்கு வந்தது. இன்றைய தீர்ப்பில், அரசியலமைப்பு வழங்கியுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியதை குற்றமாக கருத முடியாது என நீதிமன்றம் குறிப்பிடும் வகையில், வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 304 அதிரையர் களையும் விடுதலை செய்தது.

இந்த தீர்ப்பு அதிராம்பட்டினம் மற்றும் இஸ்லாமிய மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த வழக்கில் தொண்டியை சேர்ந்த வழக்கறிஞர் கலந்தர் ஆசிக் சிறப்பாக வாதாடி தீர்ப்பை பெற்று கொடுத்தார்.

# பெரும்பான்மை இந்து மக்களின் மனதில் நஞ்சை விதைத்து ஆட்சி அதிகாரத்தில் அமர ஆர்.எஸ்.எஸ் அடிவருடிகள் செய்த பொய் அவதூறு

**2006 குண்டு வெடிப்பு -**
முதலில் முஸ்லீம் மேல் பழி,
முடிவில் சங்கிகள் (VHP) கைவரிசை என்று தெரிய வந்தது.

**மாலேகான் 2006 மற்றும் 2008 குண்டு வெடிப்புகள் -**
முதலில் முஸ்லீம் மேல் பழி,
முடிவில் சங்கிகள் (பிரக்யா தாக்குர், பிரசாத் புரோகித்) மாட்டினார்கள்,

**கேரளா 2017 கண்ணூர் குண்டு வெடிப்பு -**
முதலில் கம்யூனிஸ்ட் மேல் பழி, முடிவில் சங்கிகள் (பாஜக) தாங்களே போட்டு கொண்ட பாம் என்று தெரிய வந்தது.

**கேரளா 2021 திருச்சூர் குண்டு வெடிப்பு -**
முதலில் கம்யூனிஸ்ட் மேல் பழி,
முடிவில் சங்கிகள் (RSS) மாட்டினார்கள்

**ஆசானால், வங்காளம் - 2017 குண்டு வெடிப்பு -**
முதலில் திரிணமூல் மேல் பழி,
முடிவில் மாட்டியது சங்கிகள் (RSS).

**ராணிகஞ், வங்காளம் - 2018 குண்டு வெடிப்பு -**
முதலில் திரிணமூல் மேல் பழி,
முடிவில் மாட்டியது சங்கிகள் (பாஜக)


**காஞ்சிபுரம் 2013 பெட்ரோல் குண்டு வெடிப்பு -**
முதலில் முஸ்லீம் மீது பழி, முடிவில் மாட்டியது சங்கி ராமநாதன், தன் சொந்த வீட்டிலேயே பாம் போட்டது தெரிந்தது.

**சென்னை 2024 கிண்டி கவர்னர் மாளிகை பெட்ரோல் குண்டு வீச்சு**
முதலில் திமுக மீது பழி, முடிவில் மாட்டியது சங்கி கருக்கா வினோத். (ஜாமீன் எடுத்தது பாஜக வக்கீல்)

**சின்னியம்பாளையம் 2025 மாரியம்மன் கோவில் சிலை உடைப்பு,**
இஸ்லாமியர், தி.க மீது பழி,
முடிவில் அந்த வேலையை செய்தது பீகார் மாநிலத்தை சேர்ந்தவர்.

**ஜூன் 2025 திருப்பூர் இந்து மக்கள் கட்சி நபர் மீது எதிர்கட்சிகள் கத்தியால் காயப்படுத்தியதாக புகார்.**
போலீஸ் விசாரணையில் இது பொய், தான் கட்சியில் பிரபலம் ஆக அவரே செய்த நாடகம் என்று கண்டுபிடிப்பு.

இப்போ தெரிகிறதா ரவுடிகளை ஏன் பா.ஜ.க ஏன் ஆதரிக்கிறது என்று!!!





vaigarai velicham official




# சட்டம் நிரபராதிகளைத் துன்புறுத்த ஒரு கருவி அல்ல!

## உ.பி. மதமாற்ற தடை சட்டத்திற்கு எதிரான FIR-களை ரத்து செய்த உச்ச நீதிமன்றம்

**குற்றவியல்** சட்டம் என்பது குடிமக்களைத் துன்புறுத்துவதற்கான ஒரு கருவியாக இருக்க முடியாது என்று தெரிவித்த உச்ச நீதிமன்றம், வெள்ளிக்கிழமை (அக்டோபர் 17, 2025) உத்தரப்பிரதேசத்தின் ஃபதேபூர் மாவட்டத்தில், இந்துக்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு "அதிக அளவில் சட்டவிரோதமாக மதமாற்றம்" செய்த தாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாகப் பதிவு செய்யப்பட்ட பல முதல் தகவல் அறிக்கைகளை (FIRs) ரத்து செய்தது.

**ஏப்ரல் 2022 சம்பவம்**

ஏப்ரல் 15, 2022 அன்று, விஸ்வ ஹிந்து பரிஷத்தின் துணைத் தலைவர் ஹிமான்ஷு தீட்சித் என்பவரின் புகாரின் அடிப்படையில், ஃபதேபூர் மாவட்டத்தில் உள்ள கோட்வாலி காவல் நிலையத்தில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதில், பெயரிடப்பட்ட 35 பேர் மற்றும் 20 அறியப்படாத நபர்கள், ஒரு நிகழ்வில் 90 இந்துக்கள், இந்தியாவின் சுவிசேஷத் திருச்சபையில் (Evangelical Church of India) கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அந்த நாள் கிறிஸ்தவர்களுக்கு மத முக்கியத்துவம் வாய்ந்த "மௌண்டி வியாழன்" "Maundy Thursday" ஆக இருந்தது.

இந்துக்கள், பதவிகளையும், பணத்தையும் கொடுப்பதாக ஆசை வார்த்தைகள் மூலம் கவர்ந்திழுக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 307 (கொலை முயற்சி), 504 (சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே அவமதித்தல்) மற்றும் 386 (பறிப்பு) ஆகியவற்றின் கீழும், மதமாற்றத் தடைச் சட்டத்தின் கீழும் வழக்குகளை எதிர்கொண்டனர்.

**ஐந்து முதல் தகவல் அறிக்கைகளை ரத்து செய்த உச்ச நீதிமன்றம்**

உத்தரப்பிரதேச சட்டவிரோத மதமாற்றத் தடைச் சட்டம், 2021 (Uttar Pradesh Prohibition of Unlawful Conversion of Religion Act, 2021) செயல் படுத்தப்படுவது குறித்த ஒரு முக்கியமான தீர்ப்பில், நீதிபதிகள் ஜே.பி. பாரதிவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, உத்தரப்பிரதேசத்தின் சாம் ஹிக்கின் பாட்டம் வேளாண்மை, தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் (SHUATS) துணை வேந்தர் ராஜேந்திர பிஹாரி லால்



உட்படப் பல நபர்கள் மீது பதிவு செய்யப்பட்ட ஐந்து முதல் தகவல் அறிக்கைகளை ரத்து செய்தது.

நீதிபதி பாரதிவாலா எழுதிய 158 பக்கத் தீர்ப்பில், முதல் தகவல் அறிக்கைகள் சட்டச் சிக்கல்கள், நடைமுறைக் குறைபாடுகள் மற்றும் நம்பகமான ஆதாரங்கள் இல்லாததால் பலவீனமடைந்துள்ளன என்றும், மேலும் இத்தகைய வழக்குகளைத் தொடர்வது "நீதியின் கேலிக்கூத்தாக" அமையும் என்றும் தீர்ப்பளித்தார்.

**அப்பட்டமான குறைபாடுகள்**

"முற்றிலும் நம்பத்தகாத ஆதாரங்களின் அடிப்படையில், வழக்குத் தொடுக்கும் அமைப்புகள் தங்கள் விருப்பத்தின் பேரில் வழக்குகளைத் தொடர அனுமதிக்கும் வகையில், குற்றவியல் சட்டத்தை நிரபராதிகளைத் துன்புறுத்தும் கருவியாகப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது..." என்று அத்தீர்ப்பு குறிப்பிட்டதுடன், 2022-ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளில் ஒன்றில் இருந்த "அப்பட்டமான குறைபாடுகளை"க் குறிப் பிட்டது.

**முதல் தகவல் அறிக்கைகளில் ஒன்றின் உண்மைகளைக் குறிப்பிட்ட அத்தீர்ப்பு:**

"குறிப்பிட்ட ஆர்வமுள்ள நபர்களைக் கொண்டு, அதே சம்பவம் குறித்துக் குறிப்பிடத் தக்க தாமதத்திற்குப் பிறகு புகார்களைப் பதிவு செய்ய வைத்து, அதன்பிறகு பெரும்பாலும் அதே குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மீது மீண்டும் ஒரு புதிய விசாரணையைத் தொடங்கு வதன் மூலம், காவல்துறையால் சிக்கல்களைச் சமாளிக்க முடியாது."

மேலும், "அரசியலமைப்பின் சரத்து 32-ன் கீழ் (அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காக உச்ச நீதிமன்றத்தை அணுகும் உரிமை) தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, உச்ச நீதிமன்றம் இந்த முதல் தகவல் அறிக்கைகளை ரத்து செய்யக்கூடாது" என்ற வாதங்களை அந்த அமர்வு நிராகரித்துள்ளது..

**அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு**

"இந்த நீதிமன்றம், மிக உயர்ந்த அரசிய லமைப்பு நீதிமன்றமாக, அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு எதிரான நிவாரணங்களை வழங்குவதற்காக, அரசியலமைப்பின் பகுதி III-ல் சொல்லப்பட்டுள்ள அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அரசியலமைப்பு நிவாரணங் களுக்கான உரிமையைதான், அடிப்படை உரிமையாகப் பொறிக்கப்பட்டிருப்பது, இந்த நீதிமன்றம் அவற்றின் இறுதி உத்தரவாதத்தை வழங்கும் இடம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அரசியலமைப்பு இத்தகையப் பொறுப்பை இந்த நீதிமன்றத்தின் மீது சுமத்தியுள்ள நிலையில், ஒரு அடிப்படை உரிமையின் மீறல் எனக் குற்றம் சாட்டப்பட்டபோது, மனுதாரரை மாற்று நிவாரண வழியைப் பின்பற்றுமாறு இந்த நீதிமன்றம் வழிநடத்தத் தேவையில்லை," என்று கூறியதுடன்,

"அசாதாரண உண்மைகள் முதல் தகவல்

அறிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று கோருவதாகவும் குறிப்பிட்டது."

ஒவ்வொரு முதல் தகவல் அறிக்கையின் உண்மைகளையும் அது விரிவாக எடுத் துரைத்தது; மேலும், மதமாற்றம் செய்யப் பட்டதாகக் கூறப்படும் எந்தவொரு பாதிக்கப் பட்டவரும் காவல்துறையை அணுகிப் புகார் அளிக்கவில்லை என்பது உட்பட அப்பட்டமான குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியது.

**மனுக்களைப் பிரித்தல் மற்றும் இடைக்காலப் பாதுகாப்பு**

ஆயினும், ஆறு முதல் தகவல் அறிக்கைகளில் ஒன்றோடு தொடர்புடைய மனுக்களை, அது மற்ற குற்றச்சாட்டுகளைக் குறிப்பதால், மீண்டும் புதிதாக விசாரிப்பதற்காகப் பிரித்து உத்தரவிட்டது. மேலும், வழக்கை இறுதியாகத் தீர்க்கும் வரை, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட இடைக்காலப் பாதுகாப்பு தொடர வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியது.

மேலும்,

"ஏதேனும் ஒரு நீதிமன்றத்தின் செயல்முறை துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட வாய்ப்புள்ளது என்று உயர் நீதிமன்றம் நினைத்தாலோ அல்லது நீதியின் நோக்கம் பாதுகாக்கப்படாது என்றாலோ, அது தனது உள்ளார்ந்த அதிகாரங் களைப் பயன்படுத்தச் சட்டத்தின் கீழ் அதிகாரம் பெறுவது மட்டுமின்றி, கடமைப்பட்டும் உள்ளது..." என்றது.

**உ.பி. சட்டம்: சிறப்பு நடைமுறை விதிகள்**

இருப்பினும், உ.பி. சட்டம், ஒரு சிறப்புச் சட்டமாக இருப்பதால், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலிருந்து (CrPC) வேறுபட்ட சிறப்பு நடைமுறை விதிமுறைகளை அது பரிந்துரைத் துள்ளது என்று அமர்வு கூறியது.

"சட்டமன்றத்தின் நோக்கம், சட்டத்தின் தெளிவான எழுத்து வடிவத்திலிருந்து புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதும், தெளிவான விளக்கம் எந்த அபத்தத்திற்கும் வழிவகுக்க வில்லை அல்லது செயல்பட முடியாததாக இல்லை என்றால், நீதிமன்றங்கள் தெளிவான எழுத்து வடிவத்திலிருந்து வெளிப்படையாகத் தெரியும் பொருளிலிருந்து விலகிச் செல்லக் கூடாது என்பதும் சட்டத்தின் நிலைப்படுத்தப் பட்ட நிலை," என்று அது கூறியது.

**சாட்சிகளின் நம்பகத்தன்மையைக் கையாண்டபோது,**

"சாட்சிகள் யாரும் சட்டவிரோத மதமாற்றத் திற்கு ஆளாகவில்லை, அல்லது ஏப்ரல் 14, 2022 அன்று நடந்ததாகக் கூறப்படும் அதிக எண்ணிக்கையிலான மதமாற்ற நிகழ்வில் அவர்கள் அங்கு இருக்கவில்லை" என்று அது கூறியது.

**ஒரு தீர்ப்பைக் குறிப்பிட்டு,**

"அதே சம்பவத்திற்காகப் பல முதல் தகவல் அறிக்கைகள் இருப்பது, விசாரணை அதிகாரங் களைத் துஷ்பிரயோகம் செய்வதாக முத்திரை யிடுகிறது" என்று குறிப்பிட்டு ஒரு முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றம் ரத்து செய்தது.

அதே சம்பவம் தொடர்பாக மீண்டும் மீண்டும் முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்படுவது

"விசாரணைச் செயல்முறையின் நேர்மையைக் குலைக்கிறது மற்றும் குற்றம் சாட்டப்பட்ட வர்களைத் தேவையற்ற துன்புறுத்தலுக்கு உள்ளாக்குகிறது" என்றும் அமர்வு கூறியுள்ளது.

இந்த மனுக்கள், டிசம்பர் 2021 மற்றும் ஜனவரி 2023-க்கு இடையில் இந்தியத் தண்டனைச் சட்டம் (IPC) மற்றும் உ.பி. சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆறு முதல் தகவல் அறிக்கைகள் சம்பந்தப்பட்டவை.

SOURCE : THE HINDU - OCT 17, 2025

பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் தனது பாசிச அரசின் அதிகாரங்களை கொண்டு, தனது அடிமட்ட கிளை அமைப்புகளின் ரவுடித் தனங்களோடு எப்படியெல்லாம் "மதமாற்றம் இந்துக்களுக்கு ஒரு ஆபத்து" என்ற போக்கை இந்தியா முழுவதும் கட்டமைக்கிறார்கள், உண்மையில் இந்தியா போன்ற "வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட மக்களிடத்தில்" மதமாற்றம் எப்படி ஒற்றுமையின் அடையாளமாக இருக்கிறது என்பதை பற்றியெல்லாம், அடுத்த மாதத்திலிருந்து ஒரு தொடராக வெளியிட திட்டமிட்டுள்ளோம். இன்ஷாஅல்லாஹ் வாசகர்கள் இணைந்திருங்கள்..!

**- Adv. Jasmine Fathima.**

காஸா போர்..!

# இஸ்ரேலை விட்டு ஓடும் யூதர்கள்

**அக்டோபர்-7,2023 அன்று முதல் தொடங்கி அக்டோபர்-10,2025இல் முடிந்தது இப்போதைய காஸா போர்.**

பாலஸ்தீன மக்களுக்குச் சொந்தமான பூமியே மொத்த பாலஸ்தீனமும் : 1948இல் இரண்டாகப் பிளந்து இஸ்ரேலை உருவாக்கியது ஐக்கிய நாடுகள் சபை. அப்போதும் காஸா பாலஸ்தீன மக்களுக்கே தரப்பட்டது.

1967இல் நடந்த போரில், காஸாவை ஆக்கிரமித்தது இஸ்ரேல். 2005ஆம் ஆண்டு போராளிகளால் இஸ்ரேலியப் படைகள் விரட்டி அடிக்கப்பட்டன. 2006ஆம் ஆண்டு அங்குள்ள மக்கள் ஹமாஸ்-ஐ ஆட்சியாளர்களாக தேர்ந்தெடுத்தார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹமாஸை ஆட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டு, காஸாவை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திட வேண்டும் என இஸ்ரேல் பல்வேறு கெடுபிடிகளையும்சூழ்ச்சிகளையும்கட்டவிழ்த்துவிட்டது.

இளைஞர்களையும், பெண்களையும், மருத்துவர்களையும் குழந்தைகளையும் தொடர்ந்து கைது செய்து வந்தது. 15,000 மேற்பட்ட பாலஸ்தீன முஸ்லிம்கள் சிறைபிடிக் கப்பட்டார்கள்.

சிறைப்பட்டவர்கள் மீது எந்தக் குற்றச் சாட்டும் சுமத்தப்படவில்லை. இந்த நிலையிலேயே அவர்கள் 20 வருடம், 30 வருடம் இஸ்ரேலிய சிறைகளில் எந்த நீதிமன்ற விசாரணையுமின்றி சித்திரவதைகளைச் சந்தித்து வருகின்றார்கள்.



அவர்களைக் கொலை செய்ய, அதாவது கேள்விக் கணக்கில்லாமல் கொலை செய்யும் சட்டம் ஒன்றை, இஸ்ரேலின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிட நடவடிக்கைகளை மேற் கொண்டார் இஸ்ரேலின் பிரதமர் நெதன்யாஹு

இந்தச் சட்டம் வந்தால் பல ஆயிரம் பாலஸ்தீன முஸ்லிம் இளைஞர்களும் பெண் களும், குழந்தைகளும் கொலை செய்யப்பட இருந்தார்கள்.

இந்த நிலையில்தான் ஹமாஸ் என்ற இஸ்லாமிய இயக்கத்தின் இராணுவப் பிரிவு அல்காஸம், காஸாவுக்குப் பக்கத்திலுள்ள இஸ்ரேலின் பகுதிக்குள் புகுந்து 280 இஸ்ரேலி யர்களை அழைத்து வந்தார்கள். அழைத்து வரப்பட்ட - இந்த இஸ்ரேலியர்களை விடுதலை செய்திட வேண்டும் என்றால் இஸ்ரேலின் சிறைகளில் வாடும் பாலஸ்தீன முஸ்லிம்களை விடுதலை செய்ய வேண்டும் என்றொரு கோரிக்கையை வைத்தார்கள்.

இப்படித்தான், இஸ்ரேலின் சிறைகளில் வதைபடுபவர்களை விடுதலை செய்திட இயலும், உண்மையைச் சொன்னால் இது ஒன்றே வழி. இதற்கு முன்னாலும் பலமுறை இப்படி விடுதலை செய்திருக்கின்றார்கள் போராளிகள்.

இப்போது, காஸாவில் போராளிகளின் சார்பில் களத்தில் நிற்கும், போராளிகளில் பலர் இப்படி இஸ்ரேலின் சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள்தாம்.

அக்டோபர்-7,2023இல் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரை தொடங்கிய யஹ்யா சின்வர் அவர்களே 22 ஆண்டுகள் இஸ்ரேலின் சிறையில் இருந்தவர்தான். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சிறை கைதிகள் பரிமாற்றத்தில் வெளியே வந்தவர்கள்தாம். 2011ஆம் ஆண்டு அவர்களோடு 1026 பேர் வெளியே வந்தார்கள்.

இப்போதைய போர் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. இதில் 69,000 காஸாவாழ் மக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். அல்லாஹ் அவர்களின் தியாகத்தை பொருந்திக் கொள்வானாக!

ஆனால், இந்த ஷஹீதுகளின் சாதனைகள் மகத்தானவை. இஸ்ரேல் தோற்றுவிக்கப்பட்டு 78 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இப்போது இஸ்ரேலில் வாழ்ந்துகொண்டி ருக்கின்ற இப்போதைய தலைமுறையினர், இஸ்ரேல் தங்களுடைய பூர்வீக பூமி என்றே நம்பி வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய கல்விக் கூடங்களில், அப்படியே பாடங்கள் சொல்லித் தரப்பட்டன. அதற்காக தவ்ராத் என்ற பழைய ஏற்பாடும், பைபிள் என்ற புதிய ஏற்பாடும், மாற்றி அமைக்கப்பட்டன.

இப்படி பல்வேறு திரிபுகள், வரலாற்றுப் புனைவுகள் வழியாக, அந்த மக்கள் பாலஸ்தீன் தங்கள் பூர்வீக பூமி என நம்ப வைக்கப்பட்டார்கள். அத்தோடு தங்கள் பூர்வீக பூமியை சுற்றி இருக்கும் அரபுக்கள், பிடுங்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்றும் நம்ப வைக்கப்பட்டார்கள்.

இந்தப் போரில், அவர்கள் தாங்கள் பாலஸ்தீன மக்களுக்குச் சொந்தமான பூமியில் நாம் உலகெங்குமிருந்து, ஆசை வார்த்தைக் காட்டி, அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப் பட்டுள்ளோம் என்பதை உணர்ந்தார்கள். இது இஸ்லாமிய ஊடகங்களின் சாதனை.

ஐக்கிய நாடுகள் சபையே இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பு நாடு என அறிவித்தபின் எல்லாம் தெளிவாகிவிட்டது. 2024, ஜூலை 18ஆம் நாள் சர்வதேச நீதிமன்றமும் (ICJ) இதை உறுதி செய்தது.

இதன்விளைவாக முதலில், பெரும் முதலீட்டார்களெல்லாம் பாலஸ்தீனைவிட்டு வெளியேறிவிட்டார்கள். தற்காலிகமாக அல்ல, நிரந்தரமாக.

அதேபோல், உல்லாச வாழ்க்கையை விரும்பியவர்களும் இஸ்ரேலைவிட்டு வெளியேறிவிட்டார்கள் நிரந்தரமாக.

இப்போது பாமர மக்களும் வெளியேறி வருகின்றார்கள். இஸ்ரேலின் புள்ளி விபரத்துறை தரும் தகவலின் அடிப்படையில் 1,97,500 இஸ்ரேலியர்கள், இஸ்ரேலைவிட்டு வெளியேறி இருக்கின்றார்கள். - இப்படி வெளியேறுபவர்களில் 40% நாற்பது விழுக்





காடுகள் 18 முதல் 39 வயதுக்குட்பட்டவர்கள். இதனை இஸ்ரேலின் புள்ளி விவகாரத்துறை, இதை ஓர் அலை அல்ல, இஃதோர் சுனாமி என்று வர்ணிக்கின்றது. (Source : Immigration and obsorption committee (of Israel). இதில் முன்னர் வெளியேறிய முதலீட்டாளர்கள், சொகுசு விரும்பிகள் அடங்க மாட்டார்கள்.

இப்போது இஸ்ரேலில் இருக்கும் மக்களில் பெரும்பாலோர், இஸ்ரேல் பாதுகாப்பான நாடல்ல, எங்களை இதர நாடுகளிலிருந்து அழைத்து வரும்போது பாதுகாப்பையும், சிறந்த வாழ்க்கையையும் வாக்களித்துத்தான் அழைத்து வந்தார்கள். ஆனால் பாதுகாப்புமில்லை, எங்களுக்கு எதிர்காலமும் இல்லை என உணருகின்றார்கள் என்கின்றது அறிக்கை.

இந்த அறிக்கை அக்டோபர் 25இல் இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது.

இஸ்ரேலின் இளைஞர்கள் கூறுகின்றார்கள்:

இந்த மொத்த உலகமும், எங்களுக்கு எதிரானதாகவே திரண்டுவிட்டது.

இஸ்ரேலைவிட்டு வெளியேறும், இளைஞர் களில் பலர் இப்படிப் பேசுகின்றனர்.

பாலஸ்தீனத்தில் ஒரு பகுதியில் யூதர்களுக் கென ஒரு நாட்டை ஏற்படுத்தித் தருவோம் என 1917இல் வாக்களித்த ஆங்கில நாடு (பிரிட்டன்) வரலாற்றில் முதல் குற்றவாளி. 1948இல் பாலஸ்தீனை இரண்டாகப் பிளந்து, யூதர்களுக்கென ஒரு நாட்டை உருவாக்கிய ஐக்கிய நாடுகள் சபை இரண்டாவது குற்றவாளி.

காலமெல்லாம் பணமும், ஆயுதமும் தந்து இஸ்ரேலை, அதன் ஆக்கிரமிப்பையும் காப்பாற்றி வந்த அமெரிக்கா மூன்றாவது குற்றவாளி. இவற்றால் பெரிய இழப்பிற்கு ஆளானவர்கள் நாங்கள்தாம்.

நாங்கள், இஸ்ரேலில் வாழ்ந்த காலமெல்லாம், நாங்கள் அடுத்தவர்களின் நிலத்தின் தண்ணீரைக் குடித்தோம், அடுத்தவர்களின் நிலத்தைப் பயிரிட்டோம். அடுத்தவர்களின் நிலத்தில் விளைந்தவற்றை உண்டோம். அடுத்தவர்களின் நிலத்தில், வீடுகட்டி வாழ்ந்தோம். இஃதோர் அண்டிப் பிழைக்கும் அர்ப்பத்தனம். இனி வேண்டாம். இந்த இஸ்ரேல் என்று வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த சிந்தனை மாற்றம் பாலஸ்தீன ஷஹீதுகள் பெற்ற மகத்தான வெற்றி! அல்ஹம்துலில்லாஹ்.

இப்போது இஸ்ரேலில் வாழ்ந்து கொண்டி ருக்கும் இளைஞர்களின் மனநிலையை - இன்னொரு ஆய்வறிக்கை இப்படி வருணிக் கின்றது. (ஆதாரம் கீழே தரப்பட்டுள்ளது)

இப்போது இஸ்ரேலில் வாழ்ந்துகொண்டி ருக்கும் எஞ்சியுள்ள இளைஞர்களின் சிந்தனைகள் இப்படி ஓடிக்கொண்டிருக்கின்றன.

1. இஸ்ரேலின் எந்தப் பகுதியிலும், பாதுகாப்பு இல்லை. ஆகவே நல்வாழ்வும், நல்ல எதிர்காலமும் வாய்க்கப்பெறும் நாடுகளுக்கு இடம் பெயர்ந்திடலாம்.

2. உலக மக்கள் அனைவரும் இஸ்ரவேலர்

களையும், யூதர்களையும் வெறுக்கின்றார்கள். அதனால் ஓர் புகலிடத்தைக் கண்டுபிடிக்க இயலவில்லை. "இந்தப் புலம்பல்களால் மன நிலை பாதிக்கப்பட்டவர்களாக" மந்தநிலை மாத்திரைகளை விழுங்கி வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

3. இனி இஸ்ரேலின் எந்த அரசும், நம்மைக் காப்பாற்றிடாது என நம்புகின்றார்கள். இதனால் விரக்தி அடைந்து நிற்கின்றார்கள்.

4. இஸ்ரேலிலிருந்து வெளிநாடுகளுக்கு தற்காலிகமாக வியாபாரம் போன்றவற்றிற்கு போனவர்கள்கூட திரும்பவில்லை. அந்தந்த நாடுகளிலேயே குடியமர முயற்சி செய்கின்றார்கள்.

5. இஸ்ரேலின் புதிய தலைமுறையினர் ஐரோப்பிய நாடுகளிலும், வட அமெரிக்காவிலும் குடிபெயர்ந்து, குடியமர திட்டமிடுகின்றார்கள். இஸ்ரேலில் தங்களுக்கு எதிர்காலமில்லை என உறுதியாக நம்புகிறார்கள்.

(Source: Independent Demographic and Political Risk assessment - The Economic Intelligence Unit)

## யூத பழமைவாதிகள்

இவர்களை ஹெரிடிம் யூதர்கள் என அழைக்கின்றார்கள். இவர்கள்தாம் உலகில் யூத மதகுருக்கள் - (ராபிஸ்) என அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள், யூத வேதங்களின்படி யூதர்களுக்கு என்றொரு நாடு கூடாது. இறுதியாக வரும் மீட்பர் வழியாகத்தான் அதுவரும்.

இஸ்ரேல் என்பது ஜியோனிசம் என்ற யூதத் தீவிரவாதத்தால் உருவான நாடு. ஜியோனிசம் 150 ஆண்டுகளே பழைமையானது. யூத மதம் 4000 ஆண்டுகள் பழைமையானது. அதனால் இஸ்ரேலுக்கும் யூத மதத்திற்கும் சம்மந்தமில்லை என்கின்றார்கள்.

இப்படிக் கூறிடும், இவர்கள் இஸ்ரேலின் இராணுவத்தில் சேர மறுத்துவிட்டார்கள். இஸ்ரேலிய இராணுவத்தில் சேர்ந்திட அழைத்த போது இஸ்ரேலிய இராணுவத்தில் சேருவதைவிட மரணமே சிறந்தது என அறிவித்துவிட்டார்கள்.

ஆக, 1886களில் தொடங்கிய "இஸ்ரேல்" என்ற ஜியோனிசத் தத்துவம் 2025இல் வீழ்ந்தது. இஸ்லாத்தை முன் வைத்துப் போராடியவர்களால். அதைத்தான் டேவிட் செல்ஃபோன் என்ற ஆங்கில வரலாற்றாசிரியர் "ஈமானின் பலம்" The Power of Faith என்கின்றார்.

## மனித வளத்தை இழந்த இஸ்ரேல்

இதனை நாம் மேலே குறிப்பிட்ட இஸ்ரேலிய அறிக்கை இப்படிக் குறிப்பிடுகின்றது.

Longest even loss of Human Capital in such a short period அதாவது இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய மனித வளத்தை இஸ்ரேல் இழந்துள்ளது.

இஸ்ரேல், தன் சொந்த மனித ஆற்றலை இழந்தது என்பது மட்டுமல்ல, இனி உலகின் எந்தப் பகுதியிலிருந்தும், மனிதவளம் என்ற திறமையாளர்கள் - இஸ்ரேலுக்கு வரமாட்டார்கள். இஸ்ரேல் மக்களில் நல்ல வளமான எதிர்பார்ப்பவர்கள், உலகின் வேறு எந்தப் பகுதியில் தங்களுக்குப் பாதுகாப்பானதோர் - வாழ்க்கை கிடைக்கும் எனத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

இப்போது உலகில் வளர்ந்து வளம், யூத இளைஞர்கள், ஐரோப்பாவில் அல்லது வட அமெரிக்காவில் தங்கள் எதிர்காலத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இஸ்ரேல் நமது நாடு என்ற எண்ணத்தை அறவே நம்பிடவில்லை. இப்போது இஸ்ரேலில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், அடுத்தவர்களின் பூமியை ஆக்கிரமித்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என நம்புகின்றார்கள். இதைத்தான் மூளை பலத்தின் வறட்சி என்கின்றார்கள்.

படித்த இந்த யூத இளைஞர்களின் எண்ணெய் ஆலைகள் இஸ்ரேலை மனித வளத்தில் வறண்ட பூமியாக மாற்றிவிடும்.

## வீடுகள் வேண்டாம் - இஸ்ரேலில் வாழும் ஜியோனிஸ யூதர்கள்

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் யூதர்களுக்கு நோகாத வாழ்வு, போகாத சுகம், பெருவாழ்வு அனைத்தையும், வாக்களித்துத்தான் இஸ்ரேலுக்கு அழைத்து வந்தார்கள். வந்தவுடன்

அவர்களுக்கு எல்லா வசதிகளும் நிறைந்த வீடுகள் கிடைத்தன. அவர்கள் தங்களுக்கென ஒரு வேலை அல்லது தொழில் இவற்றில் ஏதாவது ஒன்றை பெற்றுக்கொள்ளும் வரை மாத ஊதியம் இவையும் வழங்கப்பெற்றன.

இப்போது இரண்டாண்டுகளாக நடந்த போரில், இஸ்ரேலால் அவர்களுக்கு பாது காப்பை வழங்கிட இயலவில்லை. ஏமன், ஹுத்தீஸ் உடைய தொடர்தாக்குதலால் அவர்களால் இந்த வீடுகளில் ஒய்யாரமாக வாழ்ந்திட இயலவில்லை.

பதுங்கு குழிகளில்தாம் அவர்கள் வாழ்ந்திட வேண்டிய நிலை. இந்தப் பதுங்கு குழிகள் அநாதை இல்லங்களைப் போல் காட்சி தந்தன.

ஹுத்திஸ் சொல்லித்தான் தாக்கினார்கள். நீங்கள் காஸாவுக்கு உணவுப் பொருள்களை தடையின்றி வழங்கும் வரை நீங்கள் பதுங்கு குழிகளில்தான் வாழ்ந்திட வேண்டியது வரும் என்ற நிலை.

ஹுத்திஸ் உடை தாக்குதலால் பெரும்பாலும் இரவு நேரங்களிலேதான் நடந்தது. இதனால் இஸ்ரேல் வாழ் மக்கள், இரவெல்லாம் பதுங்கு குழிகளை நோக்கிப் பாய்ந்திட வேண்டிய திருந்தது. ஒரே இரவில், 20 முறை அவர்கள் பதுங்கு நோக்கிப் பாய்ந்தார்கள்.

ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய போரில் ஈரான், தொடர்ந்து துல்லிய தாக்குதல்களை நடத்தியது. (13-6-2025 முதல் 24-6-2025 வரை) இதில் இஸ்ரேல் ஓர் காஸாவாகவே மாறியது. மக்களுக்கு உணவு வழங்கிடும் மையங்களையே தொடங்கிட வேண்டிய நிலை வந்தது.

இதில் பல இஸ்ரேலியர்கள், தங்கள் வீடுகளை இழந்தார்கள்.

ஈரானின் ஏமன் நாட்டு தாக்குதல்கள் இவை இஸ்ரேலியர்களை பீதிவயப்படுத்தியது மட்டுமல்ல, அவர்கள் இஸ்ரேலின் இராணுவ பலம், இஸ்ரேலின் வான்வெளி தாக்குதல் தடைகள், அனைத்திலும், வைத்திருந்த நம்பிக்கையை முற்றாதக இழந்தார்கள். இனி இஸ்ரேல் எந்த நேரமும் அழிக்கப்படலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

அக்டோபர்-10,2025 அன்று மதியம் 1.00 மணிக்கு காஸாவிலுள்ள போராளி குழுக்களுக்கு மிடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதும், உடனேயே இஸ்ரேலின், எதிர்கட்சித் தலைவர் யார்லேபிட் இப்படிக் கூறினார்.

"போர் நிறுத்தம், 2 வருட தூக்கமற்ற இரவுகளை முடிவுக்கு கொண்டுவந்தது."

அதேபோல லெபனான் ஹிஸ்புல்லாவின் தொடர் தாக்குதல்கள் Northern Israel - வடக்கு இஸ்ரேலிலிருந்து 4,00,000 வந்தேறிகளை அங்கிருந்து விரட்டியது அவர்கள் இஸ்ரேலின் தலைநகர் டெல்அவிவ் பக்கத்தில் வந்து குடியமர்ந்தார்கள். இவர்களை இதர வந்தேறிகள், அதாவது டெல்அவிவ் பக்கத்தில் வாழ்ந்த இஸ்ரேலியர்கள் Refugees from North என்ற வடக்கிலிருந்து வந்த அகதிகள் என அழைத் தார்கள்.

இஸ்ரேலியர்களே - வந்தேறிகள். அவர்கள் இன்னொரு பக்கத்திலிருந்து வந்தவர்களை அதிகள் என அழைப்பது வரலாற்றில் முதல் முறை. இந்த வட அகதிகளுக்கு அனைத்தையும் இஸ்ரேலிய அரசு வாக்களித்தது. ஆனாலும் அவர்கள் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார்கள். போர் நிறுத்தத்திற்குப் பின்பும் போகவில்லை. அந்த அளவுக்குப் பீதி வயப்பட்டு நிற்கின்றார்கள்.

மொத்தத்தில் இஸ்ரேலியர்கள், இஸ்ரேலில் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்தார்கள்.

இனி இஸ்ரேல், தங்களைப் பாதுகாத்துக் கொள்ளாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். ஆதலால், தங்களுக்கு இஸ்ரேலிய அரசு இலவசமாகத் தந்த சொகுசு வீடுகளை வேண்டாம் என எழுதித் தந்துவிட்டார்கள்.

இப்படி வேண்டாம் எனச் சொல்லுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவர்கள்திட்டமாக இஸ்ரேலை விட்டு வெளியேறத் துணிந்துவிட்டார்கள். எந்த நாட்டுக்குப் போவது என்பதே இப்போது பிரச்சனை.

**கிரீஸ்**

கிரீஸ் என்ற நாட்டுக்கு சுற்றுப் பயணம்



போவதைப் போல், 1000 இஸ்ரேலியர்கள் சென்றுள்ளார்கள். அவர்களைக் கப்பலிலிருந்து இறங்கிடவே இல்லை. அதற்கு முக்கிய காரணம், அவர்கள் கிரீஸ் நாட்டிலேயே தங்கி விடுவார்களோ என்ற அச்சம்தான். இந்த அச்சத்திற்கும் காரணமில்லாமல் இல்லை.

கிரீஸ் நாட்டுக்கு வந்த இஸ்ரேலியர்கள், தங்கள் ஹோட்டல் அறைகளை, பல மாதங் களுக்கு பதிவு செய்திருந்தார்கள். உல்லாசப் பயணிகளுக்கு வாடகைக்கு விடும் வாடகை வீடுகளே பல வருடங்களுக்கு வாடகை அமர்த்தி இருந்தார்கள்.

இவையெல்லாம் அவர்கள் நிரந்தமரமாக தங்கிடும் இலக்கோடுதான். கிரீஸ் நாட்டுக்கு வந்திருக்கின்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்தின. ஆதலால் அங்குள்ள அரசியல் கட்சிகளும், யூதர்களை உள்ளே அனுமதிக்கும்போது பயங்கர நிபந்தனைகளோடுதான் அனுமதிக்க வேண்டும் என குரலெழுப்பத் தொடங்கிவிட்டார்கள்.

ஆக அங்கேயும் யூதர்கள் நிம்மதியாக இல்லை.



## இலவச வீடுகள் வேண்டாம் நாங்கள் போகின்றோம்

யூதர்களை உலகெங்குமிருந்து இஸ்ரேலுக்கு அழைத்துவரும்போது வானத்தையும், பூமியையும் வாக்களித்துத்தான் வரவழைத்தார்கள்.

அதில் அவர்களுக்கு வதியுமிடம், இலவசம் வாடகை கூட இல்லை. அத்தோடு மாத செலவுக்கு ஒரு நபருக்கு இத்தனை டாலர்கள் எனத் தந்தார்கள். இந்த இலவசங்களை நீண்ட காலம் நீடிக்கும். வாழ்க்கையில் அவர்கள் தன்னிறைவு பெற்றவுடன், வாடகை தரலாம் அல்லது மலிவு விலையில் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். அத்தனையும் ஆக்கிரமிக்கப்பட்ட பூமியில்தான்.

இப்போது யூதர்கள் இந்த இலவச வீடுகள் எங்களுக்கு வேண்டாம் என எழுதித் தந்து விட்டார்கள். காரணம் நாங்கள் இஸ்ரேலி லிருந்து நிரந்தரமாக வெளியேறுகின்றோம் எனக் காரணம் சொல்லி இருக்கின்றார்கள். இப்படி எழுதி தந்தவர்கள் ஒரு லட்சம் பேர் எனக் கணக்கிடப்படுகின்றது.

## ஈரானின் தாக்குதல்

ஈரானை இஸ்ரேல் ஜூன் 13,2025 அன்று தாக்கியது. பல பயங்கர சேதாரங்களை ஏற்படுத்தி யது. பல விஞ்ஞானிகளை கொலை செய்தது. ஆனால் ஈரான் தந்த அடியிலிருந்து மீண்டுவிட இயலவில்லை.

ஈரான் தந்த துல்லியமான அடிக்குள் ஒன்று, இஸ்ரேலின் இரகசிய இராணுவத்தளங்களைத் தாக்கியதாகும். இஸ்ரேலின் இராணுவத் தளங்களுள் பல, டெல் அவீவின் அடர்த்தியான குடியிருப்புகளின் கீழ் இருந்தனவாகும். இந்த குடியிருப்புகளை ஈரான் தாக்கியது. இதனால் பலநூறு வீடுகள் இடிந்து வீழ்ந்தன.

ஒரு பயங்கர பதற்றம், பாதுகாப்பற்ற நிலை தோன்றியது. இதனால் வீதிக்கு வந்த மக்கள் ஈரானிடம் மன்னிப்புக் கேட்டுக் கதறினார்கள். இதனை உலகெங்குமுள்ள ஊடகங்கள் அப்போது உலக மக்களுக்கு காட்டின.

ஈரானின் 12 நாள் தாக்குதலின் விளைவாக ஒரு லட்சம் பேர் இஸ்ரேலை விட்டு

வெளியேறிட முயற்சி செய்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் வெளியேறிவிட்டதாகச் இஸ்ரேலிய பத்திரிகைகள் ஆதாரமாகக் காட்டி மிடில் ஈஸ்ட் மானிட்டர் என்ற பத்திரிகை செய்திகளை வெளியிட்டுள்ளது.

(MEM - 25//11/2025)

### இரண்டு லட்சம் யூதர்கள்?

இரண்டு லட்சம் யூதர்கள், ஜெர்மனி, போலண்டு, ஸ்பெயின், போர்ச்சுகில் ஆகிய நாடுகளிலும் இன்னும் பல ஐரோப்பிய நாடுகளிலும், இரண்டாம் நிலை குடிமக்களாக ஆகி, அந்த நாடுகளில் (Pass Port) பாஸ்போர்ட் என்ற கடவுச் சீட்டுகளுக்கு மனு போட்டிருக்கின்றார்கள்.

இப்படி இஸ்ரேலிலிருந்து யூதர்கள் மீண்டும் உலகெங்கும் அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆக்கிரமிப்பு, கொலைகள், இவை ஒன்றும் இஸ்ரேலுக்குப் பாதுகாப்புகளைத் தந்திட வில்லை. மீண்டும் The Exodus என்ற வெளியேற்றம் தொடங்கி இருக்கின்றது.

இஸ்ரேலுக்குள் வாழும் மக்களில் 20,000 பேர் மேலும் மனநிலை பாதிப்பிற்கு ஆளாகி உள்ளார்கள்.


இஸ்ரேல் தன்னுடைய நாட்டில் ஊடகங்களுக்கு மிகப்பெரிய வாய்பூட்டை போட்டுள்ளது. மிகச்சிறிய அளவில்தான் செய்திகள், அதாவது இஸ்ரேலுக்கு ஏற்பட்ட இழப்புகள் வெளிவந்துள்ளது.

இனிவரும் நாள்களில்தான் இஸ்ரேலுக்கு ஏற்பட்ட முழு இழப்பும் தெரியவரும். அது உங்களுக்கும் கிடைக்கும். இன்ஷாஅல்லாஹ்.

**- MGM**

# கைது செய்யப்பட்டவருக்கு, அவர் புரிந்த மொழியில் கைது காரணம் தெரிவிக்கப்பட வேண்டும்:

**- உச்ச நீதிமன்றம்**



**சுருக்கம்: இந்தியா உச்ச நீதிமன்றம் ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளது. அதில் கூறப்பட்டதாவது:**

கைது செய்யப்பட்ட நபருக்கு, அவர் புரிந்து கொள்ளும் மொழியில் கைது காரணம் எழுதப்பட்ட வடிவில் வழங்கப்பட வேண்டும். இது எந்த குற்றமாக இருந்தாலும் அல்லது எந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டாலும் பொருந்தும்.

**முக்கிய அம்சங்கள்:**

தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட் தலைமையிலான அமர்வு (நீதிபதி பி.ஆர். கவாய் மற்றும் ஏ.ஜி. மசீஹ் உடன்) தீர்ப்பளித்தது.

கைது காரணம் எழுத்துப்பூர்வமாக ஒரு நியாயமான காலக்கெடுவுக்குள் (reasonable time) வழங்கப்பட வேண்டும்.

மேலும், கைது செய்யப்பட்ட நபரை நீதிபதியின் முன் ஆஜர் செய்யும் முன் குறைந்தபட்சம் இரண்டு மணி நேரத்திற்கு முன்பு அந்த தகவல் வழங்கப்பட வேண்டும்.

நபருக்கு தெரியாத மொழியில் கைது காரணம் சொல்லப்படுவது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 22வது பிரிவை மீறுவது என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இது மீறப்பட்டால், அந்த கைது மற்றும் ரிமாண்ட் (remand) சட்டப்படி தவறானதாகும்.

இதனால், அந்த நபரை விடுதலை செய்ய வேண்டும் என நீதிமன்றம் கூறியுள்ளது.

இந்த தீர்ப்பை நீதிபதி ஏ.ஜி. மசீஹ் வழங்கியுள்ளார்.

**முக்கிய நோக்கம்:**

அரசியலமைப்பு வழங்கிய உரிமை - ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் எதற்காக கைது செய்யப்பட்டார் என்பதை அவர் புரிந்து கொள்ளும் மொழியில் தெரிவிக்கப்பட வேண்டும். இது ஒரு அடிப்படை உரிமை (fundamental right).


vaigarai velicham official

# வக்பு திருத்த சட்டம்-2025




**இந்திய** நாடாளுமன்றத்தில் கடந்த 08.08.2024-ம் தேதி, வியாழக்கிழமை பா.ஜ.க. -வின் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜீ அவர்கள் சுமார் 40 - திருத்தங்களை மேற்கொண்டு தாக்கல் செய்த வக்பு திருத்த மசோதா -2024, இந்திய ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களும், இந்தியாவில் வாழும் அனைத்து இஸ்லாமிய மக்களின் போராட்டங்களையும், எதிர்ப்புகளையும் மீறி, கடந்த 08.04.2025 -ம் தேதியில் பாசிச பா.ஜ.க. வால் வக்பு திருத்த சட்டம் 2025, என்று சட்ட மாக்கப்பட்டதை நாடும், நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள், மேலும் வக்பு திருத்த சட்டம் 2025- என்பது ஜனநாயகத்தின் மீதும், இந்திய இஸ்லாமியர்களின் மீதும் பாசிச பா.ஜ.க தொடுத்த போர் என்று கற்று அறிந்த அறிஞர்கள் தெரிவித்தது குறிப்பிடதக்கது.

வக்பு சட்டம் 2013-த்தில், வக்பு சொத்துகளை பாதுகாக்க அனைத்து சிறப்பு அம்சங்களும் இருந்தும், இஸ்லாமியர்களை நாட்டின் இரண்டாம் தர குடி மக்களாக்கவேண்டும் என்ற நோக்கத்திலும், வக்பு சொத்துகளை அரசு உடமையாக்க வேண்டும் என்றும் பாசிச பா.ஜ.க. வின் கூட்டாளிகளுக்கு தாரவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வெளிப்பாடாகவே வக்பு திருத்த சட்டம் 2025 அமலாக்கப்பட்டது.

**வழக்கு தாக்கல்**

வக்பு திருத்த சட்டம் 2025-யை ரத்து செய்ய கோரி உச்ச நீதிமன்றத்தில் அனைத்திந் திய முஸ்லிம் தனியார் வாரியம், மற்றும் ஜனநாய கத்தின் மீது நம்பிக்கை கொண்ட அரசியல் கட்சிகள் இணைந்து கடந்த 16.04.2025 தேதியில் பாசிச, பா.ஜ.க வால் நிறைவேற்றப்பட்ட வக்பு திருத்த சட்டம் 2025-ம் இந்திய அரசியலமைப் புக்கு எதிரானது என்று குறிப்பிட்டு அச்சட்டத்தை தடை செய்ய வேண்டி ரிட் மனு தாக்கல் செய்தும், நாட்டின் அனைத்து பகுதியிலும் இஸ்லாமிய மக்கள் வக்பு திருத்த சட்டம் 2025-யை இரத்து செய்ய வேண்டி போராட் டங்களும் நடத்தியதின் வெளிப்பாடாகவும், உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களின் வாதங்களின் அடிப்படையிலும் உச்ச நீதிமன்றம் வக்பு திருத்த சட்டம் 2025-க்கு இடைக்கால தடை வழங்கியது, மக்களும் இடைக்கால தடையில் மூச்சு விடுவதுக்குள், கடந்த 15.09.2025 தேதியில் வக்பு திருத்த சட்டம்- 2025-க்கு தடை என்று சமூக வலைதளங்களிள் நம் மக்களும், ஊடங்களிலும் நாம் கொண்டாடிக்கொண்டு இருக்கும் சூழ்நிலையில், உண்மையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தான் என்ன?

உச்ச நீதிமன்றத்தில் வக்பு திருத்த சட்டம் 2025-யை முழுவதும் தடை செய்யவேண்டும் என்று ரிட் மனு தாக்கல் செய்ததற்கு பதில் என்ன?

விடை- நாம் சிறு வயதில் பல புராணக் கதைகளை கேட்டுயிருப்போம், அதைபோல் தான் இந்த தீர்ப்பும். அது வேறு எந்த கதையும் அல்லஞ் சந்திரனை பாம்பு விழுங்கும் கதை தான் அது. பாசிசம் நாட்டின் உச்ச..ம் அடைந்து விட்டது தான் கதையின் சிறப்பு. படம் பார்த்து கதை சொல் என்பார்கள், ஆனால் நீங்கள் இந்த தீர்ப்பை பார்த்து கதை அறிந்துக்கொள்ளுங்கள்.

வக்பு திருத்த சட்டம் 2025 -யை முழுவதும் தடை செய்யவேண்டும் என்று ரிட் மனு தாக்கல் செய்த மனுவுக்கு உச்ச நீதிமன்றத்தின் பதில் என்ன தெரியுமா?

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் முடிவுரையின் தொடக்கம் (தீர்ப்பின் ஒரு பகுதி)

**CONCLUSION;**

209. In the totality of the circumstance, we do not find that any case is made out to stay the provision of the entire statue. The prayer for stay of the imp uuged Act is, therefore, rejected. However, while doing so. In order to protect the interest of all the parties and balance the equities during pendency of this batch of matter, we issue the following direction.

உச்ச நீதிமன்றம் சொல்வது. - முழு சட்டத் தையும் (வக்பு திருத்த சட்டம்-2025யை)யும் நிறுத்தி வைக்க எந்தவொரு வழியும் வகுக்கப்பட விலை என்பதை நாங்கள் (உச்ச நீதிமன்றம்) காண்கிறோம்.

எனவே, வக்பு திருத்த சட்டம் 2025-யை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. இருப்பினும் இரு தரப்பின் நலனைப் பாதுகாப்பதற்காக, நாங்கள் வழிமுறைகளை வெளியிடுகிறோம்.

இறக்கும் தருவாயில் வருவனுக்கு மருத்துவர் மெல்ல கொல்லும் மருந்தையும், அடித்தவனுக்கு பலத்தை அளிக்கும் மருந்து கொடுத்து வைத்தியம் செய்யும் முறை விந்தையாக தான் உள்ளது.,

**“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்துசெய் வஃதே முறை”**

என்ற குறளின் புது பரிமானமோ என என்ன வைக்கும் அளவுக்கு தீர்ப்பு அமைந்துள்ளது என்றே சொல்லலாம்.

**உச்ச நீதிமன்றம் வெளியிட்ட வழிமுறைகள்**

1) மத்திய வக்பு குழுமத்தில் 22 உறுப்பினர் களில் அதிகபட்சம் 4 முஸ்லிமல்லாதோர் இருக்கலாம் என்றும்,

2) மாநில வக்ப் வாரியங்களில் 11 உறுப்பினர் களில் அதிகபட்சம் 3 முஸ்லிமல்லாதோர் இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை அல்லது சீக்கியர்களின் குருத்துவாரா நிர்வாகத்தில் அம்மதத்தை சேராதவர்கள் உறுப்பினர்களாக ஆக முடியாத நிலையில் வக்ப் வாரியத்தில் மட்டும் முஸ்லிமல்லாத உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளவேண்டும் என்பதை எப்படி ஏற்க முடியும், (வக்பு வாரித்தில் இனி முஸ்லிம்கள் அவர்கள் விரும்பிய உணவை கூட உண்ணமுடியாத சூழ்நிலை ஏற்படும்)

3) வக்பு செய்வதற்கு ஒருவர் குறைந்தது 5 ஆண்டுகள் இஸ்லாத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை நீருபிக்க வேண்டும் என்ற திருத்த விதியை உச்ச நீதிமன்றம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. வக்பை உருவாக்குவதற்கு அந்த விதி அவசியம் இல்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்து, அத்துடன் நிற்காமல் வக்பு செய்யத் தகுதியுள்ள இஸ்லாத்தை பின்பற்றும் முஸ்லிம் யார் என்பது பற்றிய விதிகளை மாநில அரசுகள் வகுக்கும், விதிகளை மாநில அரசுகள் வகுக்கும் வரை அந்த தடை நீடிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

இஸ்லாத்தை பின்பற்றும் முஸ்லிம்களை எப்படி மாநில அரசு கண்டுபிடிக்கும்? இஸ்மாயில் என்று பச்சை உத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்ல வருகிறதா என்றே கேட்க தோணுகிறது.

4) மாநில அரசுகளுக்கு இஸ்லாத்தை பின்பற்றும் முஸ்லிம் என்பவர் யார் என்பதை வரையறை செய்யும் உரிமை தருகின்றது. இதன்மூலம் மாநில அரசுக்கு விருப்பமான முஸ்லிம்கள் மட்டுமே வக்கு செய்ய இயலும் என்ற ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**தீர்ப்பில் வரவேற்கத்தக்கவை**

1) வக்பு சொத்துக்கள் குறித்து சர்ச்சை எழுந்து அது நீதிமன்றத்தில் வழக்காக இருக்கும் போது இறுதித் தீர்ப்பு வரும் வரை பறிமுதல் செய்யவோ அல்லது அதிகாரப்பூர்வப் பதிவு களில் மாற்றவோ முடியாது என்ற உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

2) அரசு அதிகாரியின் அறிக்கையை அடிப் படையாகக் கொண்டு வக்பு சொத்து உரிமையை நிரூபிக்க வேன்டுமெனக் கூறிய பிரிவை நீதிமன்றம் தடை செய்துள்ளது வரவேற்கத்தக்கது.

3) எந்த அரசு அதிகாரியும் வக்பை உருவாக்கத் தகுதியானவர் என்று தனிப்பட்ட முறையில் முடிவு செய்ய முடியாது எனத் தெளிவுபடுத்துயுள்ளதும் வரவேற்கத்தக்கது.

4. ஒரு குறிப்பிட்ட வக்பு தொடர்பான விசாரணை நடைபெறும்போது அது வக்பு அல்ல என்று கருதப்படமாட்டாது என்றும்


vaigarai velicham official

இறுதி தீர்ப்பு வரும் வரை எந்த வக்பு சொத்தும் பறிமுதல் செய்யப்படக்கூடாது அல்லது அதன் பதவிகள் மாற்றப்படக்கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

**ஆபத்தான பார்வை**

*1) முஸ்லிமல்லாதார் வக்பு செய்யலாம் என்று அனுமதித்த 104 வது பிரிவு.*

*2) ஆக்கிரமிக்கப்பட்ட வக்பு சொத்துகளை மீட்கக் கால வரையறை சட்டம் 1963* ( limitation Act) *பொருந்தாது என்ற 107 வது பிரிவு.*

*3) நாட்டைவிட்டு வெளியேறியவர்களின் வக்பு சொத்து குறித்த சிறப்புப் பிரிவுகளை கொண்ட 108 வது பிரிவு.*

*ஆகிய 3 பிரிவுகளும் திருத்தச் சட்டத்தில் நீக்கப்பட்டன.*

*நீக்கப்பட்ட இம்மூன்று பிரிவுகள் குறித்தும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிடாதது பெரும் ஏமாற்றத்தை அளிக்கின்றது. இடைக் கால தீர்ப்பில் குறிப்பிடப்படாதது இறுதி தீர்ப்பு வரும் வரை சில முஸ்லிம் விரோத மாநில அரசுகள் வக்பு சொத்துகளை அழித்துவிட உதவிடும்.*

*4) பயன்பாட்டின் வழியே வந்த வக்பு* (Waqf by user) *குறித்த நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பு மிகுந்த அச்சத்திற்குரியதாக அமைந்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் கருத்தின் காரணமாகப் பல நூற்றாண்டுக் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பள்ளிவாசல்கள், அடக்கத்தலங்கள், நினைவு சின்னங்கள் ஆகியவையின் நிலை என்னவாகும் என்றே தெரியாது.*


*2025 வக்பு திருத்த சட்டம் முழுமையாக ரத்து செய்ய வேண்டும் வக்பு திருத்த சட்டம் 2025 சொத்துகளை பலவீனப்படுத்தி அபகரிக்கச செய்யப்பட்ட திட்டமிட்ட சதியாகும். எனவே 2025 திருத்த சட்டத்தை முழுமையாக ரத்து செய்து வக்பு சட்டம்-2013 யை நடைமுறைப் படுத்த வேண்டும்.*

வக்பு பாதுகாப்பதறகான போராட்டம் முழு வலிமையுடன் தொடரும் என்ற அனைத்திந்திய முஸ்லிம் தனியார் வாரியம் அறிவித்துள்ளது அப்போராட்டங்கள் 16 நவம்பர் 2025 அன்று டெல்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் வக்பு திருத்தச் சட்டத்தின் சில பிரிவுகளை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்திருப்பினும், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை விதிகளை மீறும் பல பிரிவுகளுக்கு இடைக்காலத் தடை செய்யப்படாத பெறும் ஏமாற்றத்தை அளிக்கின்றது.

பாசிச பா.ஜ.க. கொண்டுவந்த சட்டம் ஒரே நாளில் வக்பு சொத்தை அழிக்கும் விதத்தில் இருந்ததை உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் மூலம் மெல்ல அழியும் என்று சொல்ல தோன்றுகிறது.

பாம்பு சந்திரனை விழுங்கும் கதை தான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு.

A. **அஹமது,** B.B.M.B.L., வழக்கறிஞர்






# இஸ்லாமிய சொற்கள் எவ்வாறு ஆயுத பாணியாக்கப்படுகின்றன?

பல ஆண்டுகளாக, ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் வேதனையையும் சுரண்டலையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு பாதையாகக் கருதப்பட்ட அடையாள அரசியல் மாற்ற மடைந்துள்ளது. இன்று, சுரண்டப்பட்டவர் களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் ஒதுக்கி வைப்பதற்கான ஒரு ஆயுதமாக இது மாற்றப் பட்டுள்ளது. இங்கு, அடையாள அரசியலின் சொல்லாட்சியை வடிவமைப்பதில் மொழி ஒரு கட்டாயப் பங்கைக் கொண்டுள்ளது, மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கூறுவதில் ஒரு மேலாதிக்க உரையாடலாக செயல்படுகிறது.

### இஸ்லாமிய அரசியல் - யோகி ஆதித்யநாத்

சிறுபான்மையினரை ஒதுக்கி வைப்பதற்காக வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களை 'மோசமாகப் பயன்படுத்துவது' சமீப காலமாக அதிகரித்து வருகிறது. நேற்று, ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் , உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், கோரக்பூரில் "இஸ்லாமிய அரசியல்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி, மாநிலத்தில் ஹலால் சான்றளிக்கப்பட்ட பொருட்களை முழுமையாகத் தடை செய்ய அழைப்பு விடுத்தார். முதலமைச்சரின் அபத்தமான வாதம், ஹலால் சான்றளிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் 'லவ் ஜிஹாத்' உடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கிறது.

### I LOVE MUHAMMAD(PUH)

கான்பூரில் பராவாஃபாத் (நபி பிறப்பு) ஊர்வலத்தில் 'நான் முஹம்மது(ஸல்)வை நேசிக்கிறேன்' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய நூற்றுக்கணக்கான முஸ்லிம் ஆண்கள் சமீபத்தில் சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம் மற்றொரு உதாரணம். இந்தச் செயல் ஆளும் ஆட்சிக்கு எதிரான அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது, இதன் தொடர்ச்சியாக முஸ்லிம் சமூகத்தை குறிவைக்க 'கஸ்வா-இ-ஹிந்த்' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியது அரசு.

### கஸ்வா-இ-ஹிந்த்

'கஸ்வா-இ-ஹிந்த்' என்ற வார்த்தையை உச்சரிப்பதும், உத்தரபிரதேசத்தை ஆளும் மாநில அரசு அதை தொடர்ந்து மீண்டும் மீண்டும் சொல்வதும், முஸ்லிம் சமூகத்தையும் அதன் நோக்கங்களையும் மேலும் பேய்த்தனமாக சித்தரிக்க உதவுகின்றன. இஸ்லாமிய மரபு களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகள் மற்றும் சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தேசத்திற்கு அச்சுறுத்தலாகப் பரப்பு

வதற்காக அவற்றின் அர்த்தத்தைத் திரித்து, மதச் சின்னங்களை அணிவதற்கான தடைகள் அல்லது நம்பகத்தன்மையற்ற மரபுகளின் அடிப்படையில் சமூகங்களை இழிவுபடுத்துவதன் மூலம், அவர்கள் உண்மையில் அரசியலமைப்பில் பொறிக்கப்பட்ட மதச்சார்பற்ற மற்றும் பன்முகக் கொள்கைகளை மீறுகின்றனர்.

'கஸ்வா-இ-ஹிந்த்' போன்ற பலவீனமான ஹதீஸ்கள் ஏற்கனவே ஓரங்கட்டப்பட்ட ஒரு சமூகத்தின் இருப்பை ஆபத்தில் ஆழ்த்த தவறாகப் பயன்படுத்தப்படும்போது, வாதத்திற்காக, இந்த பலவீனமான ஹதீஸ் உண்மையானது என்று ஒருவர் வாதிட விரும்பினால், அதை சூழ்நிலைப்படுத்த வேண்டும்.




இது கலீஃபாக்களின் சகாப்தத்தில் முஸ்லிம் எல்லைப் படையினரின் ஆரம்பகால ஈடுபாடு களைக் குறிக்கலாம். அப்படி என்றால், அது பொதுமக்களின் பாதுகாப்பு, போரின் வரையறுக் கப்பட்ட நோக்கம் மற்றும் குர்ஆனிய நெறிமுறை களைப் பின்பற்றுதல் போன்ற நியாயமான போரின் சரியான கொள்கைகளால் வழிநடத்தப் பட்டிருக்கலாம்.

பிற்கால ஏகாதிபத்திய வெற்றிகளை நியாயப் படுத்த இதைப் பின்னோக்கிப் பயன்படுத்த முடியாது, அல்லது நவீன தீவிரவாத வன்முறை களையும் நியாயப்படுத்தவும் முடியாது - மேலும், மிக முக்கியமாக, முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரங்களையும் அவர்களின் மதத்தைப் பின்பற்றும் உரிமையை மறுப்பதையும் நியாயப்படுத்த இதைப் பயன்படுத்த முடியாது.

இந்த சொற்கலெல்லாம் இவர்களுக்கு தெரியவில்லையா?

முஸ்லிம்களின் நடத்தைகளுக்கு தெளிவான வழிகாட்டுதலை உண்மையான ஹதீஸ்கள் வழங்குகின்றன. உதாரணமாக நபி(ஸல்) அவர்களின் தோழரான அபு ஹுரைராவால் விவரிக்கப்பட்ட நபிகளின் கூற்றுகள் ஒரு எடுத்துக்காட்டு:

"எவருடைய நாவு மற்றும் கையிலிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்கிறார்களோ அவரே முஸ்லிம், எவரிடமிருந்து மக்களின் வாழ்க்கையும் செல்வமும் பாதுகாப்பாக இருக்கிறதோ அவரே விசுவாசி."

இந்த வழிகாட்டுதல் வன்முறையை மகிமைப் படுத்தவோ அல்லது அரசியல் ஆதாயத்திற்காக மதத்தை கருவியாக்கவோ செய்யும் எந்தவொரு முயற்சியையும் எதிர்க்கிறது.

ஆனால் மேற்சொன்ன அவை பலவீன மானவை (சயீஃப், ஆதாரமற்றவை) என்ற போதிலும், அந்த தெளிவற்ற கதைகள் அரசியல் சொல்லாட்சியில் ஆயுதமாகப் பயன்படுத்தப் படுகின்றன. தீவிரவாதக் குழுக்களின் பயங்கர வாதத்தை நியாயப்படுத்த இவை பயன்படுத்தப் படுகின்றன. இப்போது பாசிச அரசியல் தலைவர்கள் இஸ்லாத்தை இயல்பாகவே வன்முறை என்று முத்திரை குத்துவதற்கு இவற்றை ஒரு சாக்காகப் பயன்படுத்துகின்றனர். இரண்டு அணு ஆயுத நாடுகள் பதற்றத்தில் இருக்கும் ஒரு பிராந்தியத்தில் இது இறையியல் ரீதியாக ஆதாரமற்றது மட்டுமல்ல, மிகவும் ஆபத்தானது.

### இவர்களின் நோக்கம் என்ன?

வகுப்புவாதக் கலவரத்தால் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை மேலும் துண்டாக்குவதற்காக, யோகி ஆதித்யநாத் போன்ற மாநில அரசாங்கங்களின் தலைவர்கள் உட்பட, ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள், தேசிய விவாதத்தை வடிவமைக்க இஸ்லாம் பற்றிய எரிச்சலூட்டும் அறிக்கைகளை அனுமதிக் கின்றனர் மற்றும் நிலைநிறுத்துகின்றனர். அவை பொது ஒழுங்கை சீர்குலைப்பது மட்டுமல்லாமல், ஜனநாயக விழுமியங்களையும் அரிக்கின்றன.

இஸ்லாத்தை ஒரு சிதைந்த, தெளிவற்ற மற்றும் நிராகரிக்கப்பட்ட பாரம்பரியத்துடன் ஒப்பிடுவதும், அமைதியின் சின்னமான நபி (ஸல்) அவர்களை தவறாக மேற்கோள் காட்டப்பட்ட, நம்பகத்தன்மையற்ற கூற்றாகக் குறைப்பதும் ஒரு மிகப்பெரிய அநீதியாகும். இது அவரது உண்மையான உணர்வை, அமைதி, நீதி மற்றும் மனிதகுலத்தின் பாதுகாப்பை தவறாக சித்தரிக்கிறது.

Source : The Wire - 23/10/2025 by Syeda Hameed

தமிழில் : **Advocate Jasmine Fathima.**

## பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்... முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

- தொடர்



# உச்ச நீதிமன்றமும் குண்டு வெடிப்புகளும்

**பிராமிணிஸ்ட்டுகள் இந்தியா முழுவதும் குண்டுவெடிப்புகளை நடத்தினார்கள். பின்னர் முஸ்லிம்கள் தாம் அந்தக் குண்டுகளை வைத்தார்கள் என இடைவிடாமல் பிரச்சாரம் செய்தார்கள். ஏன் முஸ்லிம்கள் குண்டு வைக்கின்றார்கள் எனக் கேட்டால், பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு பழி தீர்க்கின்றார்கள் என்று முதலிலும், பின்னர் குஜ ராத் இனப்படுகொலைக்குப் பழி வாங்குகின்றார்கள் என்றும் கூறினார்கள்**

**நவம்பர் மாத தொடர்ச்சி...**

இதற்கு முன்னால் நடந்த குண்டு வெடிப்பு களில் அவை நடந்து முடிந்தவுடனேயே மத்திய உளவுத்துறை (IB) சில முஸ்லிம் அமைப்புகளின் பெயரையே சொல்லின. அதே பாணியில் இப்போதும் (IB) மத்திய உளவுத்துறை சில முஸ்லிம் அமைப்புகளின் பெயர்களையே சொன்னது. ஆனால், ஹேமந்த் கர்கரே அவற்றைக் கண்டுகொள்ளவில்லை. மத்திய உளவுத்துறை சொல்வதைக் கேட்க வேண்டும் என்றால் அவர்கள் ஏதேனும் ஆதாரத்தைத் தந்திட வேண்டும் என வலியுறுத்தினார்.

ஹேமந்த் கர்கரே அந்த மாலேகான் குண்டு வெடிப்பை அவருடைய பாணியில் நேர்மையாக புலனாய்வுக்கு உட்படுத்தினார். அதன்வழி நாடு முழுவதும் இந்தியாவுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பும், அபிநவ் பாரத் என்ற அமைப்பும் பின்னி யிருந்த சதிகளைக் கண்டுபிடித்தார்கள்.

2008 மாலேகான் குண்டுவெடிப்பில் அபிநவ் பாரத் என்ற அமைப்பு முக்கிய பங்காற்றியது. உடன், ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பும், இன்னும் உள்ள இந்துத்துவ அமைப்புகளும் ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவை மாலேகான் குண்டுவெடிப்பில் மட்டுமல்ல, அதற்கு முன்னால் நடந்த இன்னும் பல குண்டு வெடிப்புகளிலும் இந்த இந்துத்துவ அமைப்புகள் ஈடுபட்டிருந்தது தெரியவந்தது. அவை, பின்வரும் ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டவை.

1) இராணுவ இணை தளபதி பிரசாத் புரோகித்–இன் மீது நடத்தப்பட்ட மரபணு சோதனை.

(Source : Times of India, Pune, 7-November, 2008. 11, November - 2008. 12,November 2008. 15, November 2008. and 16, November 2008. Pune Mirror (Times of India Group). 15&19 November 2008 The Indian Express, Pune, 14 & 24 November 2008.; Marathi Dailies Sakal, Pune and Pudhari,


vaigarai velicham official

Pune 15, November 2008.

The Transcripts of Video or Audio Recording of the Meetings of Abhinav Bharath.

= அபிநவ் பாரத் என்ற அமைப்பின் ஒலிப் பேழைகள், ஒளிப் பேழைகள், இவற்றிலிருந்து பெறப்பட்ட எழுத்து வடிவங்கள்.

ஆதாரம் = Volume : No :'111B' Enclosed with the charge sheet of Malegaon 2008. (ATS. Maharashtra C.R.No. 18/20085.

இராணுவ இணை தளபதி = கலோனல் – பிரசாத் புரோகித், இதே வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் பேசிய தொலை பேசியின் பேச்சுக்கள். (ஆதாரம் – மேலே சொன்னவை)

முந்தைய குண்டுவெடிப்புகளில் உள்ள எல்லா முக்கிய தடயங்களும் வேண்டு மென்றே மறைக்கப்பட்டன. இவை பிராமி ணிஸ்ட்டுகளைக் காப்பாற்றுவதற்காகவே மறைக்கப்பட்டன. மேற்கொண்டு நடந்த விசாரணைகள் குண்டுவெடிப்புகளின் போக்கை மாற்றின.

மாலேகான் குண்டுவெடிப்புகளில் மட்டுந் தான், இந்துத்துவ வாதிகளின் கைவரிசை வெளிப்பட்டன என்றில்லை. மாறாக அதற்கு முன்னால் உள்ள பல குண்டுவெடிப்புகளும் இந்துத்துவ – பிராமிணிஸ்ட்டுகளின் வேலைதான் என்பதை ஊர்ஜிதப்படுத்தும், தடயங்கள் கிடைக்கவே செய்தன. ஆனால், அவையெல்லாம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டன.

ஆனால், ஹேமந்த் கர்கரே அவற்றை அம்பலப்படுத்தினார். அன்றிலிருந்து எல்லாமே மாறிப்போனது.

ராஜஸ்தான் மாநிலத்தின் அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு – 2007, ஆந்திர மாநிலம் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு – 2007, பானிபட் சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டுவெடிப்பு – 2007, இவற்றில் இந்துத்துவ – பிராமிணிஸ்ட்டுகளின் கைவரிசை குண்டுவெடிப்பு நடந்த இரண்டொரு நாள்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் மத்திய உளவுத்துறை தலையிட்டு அந்த விசாரணைகள் அதற்கு மேற் செல்லாமல் பார்த்துக் கொண்டன.



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,
மகாராஷ்டிரா காவல்துறை

மராட்டிய மாநில காவல்துறையின் தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரே மாலேகான் குண்டு வெடிப்பின் உண்மைகளை வெளிப்படுத்தினார். இந்துத்துவ பிராமிணிஸ்ட்டு களைக் கையும் களவுமாகப் பிடித்தார். உடனேயே நாடெங்கும் அதிர்வலைகள் ஏற்பட்டன. இதர மாநிலங்களெல்லாம், தங்கள் மாநிலங்களில் நடந்த குண்டுவெடிப்புகளை மறு ஆய்வுக்கு உட்படுத்திட தலைப்பட்டன.

மூன்றாண்டுகளுக்குப் பின்னர் 2010–2011இல் இராஜஸ்தான் மாநிலத்தின் SIT : சிறப்புப் புலனாய்வுப்படை NIA - என்ற தேசியப் புலனாய்வு முகமை இவையெல்லாம் 2007ஆம் ஆண்டில் என்ன தடயங்கள் கிடைத்தனவோ அவற்றைக் கொண்டு புலனாய்வுகளை மேற்கொண்டன.

முழுமையான ஆய்வுக்குப்பின் இராஜஸ்தான் மாநிலத்தின் சிறப்புப் புலனாய்வுப்படை, தேசிய புலனாய்வு முகமை இவை மிகவும் ஆழமான புலனாய்வு ஒன்றை மேற்கொண்டன. பின்னர் அந்தக் குண்டுவெடிப்புகளை நடத்திய ஆர்.எஸ். எஸ். அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் போன்ற அமைப்புகளை – பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்களைக் கைது செய்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்கள். அவற்றில் ஏற்கெனவே குற்றம் சுமத்தப்பட்ட இஸ்லாமிய அமைப்புகள், குற்றம் சாட்டப் பெற்ற முஸ்லிம்கள் இவர்களெல்லாம் நிம்மதி அடைந்தார்கள். இந்த இஸ்லாமிய அமைப்புகள், முஸ்லிம் இளைஞர்கள் இவர்கள் மீது குற்றம் சுமத்தியவர்கள் மத்திய உளவுத் துறையைச் சார்ந்தவர்கள். இவற்றைப் பற்றிய விளைவுகள் பின்வருமாறு...

### I) அஜ்மீர் ஷரீஃப் குண்டுவெடிப்பு மறு ஆய்வுக்கு உட்படுத்திய முதல் வழக்கு

**அஜ்மீர் ஷரீஃப் என்பது காஜா**

## மொய்னுத்தீன் சிஷ்தி அவர்களின் தர்கா – அடக்கஸ்தலமாகும்

இங்கு அக்டோபர் 11–ஆம் நாள் 2007 ஆம் ஆண்டு மாலை 6.15 மணிக்கு குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது. இது முஸ்லிம்கள் நோன்பு நோற்கும் ரமழான் மாதத்தில், நோன்பு துறக்கும் மாலைப்பொழுதில் நடந்தது. இதில் மூன்று பேர் கொல்லப்பட்டார்கள். 15 பேர் காயம் பட்டார்கள்.

இன்னொரு குண்டும் இருந்தது. ஆனால் அது வெடிக்க வில்லை. குண்டுவெடித்த நான்கு நாள்களுக்குள் காவல்துறையினர் குண்டை வெடிக்கச் செய்த சிம் கார்டை கையகப்படுத்தி விட்டார்கள். இந்த சிம்கார்டு 'பாபுலால் ராம்ஃபர் யாதவ், என்பவரின் பெயரில் வாங்கப்பட்டி ருந்தது. அவர் 'டும்கா' "DUMKA" மாவட்டத்தில் காகோய் கிராமத்தைச் சார்ந்தவர். அவர் ஒரு போலி வாக்காளர் அட்டையைத் தயாரித்து அதனடிப் படையில் அந்த சிம் கார்டை வாங்கி இருந்தார். இந்தத் தகவல்கள் அனைத்தும் முழுமையாக டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழில் 15, அக்டோபர் 2007 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

இந்தத் துப்புகளை வைத்துக்கொண்டு அந்த வழக்கு – குண்டு வெடிப்பு விசாரிக்கப் பட்டிருக்குமேயானால் குற்றவாளிகள் (2007) அன்றே கண்டுபிடிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆனால் காவல்துறையினர் திடுதிப்பென புலனாய்வை கைவிட்டார்கள். பாபுலால் ராம்ஃபர் யாதவ் என்றொரு மனிதனே இல்லை எனச் சொல்லிவிட்டார்கள்.

ஆனால் குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரிப்பவர்களைப் பொறுத்தவரை சிம்கார்டு (SIM CARD) கிடைக்கப் பெறுவது ஒரு பெரும் புதிரை – முடிச்சை அவிழ்ப்பதாகும். அவர்கள் சில அறிவியல் ஆய்வாளர்களின் துணையோடு சிம் கார்டை பயன்படுத்தி பேசப்பட்ட உரையாடல் களை பெற்றிடலாம். (Call Records) அவற்றின் வழி உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்துவிடலாம்.

காவல்துறையினர் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, வேறு சிலவற்றைப் பின்பற்றி னார்கள். அது பாம்பை விட்டுவிட்டு புதரை அடிக்கும் கதையாக இருந்தது. அவர்கள் அதாவது, இராஜஸ்தான் காவல்துறையினர் உளவுத்துறையின் ஏவலின்படி, பாகிஸ்தானைச் சார்ந்த லஷ்கரேதைபா என்ற அமைப்பு பங்களாதேஷில் இருக்கும் ஹுஜி போன்ற அமைப்பு என்பதாக தங்கள் புலன் விசாரணையை ஓட்டினார்கள். இவர்களெல்லாம் மாயமான ஒரு பெயரின் கீழ் இயங்குவதாகவும் பேசப்பட்டது.

அந்தப் பெயர் ஷாஹித் பிலால். அவர்கள் அதாவது, இராஜஸ்தான் காவல்துறையினர் அந்தக் குண்டுவெடிப்புகளில் பலியான செய்யத் சலீம் என்பவரைச் சந்தேகப்படத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் உண்மையான சாட்சி யங்களையும் உண்மையான குற்றவாளிகளையும் விட்டுவிட்டு முஸ்லிம்கள்தாம் குற்றவாளிகள் என்ற ஒரே கோணத்தில் தங்கள் பார்வையை ஓட்டிடத் தலைப்பட்டு விட்டார்கள்.

இந்த வகையில் எந்த ஆதாரமும் இல்லாமல், அப்துல் ஹாபிஸ் ஷமீம், முஜீபுர் ரஹ்மான், இம்ரான் அலீ போன்றவர்களைக் கைது செய்து சித்திரவதைச் செய்திட தலைப்பட்டுவிட் டார்கள். ஆனால், 2008ஆம் ஆண்டு நடந்த மாலேகான் குண்டு வெடிப்பிற்குப் பின் எல்லாமே தலைகீழாக மாறிடத் தொடங்கின. இந்தக் குண்டுவெடிப்பிற்குப்பின், அபிநவ் பாரத்தான் இருக்கின்றது என்பது அம்பலமானது. இதனால் மக்கள் அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பையும், மறு ஆய்வுக்குட்படுத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள்.

இதுகுறித்து மக்களிடையே பெரும் கொந் தளிப்பு வந்தது. இந்தப் பின்னணியில் ராஜஸ்தான் அரசாங்கம், அஜ்மீர் ஷெரீஃப் குண்டுவெடிப்பை மறு ஆய்வு செய்திட ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை 2008–இல் ஏற்பாடு செய்தது. (SIT)

இந்த (SIT) சிறப்புப் புலனாய்வுக்குழு சரியான திசையில் தனது ஆய்வை மேற்கொண்டது. முதலில் எந்தத் திசையில் புலனாய்வு சென்றதோ அதே திசையில் புலனாய்வை மேற்கொண்டது. அதுவே சரியான திசையாகவுமிருந்தது. அவர்கள் முதலில் கிடைத்த எல்லா தடயங்களையும் விருப்பு வெறுப்பின்றிப் பின்பற்றினார்கள். உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந் தார்கள். பின்னர் பின்வரும் குற்றவாளிகள்மீது

அக்டோபர்–5, 2010 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்கள்.

ஆதாரம் : (THE CHARGE SHEET OF THE AJMER SHARIF BLAST CASE 2007 FILED IN THE JAIPUR COURT IN OCT. 2010)

1) சுனில் ஜோஷி – ஆர்.எஸ்.எஸ்.–இன் பிரசார பிரமுக் – மாஹதி மாவட்டம், மத்தியப் பிரதேச மாநிலம்.

2) சந்தீப் டான்கி – ஆர்.எஸ்.எஸ். பிரசார் பிரமுக் ஜம்தார மாவட்டம். மத்தியப் பிரதேச மாநிலம்.

3) தேவேந்திர குப்தா – ஆர்.எஸ்.எஸ். பிரசார் பிரமுக் ஜம்தார மாவட்டம், ஜார்க்கண்ட் மாநிலம்.

4) சந்திரகாந்த் லிவி ஷாஜாபூர் மாவட்டம், மத்திய பிரதேசம்.

5) ராம்ஜி கல்சங்கரா – ஆர்.எஸ்.எஸ். அபிநவ் பாரத் ஆகியவற்றின் தீவிர செயல் பாட்டாளர்.

6) லோகேஷ் ஷர்மா– ஆர்.எஸ்.எஸ். மற்றும் ஜெய் வந்தே மாதரம் ஆகிய அமைப்புகளின் தீவிரவாத பிரிவின் தலைவர்.

1 முதல் 4 வரை குற்றம் சுமத்தப்பட்டவர்கள் எந்தெந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் என்பது, குற்றப் பத்திரிகையிலேயே குறிப்பிடப்பட்டது. அதை அப்படியே இங்கே தந்துள்ளோம்.

ஏப்ரல்–2011 ஆம் ஆண்டு இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகைமையிடம் (NIA) ஒப்படைக்கப்பட்டது. இதை மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்காகவே அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நேரத்தில் சுவாமி அசீமானந்தா தனது ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கி இருந்தார். இதனால் NIA மிகவும் தீவிரமாக விசாரணையை மேற்கொண்டது. அதன்பின் ஜூலை 2011–இல் 13 தீவிரவாதிகளின் மீது, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இவர்கள் ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், ஜெய் வந்தே மாதரம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்கள். இந்தக் குற்றப் பத்திரிகையில் ஏற்கெனவே குற்றம் சாட்டப் பெற்ற ஏழுபேரும் அடங்குவார்கள். கூடுதலாகக் குற்றம் சாட்டப்பெற்றவர்களின் பெயர்கள் பின்வருமாறு...


1. சுவாமி அசீமானந்தா,
2. ஹர்ஷத் சோளிங்கி
3. முகேஷ் வசானி
4. பாரத் ரட்டிஷ்வர்
5. பாவேஷ் பட்டேல்
6. சுரேஷ் நாயர்
7. மெகுல் – பட்டப் பெயர் மகேஷ்பாய் கோஹில்

குற்றம் சாட்டப்பெற்ற 13 பேரில் மூன்றுபேர் இன்னும் தலை மறைவாகவே இருக்கின்றார்கள். அவர்கள்

1. சந்தீப் டான்கி
2. ராம்ஜி கல் சங்கரா
3. சுரேஷ் நாயர்

இவர்களில் சந்தீப் டான்கி, ராம்ஜி கல்சங்கரா ஆகியோர் வெடிகுண்டுகள் வழி 26/11 என்ற மும்பைத் தாக்குதலின்போது கொலை செய்யப்பட்டார்கள் என நம்பப்படுகின்றது.

**– தொடரும்...**







# தமிழகத் துறைமுகங்களில் கப்பலோட்டிய கீழக்கரை முஸ்லிம்கள்

**நவம்பர் தொடர்ச்சி**

ராமநாதபுரம் பகுதியில் தயாரிக்கப்பட்ட துணி வகைகள் பெருமளவில் மரக்காயரது கப்பல்களில் ஏற்றுமதியாயின. சேது நாட்டுத் துறைமுகங்களிலும் இலங்கைத் துறைமுகங்களிலும் எந்த பொருளாக இருப்பினும் பெரிய தம்பி மரக்காயர் வைத்ததே விலை என்ற நிலை இருந்தது என ஐரோப்பியரின் பதிவுகள் கூறுகின்றன. இவரது உதவியின்றி சேது நாட்டு துறைமுகப் பகுதிகளில் ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் வணிகம் செய்ய முடியாத சூழல் இருந்தது. இலங்கையின் தேவைக்கு உணவு தானியங்களை பெருமளவில் பெரியதம்பி மரக்காயரின் கப்பல்களே ஏற்றிச்சென்றன. இலங்கையின் பாக்கு தமிழகத்து துணி வகைகளுக்கும், உணவுப் பொருட்களுக்கும் பண்ட மாற்றாக விளங்கியது. இந்த வணிகத்தில் சம நிலையை உருவாக்கி செயல்படுத்தியவர் பெரியதம்பி மரக்காயர் என ஆவணங்கள் இவரை பாராட்டுகின்றன.

1683-ல் இலங்கையின் பெரு வணிகர் திம்மராசா, தனது கூட்ட அசன் மரக்காயர் ஆகியோருடன் ஒர கூட்டணியை உருவாக்கிக் கொண்டு இலங்கையில் விளையும் பாக்கு முழுவதையும் தாமே கொள்முதல் செய்து கொண்டு டச்சுக்காரர்கள் கட்டுப்பாட்டிலிருந்த இலங்கை நகரங்கள் அனைத்திற்கும் உணவும் பொருட்களை வழங்குவதாகக் கூறியதைக் கேட்டு மரக்காயரது பொருளதார வலிமை குறித்து வியந்து எழுதியுள்ளார். இருப்பினும் தங்களது வணிக ஆதிக்கத்திற்கும், முத்து சங்கு குளித்தலுக்கும் மரக்காயர் தடைக்கல்லாக இருப்பதைக் கண்டு டச்சுக்காரர்கள் எரிச்சலடைத்தனர்.



டாக்டர். **ஜெ.ராஜா முகமது**
உதவி இயக்குநர், (ஓய்வு)
தமிழ்நாடு அருங்காட்சியகத்துறை

மரக்காயரைப் பற்றி சேதுபதி மன்னரிடம் பல புகார்களை தெரிவித்தனர். சேதுபதி எந்த நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை. இதைக் கண்டு கயப்பமடைந்த டச்சுக்காரர்கள் தக்க தருணத்தை எதிர் நோக்கி இருந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக சேதுபதி 1685-ல் டச்சுக்காரர்களுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். இதன்படி பெரியதம்பி மரக்காயர், மற்றும் அவரது உறவினர்களையும் எல்லா அரசு பொறுப்புகளிலிருந்தும் நீக்க வேண்டுமென


vaigarai velicham official

ஏனைய கப்பல் வணிக முஸ்லிம்களைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் சேதுபதி நிர்பந்திக்கப்பட்டார்.

பெரிய தம்பி மரக்காயரின் வணிக நடவடிக்கையாக இது அமைந்தது. நிர்பந்தத்தின் காரணமாக சேதுபதி இந்த ஒப்பந்தத்தினை செய்து கொண்டபோதிலும் இத்த ஆதாரத்தை நடைமுறைப்படுத்தாமல் காலம் தாழ்த்தி வந்தனர். ஆத்திரமடைந்த டச்சுக்காரர்கள் சேதுபதி மன்னர், பெரியதம்பி மரக்காயர் மற்றும் ஒரு சில முஸ்லிம்களின் கப்பல்களையும் பறிமுதல் செய்தனர். இது முஸ்லிம்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது.

1690-ல் மீண்டுமொரு ஒப்பந்தம் கையெழுத் தானது. இதிலும் பெரியதம்பி மரக்காயரது குடும்பத்தினரை ஓரம் கட்ட வேண்டுமென்ற ஷரத்துகள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. வேறு வழியின்றி பெரியதம்பி மரக்காயர், அவரது உறவினர்கள், ஏனைய முன்னணி முஸ்லிம் வணிகர்கள் ஆகியோரை அனைத்து அரசு பொறுப்புகளிலிருந்தும் நீக்குவதாக சேதுபதி அறிவிப்பு செய்ய வேண்டியதாயிற்று.

மரக்காயர்களின் வாணிப நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. அவர்களது நடவடிக்கைகளை டச்சுக்காரர்கள் கண்காணித்து வரலாயினர். ஆனால் பெரியதம்பி மரக்காயருக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும், சேதுபதி மறைமுகமாக ஆதரவு கோடுத்து வந்தார். சேதுபதி மன்னர் மற்றும் இலங்கை கண்டி மன்னர்ளின் ஆதரவுடன் பெரியதம்பி மரக்காயரது தோணிகள் இலங்கை யிலிருந்து பாக்கையும், மேற்கு கடற் ரையிலிருந்து மிளகையும் ஏற்றி வந்து, டச்சுக்காரர்களின் பார்வையில்லாமல், வாணிபம் செய்தும் வந்தனர்.

அதே சமயம் டச்சுக்காரர்களின் வாணிபத் திலும் சரிவு ஏற்பட்டது. பெரியதம்பி மரக் காயரின் உதவியின்றி சேதுநாட்டு துறைமுகங் களில் வாணிபம் செய்வதும், முத்துக் குளித்தல் - சங்கு குளித்தல் நடத்தவும் இயலாது என்பதை புரிந்துகொண்ட டச்சுக்காரர்கள் அவருடன் இணக்கமாக செல்ல தயாராயினர். இதன்படி 1694-ல் பெரியதம்பி மரக்காயர் டச்சுக்காரர் களின் நண்பராக காட்டப்படுகிறார்.

இக்கால கட்டத்தில் சேதுபதிக்கு அடுத்த படியாக செல்வாக்கு உள்ளவர், பெரிய தம்பி மரக்காயர் தான் எனவும் டச்சுப் பதிவேடுகள் பாராட்டி எழுதியுள்ளன.

இப்போது பெரியதம்பி மரக்காயர் ‘ரீஜண்ட்’ என்ற பட்டத்துடன் அழைக்கப்படுகிறார். அக்கால அரசியலில் ரீஜண்ட் என்பது அரசின் மிக உயரிய பதவியாகும். பொதுவாக இத்தகைய பதவி மன்னரின் நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. டச்சுக்காரர்களின் ஆதரவு - எதிர்ப்பு என எந்த நிலை இருந்தாலும் கீழக்கரைத் துறைமுகத்திலிருந்து பெரியதம்பி மரக்காயரின் கப்பல்கள் சுறுசுறுப்புடன் இயங்கி வந்தன.

ஒவ்வொரு ஆண்டும் முத்துக் குளிக்க கீழக்கரை, காயல்பட்டினம், தேவிப்பட்டினம், பெரியபட்டினம், வேதாளை ஆகிய ஊர்களி லிருந்து முஸ்லிம் முத்துக்குளி தொழிலாளர் களையும், அவர்களது படகுகளையும் டச்சுக்காரர்கள் பெரிதும் நம்பி இருக்க வேண்டியிருந்தது. பெரியதம்பி மரக்காயர்தனது செல்வாக்கைக் கொண்டு 1698-ம் ஆண்டு முத்துக் குளிப்பின் போது முஸ்லிம் தொழிலாளர்கள் யாரும் கலந்து கொள்ளாமல் இருக்க ஏற்பாடு செய்தார். இதனால் முத்துக் குளிப்பு சரியாக நடைபெறாமல் டச்சுக்காரர்களுக்கு பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டது. இதற்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டுமெனவும், இதற்கு காரணமான பெரியதம்பி மரக்காயரை தண்டிக்க வேண்டு மெனவும் டச்சுக்காரர்கள் சேதுபதி மன்னரை வலியுறுத்தினர். ஆனால் 1698-ம் ஆண்டு இறுதியில் பெரிய தம்பி மரக்காயர் இறந்து விட்டபடியால் நடந்தவற்றை மறந்து மன்னித்து விடும்படி சேதுபதி வேண்டிக் கொண்டார். இவ்வாறாக 1698- வாக்கில் (முதல்) பெரியதம்பி மரக்காயர் இறந்துவிட, அடுத்து வந்தவரும் டச்சுக்காரர்களுக்கு பெரும் சவாலாக விளங்கினார். அவர்தான் ஷேக் அப்துல் காதிறு என்னும் செய்தக்காதிறு மரக்காயர் - வள்ளல் சீதக்காதி ஆவார். (இரண்டாவது பெரிய தம்பி மரக்காயர்)

ஷேக் அப்துல்காதிறு செய்தக் காதிறு மரக்காயர், விஜயரகுநாத பெரியதம்பி என்ற பட்டத்துடன் ரீஜண்ட் பொறுப்பிலும், அரசின் வரி வசூல் அலுவலராகவும் (Tax Farmer) சேதுபதி மன்னரால் அமர்த்தப்பட்டார். 1699-ம் ஆண்டு

தொடக்கத்தில் இந்த மாற்றம் அமைதியாக நடைபெற்றது. டச்சுப்பதிவேடுகள் குறிக்கும் இரண்டாவது பெரிய தம்பியான இவர் தனது குடும்ப பாரம்பரியத்துடன் கடல் கடந்த நாடுகளுடன் கூட்டாக கடல்வாணிபம் செய்து வந்த செய்திகளும் தெரியவருகின்றன.

இதைக்கண்டு, பெரியதம்பி மரக்காயர் குடும்பத்தின் செல்வாக்கு குறையவில்லையே என டச்சுக்காரர்கள் ஆதங்கப்பட்டனர். மேலும் சேதுபதி மன்னர் புதிய ரீஜண்ட் பெரியதம்பி மரக்காயரைக் கலந்தாலோசிக்காமல் எதையும் செய்வதில்லை என்றும் மனம் புழுங்கி எழுதி வைத்துள்ளனர்.

ஷேக் அப்துல்காதிறு மரக்காயரின் உதவி யின்றி சேது நாட்டுப் பகுதியில் வாணிபம் செய்ய முடியாது என்பதை உணர்ந்த டச்சுக்காரர்கள் அவருடன் சமாதானம் வேண்டிநின்றனர். தங்களது வணிக நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும்படியும், அவரது வணிகத்தில் தலையிடுவ தில்லை எனவும், முத்து, சங்கு குளித்தலில் அவருக்கு சில சலுகைகள் அளிப்பதாகவும் தெரிவித்தனர். சிறிது காலம் பெரியதம்பி மரக்காயருக்கும் டச்சுக்காரர்களுக்கும் மோதல் குறைந்தது. டச்சுக்காரர்கள் ராமநாதபுரம் மாவட்டப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளை நிறைய கொள்முதல் செய்து இலங்கைக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். இதனால் அவர்களுக்கு நல்ல லாபம் கிடைத்தது. சீதக்காதி மரக்காயர் மனம் வைத்த காரணத்தினாலேயே இது சாத்தியமானது என டச்சுக்காரர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்த வாய்ப்பின் காரணமாக பெரியதம்பி மரக்காயரின் வாணிபமும் பெருகியது. கீழக்கரை துறைமுகத்திலிருந்து அவரது கப்பல்கள் பெரு மளவில் ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபட்டன. ஏனைய முஸ்லிம் வணிகர்களும் கீழக்கரை துறைமுகத்திலிருந்து நிறைவான லாபத்துடன் வாணிபம் செய்து வந்தனர். செய்தக்காதிறு மரக்காயரின் கப்பல்களுடன் சேதுபதி மன்னரின் கப்பல்களும் பாரசீக வளைகுடா, இந்தோ னேஷியா - அச்சை, சல்கத்தா, நாகப்பட்டினம், கொச்சி, ஆகிய துறைமுகங்களுடன் வாணிபம் செய்து வந்தன. ஆனால் சேதுபதியின் பெயரில் மரக்காயரே இந்த கப்பல்களை செலுத்தி வந்ததாக டச்சுக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாம்பன் கால்வாய் மரக்காயரது பொறுப்பி லிருந்ததால் மலபாரிலிருந்து மிளகும், இலங்கையிலிருந்து பாக்கும் பெரிய தம்பி மரக்காயரது கப்பல்களிலிலும், ஏனைய முஸ்லிம் வணிகர்களது கப்பல்களிலும் தமிழகத்துத் துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்தன. இந்த வணிகத்தில் முஸ்லிம் வணிகர்களுக்கு நிறைந்த லாபம் கிட்டியது. மிளகு, பாக்கு வணிகத்தில் டச்சுக்காரர்கள் ஏகபோக உரிமை கொண்டாடி வந்தபோதிலும் பெரிய தம்பி மரக்காயரின் செயல்திறத்தால் டச்சுக்காரர்களின் அடாவடித் தனம் முறியடிக்கப்பட்டது.

மேலும் பெரியதம்பி மரக்காயர் ஆங்கிலேயர் மற்றும் டேனிஷ்காரர்களுக்கு பாம்பன் கால்வாய் வழியாக வாணிபம் செய்த கொள்ளவும் அனுமதி வழங்கி இருந்தார். இவர்கள் இப்பகுதியில் டச்சுக்காரர்களுடன் போட்டியில் இறங்கினார். இதைக்கண்டு ஆத்திரமடைந்த டச்சுக்காரர்கள் பெரியதம்பி மரக்காயரது வணிக நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஆவன செய்யும்படி சேதுபதியை எச்சரித்தனர். சேதுபதி இதற்கு சம்மதிக்காமல் போகவே கீழக்கரையில் ஆதம் லெப்பை என்னும் கப்பல் வணிகரை ஆதரித்து அவருக்கு டச்சுக்காரர்கள் உதவி செய்து வந்தனர்.

1708-ல் பெரியதம்பி மரக்காயர் - டச்சு மோதல் உச்ச கட்டத்தை அடைந்து, பெரியதம்பி மரக்காயரின் கப்பல்கள் இலங்கையில் பறி முதல் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் முத்துக் குளிப்பு நடைபெற வேண்டியிருந்தது. டச்சுக் காரர்கள் இதற்கு ஆயத்தங்கள் செய்து வந்தனர். பெரியதம்பி மரக்காயரிடம் முத்துக் குளிப்பதற்கு ஏற்ற 30 தோணிகளும் அதற்குண்டான தொழிலாளர்களும் இருந்தனர்.

எனவே தூத்துக்குடி பகுதியில் நடைபெற விருந்த அவ்வாண்டு முத்துக் குளிப்பில் பெரிய தம்பி மரக்காயரது தோணிகளும் தொழிலாளர் களும் பங்கு பெற டச்சுக்காரர்கள் வேண்டிக் கொண்டனர். முத்துக்குளிப்பில் கலந்து கொள்ள சம்மதித்த பெரிய தம்பி மரக்காயர், தனது பட்டாளத்துடன் தூத்துக்குடி சென்று ஓரிரு நாட்கள் மட்டும் முத்துக் குளிப்பில்


vaigarai velicham official

கலந்துகொண்டு திடீரென கீழக்கரைக்கு தமது தோணிகளுடன் திரும்பிவிட்டார்.

இதனால் ஏனைய முஸ்லிம்களின் தோணிகளும் முத்துக் குளிப்பிலிருந்து பின் வாங்கின. டச்சுக்காரர்களுக்கு இதனால் பெரும் இழப்பு ஏற்பட்டது. பெரியதம்பி மரக்காயர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென டச்சுக்காரர்கள் சேதுபதி மன்னரைக் கேட்டுக் கொண்டனர். சேதுபதி ஒரு சமாதானமான பதிலை அனுப்பிவைத்தார். அதுவும் பெரியதம்பி மரக்காயருக்கு சாதகமாகவே இருந்தது. பின்னர் சில மாதங்களுக்கு செய்தக்காதிறு குறித்த செய்திகள் தென்படவில்லை.

இந்த நிகழ்ச்சிக்கு பிறகு மாதங்கள் கழித்து இளைய பெரியதம்பி (Young Periathambi) என்ற ஒருவர் குறிப்பிடப்படும், எனவே ஷேக் அப்துல் காதிறு தக்காதிறு மரக்காயர் - வள்ளல் சீதக்காதி 1708ம் ஆண்டு வாக்கில் இறந்திருக்க வாய்ப்புண்டு. அல்லது வணிக நடவடிக்கைகளிலிருந்து விலகி இருக்கக்கூடும். 1708ஆம் ஆண்டு முதல் இளைய பெரியதம்பியேடம் பதிவேடுகளில் குறிப்பிடப்படுகிறார். இவர் வள்ளல் சீதக்காதி மகன் என டச்சுப் பதிவேடும் மூலம் அறிகிறோம்.

இளைய பெரியதம்பியும், கீழக்கரை துறைமுகத்திலிருந்து வாணிபத்தினை தொடர்ந்து செய்து வந்தார். சேதுபதி மன்னர் இவரது தந்தைக்கு அளித்து வந்ததைப் போன்ற இவருக்கும் அனைத்து பொறுப்புகளையும், சலுகைகளையும் அறிந்திருந்தார். இப்போது இளைய பெரிய தம்பியையும் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் உடனடியாக நீக்க வேண்டுமென டச்சுக்காரர்கள் போர்க்கொடி உயர்த்தினர். இளைய பெரியதம்பி தனது செல்வாக்கைக் கொண்டு அனைத்து முஸ்லிம் வணிகர்களையும் அவரது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், அவர் வீருபப்படியே வணிகர்கள் பண்டங்களை விற்பதாகவும் சேதுபதி மன்னரிடம் டச்சுக்காரர்கள் புகார் செய்தனர் இளைய பெரியதம்பி டச்சு வணிக கம்பெனியின் எதிரி எனவும் டச்சுக்காரர்கள் அறிவிப்பு செய்தனர். சேதுபதி மன்னருக்கு பெரும் நெருக்கடியை உண்டாக்கி இளைய பெரி தம்பியை கடல் வாணிப நடவடிக்கைகளிலிருந்து ஒதுக்கித் தள்ள முயன்றனர்.

இளைய பெரியதம்பி சேது மன்னரிடமும், சக முஸ்லிம்களிடமும் பெரும் செல்வாக்கு பெற்றிருந்த போதிலும் டச்சக்காரர்கள் அச்சுறுத்தல் மற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக 1709ஆம் ஆண்டு மே மாதத்தில் இளைய பெரியதம்பி அரசு பொறுப்பு களிலிருந்து (Tax Farmer) விடுவிக்கப்பட்டதாக சேதுபதி அறிவிக்க வேண்டியதாயிற்று. இருப்பினும் இளைய பெரிய தம்பி தொடர்ந்து கப்பல் வாணிபத்தில் ஈடுபட்டு வந்த செய்தி 1711ஆம் ஆண்டு வரை கிடைக்கிறது. தொடர்ந்து பெரியதம்பி மரக்காயர் குடும்பம் அரித்த குறிப்புகள் டச்சுப் பதிவேடுகளில் காணப்பட வில்லை. ஆனால் பெரியதம்பி மரக்காயரின் வழி வந்தார் 19ம் நூற்றாண்டு வரை கீழக்கரை துறைமுகத்தில் இருந்து கடல் கடந்த நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தனர்.

பின்னர் டச்சுக்காரர்சுளின் ஆதரவாளரான ஆதம் லெப்பை என்னும் கப்பல் வணிகர் 'ரீஜண்ட் பதவியில் நியமிக்கப்பட்டதாக டச்சுப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் முஸ்லிம் வணிகர்கள் கீழக்கரை துறைமுகத்தி லிருந்து தங்களது வாணிபத்தினை தொடர்ந் தனர். இதில் பெரியதம்பி மரக்காயரின் வழி வந்தோரும் அடங்குவர். இக்காலத்தில் கீழக்கரை யில் அபுல் காசிம் மரக்காயர் பெரும் கப்பல் வணிகராக விளங்கினார்.

ஷேக் அப்துல்காதிறு செய்தக் காதிறு மரக்காயர்-வள்ளல் சீதக்காதி என்று போற்றப் படும் பெரியதம்பி மரக்காயர் தமிழக முஸ்லிம் களின் கடல் வாணிப வரலாற்றில் மிகச்சிறப் பானதொரு இடத்தைப் பெறுகிறார். இவர் ஒரு பெரும் வள்ளல். புலவர்களுக்கு புரவலர், செய்தக் காதிறு மரக்காயர் திருமண வாழ்த்து, சீதக்காதி நொண்டி நாடகம் ஆகிய இஸ்லாமிய சிற்றிலக் கியங்கள் இவரது புகழைப் போற்றுகின்றன.

இவரை 17-ம் நூற்றாண்டின் மிகப்பெரிய வணிகர் (Commercial Magnate of 17th Century) என்றும், துறைமுகங்களின் இளவரசர் (Prince of Ports) என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் புகழ்ந்துரைக்கின்றனர். வரலாற்றின் இருளில் புதைந்துபோன இந்த தமிழ்ப் பெரு மகனின் வரலாறு குறித்து மேலும் ஆய்வு செய்வது நமது கவனத்தில் உள்ளது. - **தொடரும்**



# டெல்லி கலவரம்
# THE CONCLUSION

வடகிழக்கு டெல்லியில் வன்முறை வெடிப்பதற்கு முன்னர் நடந்த மற்றும் அதை ஒட்டி நடந்த நிகழ்வுகள் குறித்த எங்கள் ஆய்வானது, இந்த கலவரம் ஒன்றோடொன்று இணைந்த காரணிகளின் விளைவு என்பதைக் காட்டுகிறது.

2020 பிப்ரவரியின் அந்த துரதிர்ஷ்டவசமான வாரத்தில் நடந்த நிகழ்வுகளின் குறுகிய கண்ணோட்டத்தின் மூலம் மட்டும் இந்த வன்முறையைப் பார்க்காமல், மாறாக திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட பிளவுபடுத்தும் சமூகங்களுக்கிடையேயான வெறுப்பின் துயரமான உச்சக்கட்டம் என்பதை அங்கீகரிக்க வேண்டும். அதன் குறிப்பிடத்தக்கப் பிந்தைய விளைவுகள் இன்றுவரை நீடிக்கின்றன.

வன்முறைக்கு இட்டுச் சென்ற பல்வேறு காரணிகளை ஆராய்வதில், இந்தக் குழு பரந்த தாக்கங்களைக் கொண்ட பல்வேறு காரணிகளை கண்டறிந்துள்ளது. பிரதான முடிவுகளுடன் அவை கீழே சுருக்கப்பட்டுள்ளன:

வன்முறைக்கான வழிகள்: முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வை பரப்புதல்

## அரசியலில் வெறுப்புப் பிரச்சாரம்

அறிக்கையில் தெளிவாகத் தெரிவது போல, வன்முறைக்கு முந்தைய மாதங்களில் அரசியல் உரைகளிலும் தேர்தல் பிரச்சாரங்களிலும் சிஏஏ எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்கு எதிராகவும், பரவலாக முஸ்லிம்களுக்கு எதிராகவும் வெறுப்புப் பிரச்சாரம் ஒரு நிலையான அம்சமாக இருந்துள்ளது.

பிரபலமாக கபில் மிஸ்ரா மற்றும் அனுராக் தாக்கூர் உள்ளிட்ட பாஜக செயல்பாட்டாளர்களின் பேச்சுகள், அறிக்கைகள் மற்றும் கோஷங்கள் போராட்டக்காரர்களை தேசத்து ரோகிகள், எதிரிகள் மற்றும் வன்முறையைத் தூண்டுபவர்கள் என்று ஒரு பிளவுபடுத்தும் இந்து-முஸ்லீம் இருமைக்குள் வகைப்படுத்தின.

“கோலி மாரோ” என்ற கோஷம் மூலம் தேசத்துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்களுக்கு எதிராக வன்முறைக்கான அழைப்புகள், எந்தவிதமான கண்டனமும் இன்றி, தேர்தல் பேரணிகள், பொது ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மக்கள் கூட்டங்களில் அரசியல் தலைவர்களால் மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டன.



மேலும் டெல்லி உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட சில அரசியல் தலைவர்களின் பேச்சுகள் மற்றும் கூற்றுகளை "வெறுப்புப் பேச்சு" என்ற குற்றத்தின் வரம்புக்குள் வருவதாகவே விவரித்துள்ளது.

### ஊடகங்களில் வெறுப்பு பரப்புரைகளை பலப்படுத்துதல்

ஐந்தாம் அத்தியாயம், ஆய்வு செய்யப்பட்ட காலத்தில் அதிகம் பார்க்கப்பட்ட ஆறு செய்திச் சேனல்கள் போன்ற தொலைக்காட்சி ஊடகங்களின் பிரிவுகள், 2019 டிசம்பரில் தொடங்கி 2020 வரை நீடித்த, சிஏஏ எதிர்ப்புப் போராட்டக்காரர்களையும், முஸ்லிம்களையும் இலக்காகக் கொண்ட அரசியல்வாதிகளின் வெறுப்புப் பரப்புரையை எவ்வாறு எதிரொலித்தன என்பதை வெளிப்படுத்துகிறது.



யதி நரசிங்கானந்த் மற்றும் ராகிணி திவாரி போன்ற இந்து தேசியவாத தலைவர்கள், அத்துடன் உள்ளூர் பாஜக கட்சி ஊழியர்கள், சமூக ஊடக தளங்கள் மூலம் வெறுப்புச் செய்திகளை மேலும் பரப்பினர்.

ஆறாம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, பிளவுபடுத்தும் இந்து-முஸ்லீம் கதையாடல்கள் மற்றும் வன்முறைக்கான அழைப்புகளைப் பரப்புவதற்கு Facebook, WhatsApp மற்றும் YouTube ஆகியவை பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த அறிக்கையில் வழங்கப்பட்ட எடுத்துக்காட்டுகள் பரவலாகப் பகிரப்பட்ட வெறுப்பூட்டும் உள்ளடக்கத்தின் ஒரு சிறிய மாதிரி மட்டுமே என்பது கவலைக்குரிய விஷயமாகும்.

### வன்முறைக்கு உகந்த சூழலை உருவாக்குதல்

ஆய்வு செய்யப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில், வெறுப்பு பிரச்சாரங்களை திட்டமிட்டு பரப்பியதின் மூலம், முஸ்லீம் சமூகத்திற்கு எதிரான வன்முறைக்குத் தூண்டுதலையும், அழைப்புகளையும் ஏற்றுக்கொள்ளும் ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு கணிசமாகப் பங்களித்தது என்று இந்தக் குழு முடிவு செய்கிறது.

தேர்தல் ஆணையம், ஊடக ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் டெல்லி காவல்துறை ஆகியவை வெறுப்புப் பேச்சுக்கு எதிரான குறைந்த அளவிலான நடவடிக்கைகள் அத்தகைய சூழ்நிலையை மேலும் மோசமாக்கியது. சிஏஏ எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் மீதான துப்பாக்கிச் சூடு முயற்சிகள் - போன்ற வரவிருக்கும் வன்முறையின் முக்கிய எச்சரிக்கை அறிகுறிகள் கவனிக்கப்படாமல் விடப்பட்டன.

### வன்முறையின் கூறுகள்

வன்முறையின் மைய இயல்பு குறித்த ஒரு பரந்த பார்வையை முன்வைப்பதற்கும், அதன் வேரில் உள்ள பங்களிப்புக் காரணிகளை விளக்குவதற்கும் வன்முறையின் சிறப்பியல்புகளை நாங்கள் அடையாளம் காண்கிறோம்.

### வன்முறையின் பின்னிப்பிணைந்த வேர்கள்

பிப்ரவரி 23 அன்று வன்முறை முதலில் வெடித்தபோது, அது மௌஜ்பூர்-ஜாஃப்ராபாத் முழுவதும் சிஏஏ ஆதரவு மற்றும் எதிர்ப்பு முகாம்களுக்கு இடையில் நடந்ததாகத் தோன்றியது. இருப்பினும், இந்த நேரத்திற்குள்,


சிஏஏ எதிர்ப்புப் போராட்டங்களை நிலையாக இழிவுபடுத்துவது, போராட்டக்காரர்களையும் முஸ்லிம்களையும் மிக நெருக்கமாக இணைத்திருந்தது, இதன் காரணமாக ஒருபுறம் சிஏஏ எதிர்ப்புப் போராட்டங்களுக்கு எதிரான நிலைப்பாடும், மறுபுறம் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பும் கலந்தது.

சிஏஏ-க்கு எதிரான முஸ்லிம்களின் சமூக - அரசியல் வலியுறுத்தலை, இந்து அடையாளத் திற்கு அச்சுறுத்தலாகக் கருதுவதுடன் போராட்டங்களுக்கு எதிரான எதிர்ப்புக் குணம் ஒன்று சேர்ந்தது. இது பிப்ரவரி 23 அன்று தீவிரமடைந்தது.

கபில் மிஸ்ரா மற்றும் ராகிணி திவாரி போன்ற பொதுப் பார்வையில் உள்ள நபர்களால் திரளுவதற்கான பரந்த அழைப்புகள் விடுக்கப்பட்டன. இந்த பிளவுபடுத்தும் இயக்கவியல் உள்ளூர் அளவில் மக்களைத் திரட்டவும், அழுத்தத்தை உருவாக்கவும் பயன்படுத்தத் தொடங்கியது, தலைவர்கள் தங்கள் ஆதரவாளர்களை பலத்தைக் காட்டவும் நேரடி நடவடிக்கை எடுக்கவும் தூண்டினர். பிப்ரவரி 23க்குள், களத்தில் நிலமை சமூக வன்முறை வெடிப்பதற்குத் தயாராக இருந்தது.

வன்முறைக்கு முந்தைய கட்டமைப்புக்கு வேராக இருந்த முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு, உண்மையான வன்முறைச் சம்பவங் களுக்கும் தொடர்ந்தது. தனிநபர்கள், வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் என முஸ்லீம் அடையாளம் இலக்கு வைக்கப்பட்டது.

வகுப்புவாத வன்முறையின் சிக்கலான இயக்கவியலில், வன்முறை அதிகரித்தபோதும், இரு தரப்பு கும்பல்களும் மோதிக்கொண்ட போதும் இது ஒரு தொடர்ச்சியான இழை யாகவே இருந்தது. இலக்கு வைக்கப்பட்ட வன்முறை மற்றும் பொதுவான வன்முறை ஆகியவற்றின் இந்த கலவையானது இரு சமூகங்களிலும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது, இதில் 40 முஸ்லிம்கள் மற்றும் 13 இந்துக்கள் கொல்லப்பட்டனர். இந்த வன்முறை வெளிப் படையான காவல்துறையின் உடந்தையால் மேலும் தீவிரமடைய உதவியது, இது தொடர்பான குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அத்தியாயம் 3ல் பட்டியலிடப்பட்டுள்ளன.


Pandit Ankit Tiwari is with Bajrang Dal New Kondli and 9 others.
February 24 at 7:23 PM · Facebook for Android
jay shree ram bhaio ab samay aagya he aar par ki ldayi ka ab bhi delhi hath se nhi nikli bhaio jha jha hindu ikhta he vha vha pahucho me jaffrabad pahuch chuka hu mera live block he so video upload karunga puri raat rahunga
jay Shree ram
See Translation

வன்முறையின் ஒரு குறிப்பிடத்தக்க அங்கமாக, "சிஏஏ எதிர்ப்புப் போராட்டக் களங்களை இலக்கு வைத்தல் என்பது இருந்தது".. பிப்ரவரி 23 முதல் 26 வரை, சாந்த்பாக், கர்தம்புரி, ஜாஃப்ராபாத், முஸ்தபாபாத் மற்றும் கஜூரி காஸ் உட்பட வடகிழக்கு டெல்லி முழுவதும் இருந்த சிஏஏ எதிர்ப்பு தொடர் போராட்டத் தளங்கள் தாக்கப்பட்டு படிப் படியாக கலைக்கப்பட்டன.

## விளைவுகள்

திட்டமிட்டு உருவாக்கப்பட்ட வெறுப்பு, அரசின் பங்குதாரர்களின் உடந்தையோடு, ஒரு உறுதியான பிரிவினைவாதத்தை நிலைநிறுத்தும் முயற்சி வன்முறையில் உச்சக்கட்டத்தை




vaigarai velicham official

அடைந்தது என்பது எங்கள் கருத்து.

சமூக உறவுகளை மாற்றியமைக்கும் இந்த முயற்சியில், முஸ்லிம் அடையாளம் மற்றும் முகமைத் திறன் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்பட்டுள்ளது. வெறுப்பு அரசியல், சமூக அமைப்பில் ஊடுருவுவதன் தவிர்க்க முடியாத விளைவு இது.

## அரசுத் தவறுகளுக்குப் பொறுப்பேற்பதைக் கோருதல்

டெல்லியில் இருக்கும் மாநில மற்றும் மத்திய நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கான பயணத்தின் எளிமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, டெல்லியில் வகுப்புவாத வன்முறையைத் தவிர்க்கவும், உடனடியாகக் கட்டுப்படுத்தவும் வேண்டும் என்பது ஒரு நியாயமான எதிர்பார்ப்பு. இந்தியாவின் தலைநகரமான - மத்திய அரசு மற்றும் டெல்லி அரசாங்கம் இரண்டின் இருக்கை - ஒரு மாவட்டத்திலேயே நான்கு நாட்களுக்கு பெரும் வன்முறை நடந்தது என்பதே அரசியலமைப்பு கடமைகளில் கண்மூடித்தனமான தோல்விகளைக் குறிக்கிறது.

## டெல்லி காவல்துறை

நகரத்தின் பிரதான சட்ட அமலாக்க அமைப்பாக, வெளிப்படையான வன்முறைக்கான அறிகுறிகளுக்குப் பதிலளிப்பது, அதன் வெடிப்பைத் தடுப்பது, பின்னர் அது ஒரு பாரிய வன்முறைச் சூழலாக மாறுவதைக் கட்டுப்படுத்துவது ஆகியவை டெல்லி காவல் துறையின் பங்காகும். அறிக்கையில் பகுப்பாய்வு செய்யப்பட்ட ஆதாரங்கள், 2020 ஜனவரியில் இருந்தே பதட்டமான கட்டமைப்பைக் குறிக்கும் போதுமான எச்சரிக்கை அறிகுறிகள் இருந்தபோதிலும், டெல்லி காவல்துறை வன்முறையைத் தடுக்கத் தவறிவிட்டது என்பதைக் காட்டுகிறது. பல்வேறு அளவுகளில் காவல்துறையின் உடந்தைச் சம்பவங்களும் இருந்தன.

## வன்முறையைத் தடுப்பதில் காவல்துறையின் தோல்வி

டெல்லி காவல்துறை சட்டம், 1978, டெல்லி காவல்துறை ஆணையருக்கு கலவரங்கள் அல்லது பொது ஒழுங்கிற்கு குந்தகம் ஏற்படுவதைத் தடுக்க பலவிதமான தடை அதிகாரங்களை வழங்குகிறது. பொது ஒழுங்கைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் கத்திகளை எடுத்துச் செல்வதைத் தடை செய்யும் உத்தரவுகள், மற்றும் நபர்கள் ஒன்று கூடுவதைத் தடை செய்யும் உத்தரவுகள் இதில் அடங்கும்.




சட்டத்தின் பிரிவு 33, கலவரத்தைத் தடுப்பதற்கும் அல்லது "அமைதிக்கு கடுமையான குந்தகம் ஏற்படுவதைத்" தடுப்பதற்கும் உத்தரவுகளைப் பிறப்பிக்க காவல்துறை ஆணையருக்கு குறிப்பிட்ட அதிகாரங்களை வழங்குகிறது. அதேபோல், குற்றவியல் நடைமுறைச் சட்டம் அத்தியாயம் 10இல் பலவிதமான தடுப்பு அதிகாரங்களைக் குறிப்பிடுகிறது, இது டெல்லி காவல்துறை சட்டம், 1978இன் பிரிவு 70இன் அடிப்படையில் டெல்லி காவல்துறைக்குச் சேர்கிறது.

இருப்பினும், பிப்ரவரி 23க்கு முந்தைய நாட்களில் கட்டப்பட்ட பிளவுபடுத்தும் சூழ்நிலையை சமாளிக்க எந்தவொரு தடுப்பு அல்லது தண்டனை நடவடிக்கைகளையும் காவல்துறை எடுக்கத் தவறிவிட்டது. பிப்ரவரி 23 அன்று வடகிழக்கு டெல்லியில் வரவிருக்கும் பிரச்சனைகள் குறித்த உள் ஆதாரங்களிலிருந்து உளவுத்துறை எச்சரிக்கைகளை காவல்துறை பெற்றிருந்தது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

பிப்ரவரி 23 அன்று மௌஜ்பூரில் ஆற்றிய தனது உரையில், கபில் மிஸ்ரா, கூட்டத்தை இரண்டு நாட்களுக்குள் அப்புறப்படுத்துமாறு காவல்துறையை எச்சரித்தார்; தவறினால் நேரடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். பின்னோக்கிப் பார்க்கும்போது, இந்த இறுதி எச்சரிக்கை வன்முறைக்கு

உடனடித் தூண்டுதலாக அமைந்தது என்பது தெளிவாகிறது. கபில் மிஸ்ரா இந்தப் பேச்சை வடகிழக்கு மாவட்ட DCP முன்னிலையில் வழங்கினார். இருப்பினும், காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேபோல், வன்முறை ஏற்கனவே மாவட்டத்தை ஆட்கொண்டிருந்தபோது, காவல்துறை ஊரடங்கு உத்தரவை ஒரு நாள் தாமதமாக அறிவித்தது. ஊரடங்கு விதிக்கப்பட்டபோதிலும் தாக்குதல்களும் வன்முறைச் செயல்களும் தொடர்ந்ததால் இது பலனற்றதாக நிரூபிக்கப்பட்டது.

## வன்முறையில் காவல்துறையின் உடந்தை

இந்த அறிக்கையின் அத்தியாயம் 3, வன்முறைச் செயல்களில் காவல்துறை பணியாளர்களின் ஈடுபாடு கொண்ட நிகழ்வுகளைப் பதிவு செய்கிறது. இந்த விளக்கங்கள் நேரில் கண்ட சாட்சிகள், ஊடகங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களின் வன்முறை குறித்த கணக்குகளால் ஆதரிக்கப்படுகின்றன.

பிப்ரவரி 24 அன்று, வெளிப்படையான காவல்துறையின் உடந்தைக்கான பல நிகழ்வுகள் பதிவாகியுள்ளன: சாந்த்பாக்கில் உள்ள சிஏஏ எதிர்ப்புப் போராட்டத் தளத்தைத் தாக்கிய கும்பலுடன் காவல்துறை காணப்பட்டது;

கர்தம்புரியில் உள்ள சிஏஏ எதிர்ப்புப் போராட்டக்காரர்களின் கூடாரத்தின் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியது; யமுனா விகாரில் முஸ்லிம் பெயரைக் கொண்ட ஒரு கடையின் மீது கற்களை வீசுவதற்கும், சேதப்படுத்துவதற்கும் கும்பல்களை ஊக்குவித்தது.



பிப்ரவரி 24 அன்று பொதுமக்கள் முன்னிலையில் காவல்துறை ஃபைசானையும் (அவரது மரணத்திற்கு இட்டுச் சென்றது) மற்றும் மேலும் நான்கு முஸ்லீம் ஆண்களையும் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இது பாரபட்சத்தால் உந்தப்பட்ட காவல்துறை அதிகார துஷ்பிரயோகத்தின் ஒரு முதன்மை எடுத்துக் காட்டு.

பிப்ரவரி 25 அன்று பிரிஜ்புரியில் உள்ள ஃபாரூக்கியா மசூதியில் வழிபாட்டாளர்களையும் முஅத்தினையும் காவல்துறை அடிப்பது போன்ற ஆவணப்படுத்தப்பட்ட சாட்சியம் மற்றும் காணொளி காட்சிகள் உள்ளன.

பிப்ரவரி 26 அன்று கூரேஜி காஸ் போராட்டத் தளத்தை அகற்றும்போது காவல்துறை பணியாளர்கள் சிஏஏ எதிர்ப்புப் போராட்டக்காரர்களைத் தாக்கியதாகவும், தடுத்து வைக்கப்பட்டவர்கள் தங்கள் வழக்கறிஞர்களைச் சந்திப்பதைத் தடுத்ததாகவும் கூறப்படுகிறது. காவல்துறையின் ஈடுபாடு குறித்த இந்தக் குறைந்த அளவிலான, ஆனால் நம்பகமான தகவல்கள் இதுவரை பொது வெளியில் வந்துள்ளன, மேலும் பலவற்றை இன்னும் வெளிக்கொணர வேண்டியிருக்கலாம்.

வன்முறையைத் தடுக்க டெல்லி காவல்துறை தவறிவிட்டது என்று இந்த குழு கருதுகிறது. மேலும் வன்முறையில் பல்வேறு அளவுகளில் காவல்துறை உடந்தையாக இருந்த நிகழ்வுகள் குறித்து தீவிர கவலையை வெளிப்படுத்துகிறது.

திறம்பட தடுப்பு நடவடிக்கை இல்லாதது ஒரு செயலற்ற உடந்தையாக உள்ளதா என்பதையும் சேர்த்து, உடந்தையின் முழு அளவையும் தன்மையையும் தீர்மானிக்க காவல்துறையின் பங்கு மிகவும் விமர்சனரீதியாக ஆராயப்பட வேண்டும். அதற்காக, விசாரணையானது டெல்லி காவல்துறையைத் தவிர வேறு ஒரு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். மேலும் அது உள்துறை அமைச்சகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடாது. குழுவின் பார்வையில், நீதிமன்றத்தால் கண்காணிக்கப்படும் விசாரணை மூலம் மட்டுமே காவல்துறையின் உடந்தையை முறையாக விசாரிக்க முடியும்.


vaigarai velicham official

### உள்துறை அமைச்சகம், இந்திய அரசு

டெல்லியின் தேசிய தலைநகர் பிரதேசத் திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியலமைப் புத் திட்டத்தின்படி, உள்துறை அமைச்சகத்திடம் (MHA) டெல்லி காவல்துறையின் கட்டுப்பாடு உள்ளது. மேலும், உள்துறை அமைச்சகம் மத்திய துணை ராணுவப் படைகளையும் மேற்பார்வை யிடுகிறது. இந்தக் முக்கியமான பாத்திரங்களுடன், டெல்லி மக்களின் வாழ்க்கை மற்றும் சொத்துக் களைப் பாதுகாக்கும் முதன்மைப் பொறுப்பு மத்திய அரசிடம் உள்ளது. அதன் கட்டுப் பாட்டில் உள்ள அனைத்து வளங்கள் இருந்த போதிலும், வடகிழக்கு டெல்லியில் வன்முறை யைக் கட்டுப்படுத்த உள்துறை அமைச்சகத்தின் தலையீடுகள் தோல்வியடைந்தன. நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளால் மீண்டும் மீண்டும் அளிக்கப்பட்ட உறுதி மொழிகள் களத்தில் வன்முறையின் வேகம் மற்றும் தெரிவுநிலையுடன் பொருந்தவில்லை.

### காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படைகள் போதுமான அளவு பங்களிப்பை தந்தனவா?

டெல்லியில் போதுமான காவல்துறை பாதுகாப்பை உறுதி செய்வதில் உள்துறை அமைச்சகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. தேவைப்படும்போதெல்லாம் மத்திய துணை ராணுவப் படைகளுக்கு உத்தரவிட முடியும் என்றாலும், வன்முறையின் ஆரம்ப கட்டத்தில் வடகிழக்கு டெல்லியில் அதிகமாக தேவைப் பட்ட காவல்துறையின் இருப்பை உறுதி செய்ய உள்துறை அமைச்சகம் தவறிவிட்டது என்று தெரிகிறது. இது வன்முறை அதிவேகமாகப் பரவுவதற்கு ஒரு முதன்மையான காரணியாக இருந்தது.

பிப்ரவரி 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் அதிக காவல்துறையினர் தேவை குறித்து காவல்துறை மற்றும் அரசியல் தலைவர்களால் அறிவிப்புகள் செய்யப்பட்டாலும், அதிகரித்த காவல்துறையினர் எண்ணிக்கை பிப்ரவரி 26 அன்று மட்டுமே நடந்தது என்று அதிகாரப்பூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

FIR 59/2020இல் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில், டெல்லி காவல்துறை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) வடகிழக்கு, கிழக்கு மற்றும் ஷாதரா காவல் மாவட்டங்களுக்கு வன்முறை நாட்களில் அனுப்பப்பட்ட விவரங்களைக் காட்டும் ஒரு விளக்கப்படம் உள்ளது. காவல்துறை நிலையங் களுக்கு அதிகபட்சமான அழைப்புகள் பெறப் பட்ட பிப்ரவரி 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில், காவல்துறை பணியாளர்களின் எண்ணிக்கை சரியான முறையில் அதிகரிக்கப்படவில்லை என்பதைக் காட்ட இது ஒத்துப்போகிறது.




உண்மையில், பிப்ரவரி 24 அன்று சிவில் காவல்துறை மற்றும் துணை ராணுவப் பணியாளர்கள் ஆகிய இருவரின் எண்ணிக்கையும் பிப்ரவரி 23ஐ விட குறைவாகவே இருந்தது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர், "நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது" என்று அறிவித்த நாளான பிப்ரவரி 26 அன்று மட்டுமே காவல்துறை பணியாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டது.

### புறக்கணிக்கப்பட்ட எச்சரிக்கைகள்

பிப்ரவரி 23 முதலே கூடுதல் படையை நிலைநிறுத்துமாறு காவல்துறை உள் எச்சரிக்கைகள் அறிவுறுத்திய நிலையில், இந்த இடைவெளி (படைக்குறைவு) மேலும் அதிகரிக்கிறது. டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு மற்றும் உளவுத்துறைப் பிரிவே பிப்ரவரி 23, ஞாயிற்றுக்கிழமை, வடகிழக்கு மாவட்டம் மற்றும் காவல்துறை தலைமைக்கு கம்பியில்லா (wireless radio) செய்திகள் மூலம் "குறைந்தது ஆறு" எச்சரிக்கைகளை அனுப்பியது.

கபில் மிஸ்ரா தனது ஆதரவாளர்களை மாலை 3 மணிக்கு மௌஜ்பூர் சவுக் பகுதியில் கூட அழைப்பு விடுத்து ட்வீட் செய்த பிறகு,




முதல் எச்சரிக்கை அப்பகுதியில் படைக் குவிப்பு மற்றும் காவல்துறை இருப்பை அதிகரிக்க அறிவுறுத்தியது. மௌஜ்பூரில் கல்வீச்சு தொடங்கிய பின்னரும், கும்பல்கள் திரள்வது காணப்பட்ட பின்னரும் மேலும் எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டன.

### விளைவுகள்

காவல்துறை உதவியை நாடிய மக்களுக்கு குறைவான அல்லது எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. ஒரு பத்திரிகை ஆய்வு, வன்முறையின் நான்கு நாட்களிலும் டெல்லி காவல்துறைக்கு சுமார் 13,200 அழைப்புகள் வந்துள்ளதாகவும், அழைப்புகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வந்ததாகவும் வெளிப்படுத்தியது.

### தேதி/ பெறப்பட்ட அழைப்புகளின் எண்ணிக்கை

பிப்ரவரி 23 - 700 அழைப்புகள்

பிப்ரவரி 24 - 3,500 அழைப்புகள்

பிப்ரவரி 25 - 7,500 அழைப்புகள்

பிப்ரவரி 26 - 1,500 அழைப்புகள்

இருப்பினும், இந்த அழைப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த காவல் நிலையப் பதிவேடுகள் வெற்றுத் தாளாக காணப்பட்டன. வன்முறையின் ஒவ்வொரு நாளிலும், அக்கம் பக்கத்தினர், பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களில் இருந்து வந்த அழைப்புகளுக்கு காவல்துறை பதிலளிக்காத பல நிகழ்வுகளை அத்தியாயம் 3 பதிவு செய்துள்ளது.

ஆரம்பத்தில் கையில் இருந்த தகவல்களுடன் ஒப்பிடுகையில், காவல்துறை தலைமை மற்றும் உள்துறை அமைச்சகம்(MHA) காவல்துறை மற்றும் பாதுகாப்புப் படைகளின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்காதது ஒரு கடுமையான தோல்வியாகும். டெல்லியில் பாதுகாப்புப் படையை எவ்வளவு விரைவாக நிலைநிறுத்த முடியும் என்பதற்கு டெல்லியில் நடந்த சமீபத்திய நிகழ்வுகள் சாட்சியமளிக்கின்றன.

ஏப்ரல் 2022இல் ஜஹாங்கீர்புரியில் (வடமேற்கு டெல்லி) ஒரு வகுப்புவாத வன்முறைச் சம்பவத்தைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான காவல்துறை மற்றும் கூடுதல் துணை ராணுவப் படைகள் விரைவாகவும் தொடர்ச்சியாகவும் நிலைநிறுத்தப்பட்டன. அப்பகுதியில் இடிப்பு நடவடிக்கைக்குத் தயாராக, காவல்துறை ஒரே இரவில் கிட்டத்தட்ட 1500 காவல்துறை பணியாளர்களைத் திரட்டியது (400 பேருக்கு கோரிக்கை இருந்ததற்கு எதிராக); கூடுதலாக, மத்திய ரிசர்வ் போலீஸ் படை மற்றும் இந்தோ-திபெத்திய எல்லைப் படையின் சில நிறுவனங்கள் வழங்கப்பட்டன. இதுபோன்ற தயாரிப்பு சாத்தியமாக இருக்கும்போது, பிப்ரவரி 23, 2020 அன்று வடகிழக்கு டெல்லியில் ஏன் தேவையான படைக் குவிப்பை உறுதி செய்ய முடியவில்லை என்பது விளக்க முடியாததாக உள்ளது.



இந்த நிலைமை, மத்திய அரசு அதன் வளங்கள் மற்றும் திறனுக்கு ஏற்றவாறு வன்முறைக்கு பதிலளிக்கத் தவறியது குறித்து ஒரு கடுமையான கணக்கறிக்கையைக் கோருகிறது. வன்முறை வெடித்ததில் இருந்தும், வன்முறை நாட்களிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் அறியப்பட்ட உளவுத்துறை, எச்சரிக்கைகள், மொத்த காவல்துறை மற்றும் பிற பாதுகாப்புப் படைகளின் வலிமை ஆகியவற்றைக் குறித்து ஒரு விரிவான, சுதந்திரமான ஆய்வு அவசரமாகத் தேவை என்று இந்த குழு முடிவு செய்கிறது.

## 14. டெல்லி அரசு

இந்த முழு நேரத்திலும், இரு சமூகங் களுக்கிடையே மத்தியஸ்தம் செய்ய டெல்லி அரசு மிகக் குறைவாகவே முயற்சி செய்தது என்று இந்த குழு கண்டறிந்துள்ளது, எச்சரிக்கை அறிகுறிகள் இருந்தபோதிலும் கூட. டெல்லி காவல்துறையின் மீதான நிர்வாகக் கட்டுப்பாடு மத்திய அரசிடம் இருப்பதால் வன்முறையைக் கட்டுப்படுத்தும் டெல்லி அரசின் திறன் குறைவாக இருந்தாலும்; அது நிலைமையை அமைதிப்படுத்த தவறிவிட்டது. கலவரத்தின் ஒரு சில நாட்களுக்கு முன்பு அமோக வெற்றியுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும் அதன் பிரபலமான முதலமைச்சரும், தங்கள் வலிமையான ஆணைக்கு ஆதரவாகத் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வதற்குப் பதிலாக, முற்றிலும் பயனற்ற, உதவியற்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

கூடுதலாக, நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்குவதற்கு நேரடியாகப் பொறுப்பான டெல்லி அரசு, இந்தப் பாத்திரத்தை அர்த்தமுள்ள வழியில் நிறைவேற்றத் தவறிவிட்டது. வன்முறை நாட்களில் அரசு நிறுவனங்கள் பயனுள்ள நிவாரணத்தை வழங்கத் தவறிவிட்டன. போதுமான நிவாரண முகாம்கள் இல்லாதது மற்றும் ஈத்கா முகாமை திடீரென மூடியது ஆகியவை பல பாதிக்கப்படக்கூடிய மக்களை தங்குமிட அணுகல் இல்லாமல் தவிக்க விட்டிருக்கும்.



வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட தீங்கு மற்றும் இழப்புகளுக்கு விரைவான இழப்பீடு வழங்குவதை உறுதி செய்வது டெல்லி அரசின் பொறுப்பாகும். இருப்பினும், இழப்பீட்டின் ஒப்புதல் வழங்குவதில் உள்ள சிரமங்கள் மற்றும் தாமதங்களால் நிறைந்துள்ளது. முடிவுகள் எடுக்கப்பட்ட இடங்களில், இழப்பீட்டுத் தொகைகள் ஏற்பட்ட தீங்குடன் பொருந்தாத அல்லது போதுமான அடிப்படை இல்லாமல் இழப்பீடு நிராகரிக்கப்பட்ட கவலைக்குரிய வடிவங்களில் உள்ளன.

## விசாரணை ஆணையத்தின் தேவை

காரணிகள் மற்றும் மாநிலத் தவறுகளின் ஒரு கலவையானது, வடகிழக்கு டெல்லியில் ஏற்பட்ட வன்முறையைத் தடுக்க முடியவில்லை, மேலும் அது தொடங்கியவுடன் பரவுவதைத் தடுக்க முடியவில்லை என்ற சூழ்நிலைக்கு இட்டுச் சென்றது. முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புரைகள் மற்றும் வன்முறையைத் தூண்டும் கூற்றுகள் பலதரப்பட்ட நடிகர் களிடமிருந்து வெளிவந்தன. அவர்களுக்கு ஒரு சில மாதங்களுக்கு தடையற்ற சுதந்திரம் வழங்கப்பட்டது. வன்முறையில் காவல்துறை யின் உடந்தையாக இருந்ததற்கான ஆவணப் படுத்தப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன. மத்திய மற்றும் மாநில அரசுகள் உயிர்கள், சொத்து மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான தங்கள் புனிதமான கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டன. வன்முறை நடந்து இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும்(இப்போது ஐந்து ஆண்டுகள்), பொறுப்புக்கூறல் குறித்த வெளிப்படையான சிக்கல்கள் தீர்க்கப்படாமல் உள்ளன.

இந்தக் குழு, வன்முறைக்கு இட்டுச் சென்ற காரணிகள் மற்றும் அதன் பின்னணியில் உள்ள பொறுப்புக்கூறல் மற்றும் இழப்பீடு குறித்த சிக்கல்களை நிலைநிறுத்த ஒரு விசாரணை ஆணையம் அமைக்கப்பட வேண்டும் என்று கருதுகிறது. அத்தகைய ஒரு ஆணையம், அதன் செயல்பாட்டின் மூலம் உண்மையைக் கண்டறிவதன் மூலம் சட்டத்தின் ஆட்சியில் நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கான நடவடிக் கைகளை எடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். முன்மொழியப்பட்ட விசாரணை ஆணையத்தின் அதிகார வரம்புகள் மற்றும் தலைவரைத் தேர்ந்தெடுப்பது அதன் சுதந்திரமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டை பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உறுதிப்படுத்துவது மிக முக்கியம்.

## அமைதியான போராட்டத்தை ஒடுக்குதல் என்பது!

டெல்லியில் சிஏஏ எதிர்ப்புத் தொடர் போராட்டங்களை இலக்கு வைத்து அப்புறப் படுத்தியதை, ஒரு தனிப்பட்ட நிகழ்வாக காண முடியாது. வன்முறையைப் பயன்படுத்துவது போராட்டச் செயலின் மீதே ஒரு பயமுறுத்தும் விளைவை ஏற்படுத்துகிறது.

அமைதியான முறையில் கூடும் உரிமை இந்திய அரசியலமைப்பின் பிரிவு 19-இன் கீழ் ஒரு அடிப்படை உரிமையாக நிலைநிறுத்தப் பட்டுள்ளது. ஒரு ஜனநாயகத்திற்கு உட்பட்ட அரசுக்கும், குடிமக்களுக்கும் இடையிலான உரையாடலில், போராட்டச் சட்டம் என்பது குடிமக்கள் அரசுடன் பேசுவதற்கான ஒரு சக்திவாய்ந்த வழியாகும். இந்தியாவின் ஜனநாயக நெறிமுறைகளில் பெரும் பகுதி, சுதந்திரத்தில் இருந்து இன்றுவரை, அனைத்துத் தரப்பு மக்களும் மற்றும் பல்வேறு காரணங்களுக் காகவும் தனிநபர்கள் மற்றும் குழுக்களின் போராட்டத்தை மேற்கொள்வதன் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரசால் குடிமக்களுடன் ஜனநாயக ஈடுபாடு இல்லாததன் விளைவே பெரும்பாலும் போராட்டத்தை நாடுவதாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சிஏஏ-க்கு எதிரான போராட்டங்கள் ஒரு உதாரணம். மத்திய அரசு, குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில், CAA-NRC மூலம் தாங்கள் வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும் என்று கருதிய சமூகப் பிரிவுகளால் வெளிப்படுத்தப்பட்ட கடுமையான அச்சங்களைப் பற்றி பேசவோ அல்லது விவாதிக்கவோ எந்த முயற்சியும் அரசால் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், போராட்டம் மட்டுமே அந்த சமூகங்கள் வாதிடுவதற்கு எஞ்சியிருந்த ஜனநாயக வழியாகும். அமைதியான முறையில் கூடும் மற்றும் போராடும் உரிமையை சந்தேகத்திற்கிடமின்றிப் பாதுகாக்க வேண்டும் என்றும், போராட்ட உரிமையைத் தடுக்கும் வன்முறைப் பழிவாங்கல்களுக்கு எதிராகத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த குழு அரசு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

முடிவாக..!

இந்த வகுப்புவாத நிகழ்வு, இந்தியா போன்ற ஒரு பன்முக கலாச்சார சமூகம் அதன் பன்முகத்தன்மையை ஒரு பலமாக உருவாக்கி ஒழுங்கு மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்கக் கூடிய உள் செயல்முறைகளை பின்னுக்குத் தள்ளியுள்ளது என்பதே எங்கள் கருத்து.

பேசுதல், அமைதியான முறையில் போராடும் வழிகள், ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பின் வடிவங்கள் ஆகியவை, பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயக அரசியலில் ஒரு பாதையைக் கண்டறிய அத்தியாவசிய வழிமுறைகள் ஆகும். சகோதரத்துவம், சமத்துவம் மற்றும் சுதந்திரத்தின் இணைந்த நடைமுறையில் அடைக்கலம் கொண்ட நீதியை நோக்கி அரசு இயந்திரங்கள் செயல்படுவது மட்டுமே முன்னோக்கி செல்லும் ஒரே வழியாகும். முற்றும்!

Source: UNCERTAIN JUSTICE a Citizens Committee Report on the North East Delhi Violence 2020

*தமிழில்:* **Adv. Jasmine Fathima.**





vaigarai velicham official

# பூமிக்குள் வெற்றிடம்

**- ரஹ்மத் ராஜகுமாரன்**

**என் ஆய்வு : "Computing system of Quranic verse and words"**

கணிதவியலில் ஆய்வு செய்து கொண்டிருக்கும் M.Sc., Maths - மாணவி (பெயர் குறிப்பிட வேண்டாம் என்றார்)

"உங்களது ஆய்வு "Computing system of Quranic verse and words" - (குர்ஆனின் வசனங்கள் மற்றும் வார்த்தைகளின் கட்டமைப்பு)

குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வசனத்தையும், சொல்லையும் எண்ணிக்கையால், வரிசையால், எழுத்து வடிவத்தால், அல்லது ஒலி வடிவத்தால் ஆய்வு செய்யும் முறை.

நீங்கள் இந்த ஆய்வைப் பற்றி இதுவரை செய்திருக்கும் விஷயங்களை சற்று விளக்கமாக ஓரிரு உதாரணத்துடன் அதை பதிவாகவே பதிய சொன்னார்.

**ரஹ்மத் ராஜகுமாரன்**

இது மிகப்பெரிய ஆய்வு. இதற்குரிய அட்டவனையே (Contest) பக்கம் பக்கமாக தேர்வு செய்து எழுதி வைத்து தேடிக் கொண்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு:

Dr. Khaled M.S. Al-Faqih அவர்கள் முன்வைத்த

"A Mathematical Phenomenon in the Qur'an of Earth-Shattering Proportions" என்ற ஆய்வு மற்றும் அதில் வரும் Qur'an Constant ≈ 70.44911244 என்ற கோட்பாட்டை முழுமையான, துல்லியமான, எளிய தமிழில் விளக்குகிறேன்.

1) இந்த ஆய்வின் பொதுப் பெயர்: "Qur'anic Constant Theory"

Dr. Khaled M.S. Al-Faqih (2017) முன்வைத்தது:

"குர்ஆனில் ஒரு நிலையான கணித மாறி (Constant) உள்ளது.

அனைத்து Structural Values–களையும் ஒரு மாதிரியாக இணைக்கிறது."

இந்த மாறிலி: Qur'an Constant (QC) ≈ 70.44911244

இது pi (3.14159…), golden ratio φ (1.618…), Euler constant e (2.718…)

போன்ற ஒரு "universal mathematical constant" போல குர்ஆனுக்கே உரியதாக உள்ளது என அவர் கூறுகிறார்.

2). இந்த Constant எப்படி கிடைக்கிறது? (கணித அடிப்படையில்)

**Dr. Al-Faqih** கூறுவது:

QC = Total letters / Total words / Special structural ratios

அவை:

Total Surahs (114) Total Verses (6236)

Total Words (~77,430) Total Letters (≈ 330,709)

(இவை பல நூற்றாண்டுகளாக standard Medina mushaf எண்ணிக்கைகள் உள்ளன என்கிறார்.)

**அவர் பயன்படுத்திய முக்கிய எண்ணியல் தொடர்புகள்:**

அ). Letters/WordsRatio\frac (\text(Total Letters)) (\text(Total Words)) \approx 4.27

அவர் இதை "Qur'anic mean" என்கிறார்.

ஆ) Verses / Surahs Ratio \frac(6236)(114)\approx 54.7

இ) Combined ratio

இவற்றை multiply–add–normalize செய்து

நிறைவு சமன்பாட்டில் கொண்டு வரும்போது, ஒரு "stable constant" கிடைக்கிறது:

QC = 70.44911244

இந்த சமன்பாடு:

எந்த நூல்,

எந்த random text,

எந்த classical Arabic poetry

எதற்கும் வேலை செய்யாது. ஆனால் குர்ஆனுக்குச் சிறப்பாகவே ஒரே மாறியைத் தருகிறது என்று அவர் கூறுகிறார்.

3). இந்த constant குர்ஆனில் எப்படி செயல்படுகிறது?

**Dr. Al-Faqih** கூறுவது:

"குர்ஆனின் Chapters, Verses, Words, Letters அனைத்தும் இந்த QC மதிப்பை நோக்கி இணைந்திருக்கும்."

அதாவது: சூரா ஒன்றின் (உதாரணமாக அல்ஃபாத்திஹா)

எழுத்து எண்ணிக்கை ratio
வசன எண்ணிக்கை ratio
வார்த்தைகள் ratio

எதைக் கொண்டாலும்: \text(function(value)) \to 70.44911244

போதுமான கணக்கீடுகளுக்குப் பிறகு

எல்லா சூராக்களும் ஒரே constant-ஐ நோக்கி converge ஆகின்றன.

இதையே அவர் கூறுகிறார்:

"This cannot happen by chance in a human - composed text."

4) ஏன் இது "Earth-Shattering" என்று அவர் சொல்கிறார்?

ஏனெனில்:

அ) A single constant
ஆ) Entire Qur'an (114 chapters)
இ) Word-system, letter-system, verse-system

அனைத்தையும் ஒரே மாதிரியாக இணைக்கிறது.

பொதுவாக:

Pi → வட்டங்களுக்கே
e → calculus-க்கே
φ → உயிரியல்/இயற்கைக்கு

ஆனால்

Qur'an Constant QC → குர்ஆனின் முழு எழுத்து-வார்த்தை-வசன கட்டமைப்புக்கு மூலம் interlinking value ஆக இருக்கிறது என அவர் வாதிக்கிறார்.


5) இதற்கு எடுத்துக்காட்டு (எளிமையான வடிவத்தில்)

Example: Surah Al-Fatihah

Total letters ≈ 113

Total words = 25

Verses = 7



ரஹ்மத் ராஜகுமாரன்

அவர் வடிவமைத்த simplified formula:

QC_s = \frac(Letters \times Verses)(Words)

Surah-க்காக:

QC_s = \frac(113 \times 7)(25) \approx 31.64

இது raw value.

அவர் normalization செய்து QC global constant-இற்கு adjust செய்கிறார்:

Adjusted = f(QC_s) \approx 70.44911244

அதே normalization மற்ற 113 surahs-க்கும் செயல்படும் என்கிறார்

(இந்த கோட்பாட்டை மையமாக வைத்து கடைசி 10 சூராக்களுக்கு பொருத்திப் பொருத்தி பார்க்கிறேன். அதற்குள் விடிந்து விடுகிறது )

6 ) இந்த constant கோட்பாட்டின் முக்கிய வரிகள் (எளிய தமிழில்) குர்ஆனை உருவாக்கும் ஒவ்வொரு அலகும் ஒரு கணித மையத்தை நோக்கி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்த மையத்திலிருந்து எந்த Surah-வும் சிதறவில்லை.

மனிதர்கள் எழுதும் எந்த புத்தகத்திலும் இந்த unified convergence இல்லவே இல்லை.

இதுவே தெய்வீக ஒழுங்கு ஆகும் என்கிறார்

7) இந்த ஆய்வுக்கு ஆதரவு + விமர்சனங்கள்

ஆதரவு: Statistical convergence rare 114 chapters consistent அனைத்து ஒழுங்குகளும் ஒரே constant-ஐ நோக்கி செல்லும்

விமர்சனம்:

Exact formula transparency குறைவு
Different letter counts → different QC
Normalization method elaborate

ரஹ்மத் ராஜகுமாரன் : 93601 81033
https://archive.org/details/@rahmath_rajakumaran

 vaigarai velicham official

தொடர்

# பெற்றோர்கள்/ ஜிஹாத்?

**பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:**

உங்களுடைய பெற்றோரை இரக்கத்துடன் நடத்துங்கள், உங்கள் குழந்தைகள் உங்களை இரக்கத்துடன் நடத்துவார்கள். நீங்கள் கற்புடன் நடந்துகொள்ளுங்கள் உங்கள் மனைவி கற்புடன் இருப்பாள். (தப்ரானி)

“அல்லாஹ் எல்லா பாவங்களையும் தாமதப்படுத்துவான், (அதாவது அவற்றிற்கான தண்டனையைத் தாமதப்படுத்துவான்) இறுதித் தீர்ப்பு நாள் வரை. ஒருவர் தன் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதைத் தவிர. (தன் பெற்றோர்களுக்கு ஆற்றிட வேண்டிய கடமைகளை புறக்கணிப்பதை தவிர) இதற்கான தண்டனையை அவன் இறப்பதற்கு முன்னாலே வழங்கிடுவான் இறைவன்.”

ஹாக்கிம் / அல் அஷ்ஃபஹானி “இரண்டு பாவங்கள் உடனேயே தண்டிக்கப்படும். இந்த உலகிலேயே அநீதி செய்பவன், பெற்றோர் களுக்குக் கீழ்ப்படியாமை.”

ஹாக்கிம் / அல் அஷ்ஃபஹானி - சஹீஹ் என வரையறை செய்யப்பட்ட நபிமொழி.

அப்துல்லாஹ் இப்னு மசூத் (ரழி) அவர்கள் கூறினார்கள். நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே, சிறந்த செயல் எது? அவர்கள் பதில் சொன்னார்கள். தொழுகைகளை அவற்றின் நேரத்தில், முந்தைய நேரத்தில் தொழுவதாகும். நான் மீண்டும் கேட்டேன்.

அடுத்த சிறந்த செயல் எது? அவர்கள் பதில் சொன்னார்கள் ஒருவரின் பெற்றோரிடம் கடமை செய்வது அவர்களிடம் நன்றாக நடந்து கொள்வது, நான் மீண்டும் கேட்டேன், அடுத்து சிறந்த செயல் எது? அவர்கள் சொன்னார்கள் அல்லாஹ்வின் வழியில் போர் செய்வதில் கலந்துகொள்வது” - முஸ்லிம்.

அம்ருபின் அல்ஆஸ் (ரழி) அவர்கள் கூறினார்கள் :

ஒரு மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து கேட்டார்கள். நான் ஜிஹாத் என்ற அல்லாஹ்வின் வழியில் நடக்கும் போரில் கலந்துகொள்ளலாமா? இறைவனின் தூதர் அவர்கள் கேட்டார்கள். உங்கள் பெற்றோர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? அந்த மனிதர் ஆமாம் என்றார். இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள், அவர்களின் நன்மைக் காக ஹிஜாத் செய். - புகாரீ, முஸ்லிம்.

இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள், தன்னை சுற்றி வாழ்ந்த தோழர்களை நன்றாக அறிந்தவர்கள். அந்தத் தோழர்கள் எதை முதலில் செய்ய வேண்டும் என்பதை



துல்லியமாகக் கூறிவிடுவார்கள்.

கொடுக்கல் வாங்கல்களில் பலவீனமான ஒரு நபித்தோழரை அழைத்து, நீ அரசு பதவிகளை பெறாதே என்று அறிவுறுத்தி இருக்கின்றார்கள். காரணம் அரசு பதவியை அவர் பெற்றால், அதில் அவர் பணங்களை கையாள வேண்டியது வரும். அதில் அவர் தவறிழைத்தால் நரகம் போய்விடுவார். ஆதலால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை தடுத்தார்கள். இந்தப் பின்னணியில்தான் மேலே உள்ள நபிமொழி புரிந்துகொள்ள வேண்டும்.


பெற்றோர்களை பேணும்போது அவர்கள் இறைநெறிக்கு மாறாக நடக்கச் சொன்னால் அதில் மட்டும் கீழ்ப்படியத் தேவையில்லை.

அவர்கள் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ள வில்லை என்றாலும், அவர்களுக்கு பிள்ளைகள் ஆற்றிட வேண்டிய கடமைகளை ஆற்றியே ஆக வேண்டும். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நான் அவர்களுக்கு நிறைவேற்றிட வேண்டிய கடமைகளை நிறைவேற்றிட வேண்டியதில்லை என எவரும் கருதிடக் கூடாது. அந்நிலையிலும் அவர்களுக்கு வேண்டியதை செய்தே ஆக வேண்டும்.




**- MGM**



ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




## இஸ்லாத்திற்கெதிரான மேலை நாடுகளின் மறு உயிர்பெற்ற போர்

**"The West's Resurgent War on Islam"**

*ஜான் பெஃப்பர் கூறுகின்றார்:*

முஸ்லிம்களை தீவிரவாதிகளாக சித்திரிக்க, தற்கொலை குண்டு வெடிப்புகள் பெரிதாகக் காட்டப்படுகின்றன. Suicide Boms. ஆனால், இந்த தற்கொலை தாக்குதல்களும், அமெரிக்காவின் அற்புதமான கண்டுபிடிப்புகளே!

செப்டம்பர்-4,1804இல் அமெரிக்காவின் படைகள் ஓர் பயங்கர சூழலை எதிர்கொண்டன. அது திருப்போலியில், அமெரிக்க கப்பல் படைகளால், எதிரிகளின் அணிவகுப்பை உடைத்துக்கொண்டு முன்னேறிட முடியவில்லை.

ஆதனால் அமெரிக்க தளபதி ஓர் அபார உத்தியைக் கையாண்டார். தளபதி எட்வெட் பிரிமிள் அமெரிக்க கப்பல் ஒன்றில் நிரம்ப வெடிபொருள்களை நிரப்பினார். கப்பலின் பெயர் USS Interpid இதில் 10,000 டன் வெடிபொருள்கள் நிரப்பப்பட்டிருந்தன. 150 இதர வெடிகுண்டுகளும் நிரப்பப்பட்டிருந்தன. இதில் இருந்த வெடிபொருள்கள் தாமாகவே எதிரிப் படைகள் புகுந்தவுடன் வெடிக்கும்.

இருந்தாலும் அந்த வெடிபொருள்களும், குண்டுகளும் வெடிக்காமல் போனால் 10,000 டன் வெடி பொருள்கள், எதிரிகளின் கையில் சிக்கிக்கொள்ளும் என்பதனால், அதனை வெடிக்கச் செய்ய 2 இராணுவத்தினர் உடன் அனுப்பப்பட்டனர். இவர்கள் வெடிபொருள்கள் வெடிக்கும்போது இறந்துபோவோம் என்பதை அறிந்தே அதில் சென்றார்கள்.

திரிபோலிய கப்பல் படைக்குள் புகுந்து வெடிபொருள்கள் வெடித்தன. திரிபோலி கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது. இந்த வெடிபொருள்களுடன் சென்ற 2 பேரும் இறந்தார்கள்.

200/225 ஆண்டுகளுக்கு முன் இதுபோன்றதொரு உத்தியை அமெரிக்கா கையாண்டது. அது ஏடன வளைகுடாவில். அப்போது பயன்படுத்தியது கப்பல் USS Cole, - இப்படி இரண்டு தற்கொலை தாக்குதலை நடத்தி அமெரிக்கா உலகுக்கு தற்கொலை தாக்குதலை அறிமுகப்படுத்தியது புது போர் உத்தி என பீற்றிக்கொண்டது.

நாம் முன்னர் சுட்டிக்காட்டிய திரிப்போலி தற்கொலை தாக்குதல் பெரிய வெற்றி எதையும் பெற்றுத் தந்திடவில்லை. ஆனாலும் அதனை ஏற்பாடு செய்த தளபதி எட்வெட் பிரிபிள் பெரிதாகப் போற்றப்பட்டார்.

அப்படிப் பாராட்டியவர்களுள் கிருஸ்தவ மதத் தலைவர் போப் அவர்களும் உண்டு. இந்த அமெரிக்க தளபதி ஒரு சிறு படையுடன்

கிருஸ்தவத்திற்கு செய்த சேவையை, கிருஸ்தவ உலகம் பல பல்லாண்டுகளாகச் செய்ததில்லை" என்றார். இந்த ஒரு செயலின் மூலம், அமெரிக்கா, ஐரோப்பியா மொத்தமாக கிருஸ்தவத்திற்கு செய்ததைவிட அதிகமாகச் செய்ததாகப் பீற்றிக்கொண்டது.

அமெரிக்காவில் 9/11 என அடையாளப் படுத்தப்படும் இரட்டை கோபுர தாக்குதலின் போது கடற்கொள்ளை போரை பற்றிய கதையை புஷ் நிருவாகம் பயன்படுத்திட வில்லை. காரணம் முஸ்லிம்கள் அன்று கடற்கொள்ளையில் ஈடுபட்டவர்கள், முஸ்லிம்கள் அல்ல, என்பதையும் இஸ்லாம் இதுபோன்ற செயல்களை அனுமதிக்கவில்லை என்பதையும் தெளிவபடுத்திவிட்டார்கள்.

இரட்டை கோபுரங்கள் தாக்கப்பட்ட பின்னணியில் அமெரிக்க முஸ்லிம் உலகின்மேல் தொடுத்த போர்களை அமெரிக்க மக்கள், அவை "Good Wars" நல்ல போர்கள் எனப் பாராட்டிட தொடங்கினார்கள். இது உலகப் போர்-2 மற்றும் பணிப்போர் போன்றவற்றின் அடிச்சுவடு என்றார்கள் அமெரிக்க மக்கள்.

9/11 தாக்குதல் மக்களை முஸ்லிம்கள் மேலும் முஸ்லிம் உலகுக்கு எதிராகவும் திருப்பிடும் மிகப்பெரிய வாய்ப்பாக பயன் பட்டது. (Mobilising opportunity) அன்று கடல் கொள்ளை கதையும், ஜெரூசலத்தை சலாஹுத்தீன் அய்யூபி கைப்பற்றியதையும், இப்படித்தான் பயன்படுத்தினார்கள். ஆனால் இப்போது உலக அரங்கில் அமெரிக்கா தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிட ஆட்சி மாற்றம், ஜனநாயகத்தை நிலை நாட்டுவது ஆகியவற்றைப் பயன்படுத்து கின்றது. இந்த சிலுவைப் போர் நிச்சயமாக சொற்களால் செய்யப்படுவதில்லை.

**இதை இன்னும் விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம். இன்ஷாஅல்லாஹ்.**

குறிப்பு-

இதே உத்தியை இஸ்ரேல் இப்போது காஸாவில் கடைபிடித்து, அப்பாவி காஸா வாழ் முஸ்லிம்களைக் கொலை செய்து வருகின்றது.

வெடிகுண்டுகள் நிரம்பிய வாகனங்களை, தானியங்கி வாகனங்களை, காஸா குடியிருப்பிற்குள் அனுப்பியது. பின்னர் வெடிக்கச் செய்தது. கொத்துக் கொத்தாக அப்பாவி மக்கள் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

அக்டோபர் 10,2025 இல் ஹமாஸ் முதலாய போராளிகளுக்கும் இஸ்ரே லுக்கும் இடையே போர் நிறுத்தம் செயலில் வந்தது. அதன்பின்னும் இதுபோன்ற உத்திகளைப் பயன்படுத்தி மக்களைக் கொன்று வருகின்றது.

இந்தத் தீவிரவாதங்களையெல்லாம் உலகுக்கு அறிமுகப்படுத்தி, தங்களது ஆதிக்க வெறியை நிலைநாட்டி வரும் அமெரிக்காவும், யூதர்களும் தீவிரவாதிகள் இல்லையாம்.

பலியாகிக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் தீவிரவாதிகளாம், இப்படி பலகோடி ரூபாய் செலவில் பிரச்சாரங்கள் செய்யப் படுகின்றது. நாம் இதுபோன்ற தகவல் களை சகோதர சமுதாயத்தவர்களிடம் கொண்டு சேர்த்துக்கொண்டே இருக்க வேண்டும்.





vaigarai velicham official



# கழுத்து ஏன் வலிக்கிறது?

டாக்டர் **வி.எஸ்.நடராஜன்,** முதியோர் நல மருத்துவர்

*கழுத்து வலிக்குப் பல காரணிகள் உண்டு!*

**தசைப்பிடிப்பு,** உட்காரும்போது சரியான தோரணையைப் பின்பற்றாதது, நரம்புச் சுருக்கம் எனப் பல விஷயங்கள் வலியை உண்டாக்கலாம். இந்தச் சாதாரண காரணங்களைத் தாண்டி, கழுத்து எலும்பில் ஏற்படும் தேய்மானம் தீவிரமான வலியை வரவழைத்துவிடும்.

இதுபோல் கழுத்து எலும்புத் தேய்மானம் ஏன் வருகிறது, என்ன சிகிச்சை என்பதைப் பார்ப்போம்

கழுத்து எலும்புக்கு இடையே உள்ள ஜவ்வில் தேய்மானம் ஏற்படுவதால் வலி உண்டாகிறது. இதை Cervical Spondylosis என்று குறிப்பிடுகிறோம். பொதுவாக 50 வயதைக் கடந்தவர்களுக்கே இத்தொல்லை அதிகம் வருகிறது. இவ்வலி கழுத்தில் தோன்றித் தோள்பட்டை, கை மற்றும் விரல்களுக்கும் பரவலாம். கழுத்துப் பகுதி சற்று இறுக்கமாகும். கழுத்தை அசைக்கும்போது இவ்வலி அதிகரிக்கும். சில சமயங்களில் பாதிக்கப்பட்ட இடத்தில் எரிச்சல் உண்டாகும். அந்த இடம் சிலருக்கு மரத்துப்போகும். நாள்பட்ட வலி இருந்தால் தோள்பட்டை மற்றும் கையில் உள்ள சதை பலவீனம் அடையலாம். சிலருக்குக் கழுத்தை வேகமாகத் திருப்பும்போது மயக்கமும் வரலாம். அதனால் கீழே விழவும் வாய்ப்பு உண்டு.

**காரணம் என்ன?**

தலையில் சுமை தூக்குபவர்களுக்கு இத்தொல்லை வர வாய்ப்பு அதிகம். தொடர்ந்து கணினியை உபயோகிப்பவர்களுக்கு இத்தொல்லை இளமைப் பருவத்திலேயே வரலாம். கழுத்து எலும்புத் தேய்மானத்தைக் கண்டறிய கழுத்து எக்ஸ்ரே எடுத்தாலே போதுமானது. எம்.ஆர்.ஐ. ஸ்கேனும் தேவைப்படலாம். கழுத்தில் ஏற்படும் வலியைக் குறைக்க வலி நிவாரணிகளே போதுமானது. இம்மருந்துகளை மருத்துவர் ஆலோசனையோடு எடுத்துக் கொள்வது நல்லது. இயன்முறைச் சிகிச்சையும் நல்ல பயனைக் கொடுக்கும்.

**சிகிச்சை என்ன?**

வலி சற்றுக் குறைந்த பின்பு சில பயிற்சிகளை இயன்முறைச் சிகிச்சை நிபுணர் மறுபடியும் சொல்லிக் கொடுப்பார். அதைத் தொடர்ந்து பின்பற்றிவந்தால்கழுத்துவலிவராமல்தடுத்துக் கொள்ளலாம். கழுத்தை அசைக்கும்போது வலி அதிகமாக இருப்பின் கழுத்துப்பட்டையை (Cervical collar) அணிந்து கொள்ளலாம். தொடர்ந்து உட்கார்ந்து இருக்கும்போதோ அல்லது பிரயாணம் செய்யும்போதோ கழுத்துப் பட்டையை உபயோகப்படுத்தலாம். இரவில் அப்பட்டை தேவைப்படாது.

**கழுத்தில் வலி உள்ளவர்கள் தவிர்க்க வேண்டியது என்ன?**

கழுத்து வலி உள்ளவர்கள் இரு சக்கர வாகனங்கள் ஓட்டுவதைத் தவிர்க்கவும். மேலும் உயரம் குறைந்த தலையணையையே பயன்படுத்த வேண்டும். மேற்கொண்ட சிகிச்சை பயனளிக்காதவர்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம்.

(மகிழ்ச்சியைத் தொடர்வோம்)

**நன்றி - முதுமை எனும் பூங்காற்று**

# கோபம்



கோபம் மனிதர்களின் சுபாவங்களில் ஒன்றாக உள்ளது. இந்த கோபம் அளவிற்கு மீறி அதிகமாகும் போது எப்பேற்பட்ட உறவையும் பிரித்து விடுகிறது. அது தாய், தந்தை, மனைவி, பாசமிகு பிள்ளை, நண்பர்கள், உதவி புரிபவர்கள்கள் என யாரையும் பார்ப்பதில்லை. கோபம் நம் மூளையை மயங்கடிக்கச் செய்கிறது. நன்மை, தீமைகளை சிந்திக்க விடாமல் செய்கிறது. இதனால் பலர் கோபத்தின்போதுதான் என்ன செய்கிறோம் என்று அறியாமல் கொலைகூட செய்யத் துணிந்து விடுகிறார்கள். கோபம் தணியும்போது நானா இப்படிப்பட்ட செயல்களை செய்தேன் என்று வருந்தும் அளவிற்கு கோபம் மனிதனை மாற்றி விடுகிறது.

கோபத்தை பற்றி அல்லாஹ் திருமறையில் கூறும்போது:

*“பயபக்தியுடையவர்கள் கோபத்தை அடக்கிக்கொள்வார்கள். மனிதர்கள் செய்யும் தவறுகளை மன்னிப்பார்கள்.”*

*(ஆலுஇம்ரான் - 234)*

ஒருமுறை ஒரு மனிதர் வந்து முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் எனக்கு உபதேசியுங்கள் என்று கேட்டார். கோபம் கொள்ளாதே என்று நபியவர்கள் பதில் சொன்னார்கள். அவர் மீண்டும் மீண்டும் பலமுறை உபதேசியுங்கள் என்று கேட்டபோது அப்போதும் நபியவர்கள் கோபம் கொள்ளாதே என்று பதில் சொன்னார்கள். நபியவர்கள் திரும்பத் திரும்ப கோபம் கொள்ளாதே என்று கூறுவதின் மூலம் அதன் தீமையை நாம் உணர வேண்டும்.

கோபம் நன்மையை அழித்துவிடும் நம்மை தீயசெயல் தீய சொற்களை செய்பவர்களாக, பேசுபவர்களாக நம்மை மாற்றிவிடும்.

தன் நாவால் கெட்ட விஷயங்களைப் பேசுபவனையும் கெட்ட வார்த்தைகளை கூறுபவனையும் அல்லாஹ் மிகவும் வெறுக்கின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மென்மையை இழப்பவன் நன்மையை இழப்பான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒருமுறை பள்ளியில் சிறுநீர் கழித்த கிராமவாசி ஒருவரை நபித்தோழர்கள் கோபம் கொண்டு தாக்க முயன்றபோது, அவர்களை தடுத்து நிறுத்தி சிறுநீர் பட்ட அந்த இடத்தை தம் கைகளாலே தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்தார்கள் நபியவர்கள். இதேபோல் ஹுதைபியா உடன்படிக்கையின்போது இறை மறுப்பாளர்கள் கோபத்தோடும் கடுமையாகவும் நடந்து கொண்டபோது ஸஹாபாக்களும் கோபம் கொண்டனர். ஆனால் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கோபம் கொள்ளாமல் பொறுமையோடு நடந்துகொண்டதின் விளைவு பிற்காலத்தில் மிகப்பெரிய வெற்றியாக மாறியது.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

மக்களைத் தன்னுடைய பலத்தால் அதிகமாக அடித்து வீழ்த்துபவன் வீரன் அல்லன். உண்மையில் வீரன் என்பவன் கோபத்தின்போது தன்னை கட்டுப்படுத்திக் கொள்பவனே ஆவான்.

உங்களில் ஒருவருக்கு நிற்கும்போது கோபம் வந்தால் அமர்ந்து கொள்ளட்டும். அப்போதும் கோபம் போகவில்லையானால் அவர் படுத்துக்கொள்ளட்டும்.

நிச்சயமாக கோபம் ஷைத்தானின் குணம். ஷைத்தான் நெருப்பினால் படைக்கப்பட்டவன். நீரைக் கொண்டுதான் நெருப்பை அணைக்க முடியும். எனவே உங்களில் ஒருவர் கோபப்பட்டால் உளூ (உறுப்புகளை நீரால் கழுவி சுத்தம்) செய்து கொள்ளட்டும் என முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்.

கோபம் நம்மை பிரிக்கின்றது. மன்னிக்கும் குணம் நம்மை ஒன்று சேர்க்கிறது. தீய குணத்திலிருந்து விலகி நன்மை தருகின்ற நற்குணத்தோடு வாழ்வோம்.

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் | - ரூ.350.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு | - ரூ.140.00 |
| 3. | சாதி ஒழிந்தது | - ரூ.50.00 |
| 4. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 5. | டெல்லி குண்டுவெடிப்புகள் | - ரூ.10.00 |
| 6. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு | - ரூ.60.00 |
| 7. | மால்கம்-X | - ரூ.120.00 |
| 8. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் | - ரூ.20.00 |
| 9. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள் | - ரூ.40.00 |
| 10. | கர்கரேயை கொலை செய்தது யார்? | - ரூ.250.00 |
| 11. | சிந்திப்பீர் செயல்படுவீர் | - ரூ.15.00 |
| 12. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம் | - ரூ.40.00 |
| 13. | சாதி ஒழிந்தது (ஹிந்தி) | - ரூ.50.00 |
| 14. | நாம் பிரிந்து விடவேண்டாம் | - ரூ.175.00 |
| 15. | தாலிபானின் பிடியில் | - ரூ.150.00 |
| 16. | தீண்டாமைக்குத் தீர்வு | - ரூ.30.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு | - ரூ.110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள் | - ரூ.90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம், | - ரூ.130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள் | - ரூ.70.00 |
| 21. | எது முதலில்? | - ரூ.450.00 |
| 22. | சாதி ஒழிந்தது (கன்னடம்) | - ரூ.50.00 |

| | | |
|---|---|---|
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? | - ரூ.20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? | - ரூ.30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் | - ரூ.15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும் | - ரூ.50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | - ரூ.40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | - ரூ.30.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | - ரூ.50.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | - ரூ.60.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | - ரூ.70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | - ரூ.100.00 |
| 33. | திருக்குர்ஆன் கூறும் பொறுமை | - ரூ.80.00 |
| 34. | 26/11- விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | - ரூ.220.00 |
| 35. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | - ரூ.20.00 |
| 36. | முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம் | - ரூ.10.00 |
| 37. | நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? | - ரூ.10.00 |
| 38. | குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? | - ரூ.25.00 |
| 39. | இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? | - ரூ.20.00 |
| 40. | கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான் | - ரூ.25.00 |
| 41. | கூரியூர் ஜின்னா ஷஹீத் | - ரூ.60.00 |
| 42. | முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும் | - ரூ.20.00 |
| 43. | இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு | - ரூ.30.00 |
| 44. | சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம் காந்திஜி கொலை ஏன்? எப்படி? | - ரூ.30.00 |
| 45. | பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் | - ரூ.400.00 |
| 46. | குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள் | - ரூ.150.00 |
| 47. | இஸ்லாம் ஒன்றே வழி! | - ரூ.120.00 |
| 48. | இஸ்லாம் உங்கள் பார்வைக்கு | - ரூ.400.00 |
| 49. | முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன? | - ரூ.300.00 |

| | | |
|---|---|---|
| 50. | சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள் | - ரூ.20.00 |
| 51. | இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம் | - ரூ.100.00 |
| 52. | முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி | - ரூ.20.00 |
| 53. | நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம் | - ரூ.50.00 |
| 54. | பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி | - ரூ.50.00 |
| 55. | அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும் | - ரூ.40.00 |
| 56. | எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர் | - ரூ.60.00 |
| 57. | சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை | - ரூ.60.00 |
| 58. | பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும் | - ரூ.25.00 |
| 59. | முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார் | - ரூ.20.00 |
| 60. | அயா சோபியா உருவான வரலாறு | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 1. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம் | - ரூ.100.00 |
| 2. | மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள் | - ரூ.100.00 |
| 3. | குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் | - ரூ.170.00 |
| 4. | நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா? | - ரூ.140.00 |
| 5. | பலி கடாக்கள் | - ரூ.300.00 |
| 6. | வரலாற்றுப் பாடத்தில் இருந்து நீக்கப்பட வேண்டியவரா அவுரங்கசீப் | - ரூ.80 |
| 7. | ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் | - ரூ.15.00 |
| 8. | 9/11 யாரால்? யாரால்? | - ரூ.40.00 |
| 9. | இந்தியாவின் இரகசியச் சித்திரவதைக் கூடங்கள் | - ரூ.25.00 |
| 10. | நாளந்தா பல்கலைக்கழகத்த எரித்தது யார்? | - ரூ.50.00 |
| 11. | சுல்தான் நூருத்தீன் ஸெங்கி (ரஹ்) | - ரூ.300.00 |
| 12. | இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் | - ரூ.480.00 |
| 13. | யூத, அமெரிக்க தீவிரவாதமும் இஸ்ரேலின் உருவாக்கமும் | - ரூ.15.00 |
| 14. | இஸ்லாத்தில் இறை நம்பிக்கை | - ரூ.350.00 |
| 15. | தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டு அனுதாபத்தைத் தேடிய யூதர்கள் | - ரூ.20.00 |

## BOOKS IN ENGLISH

1. **END OF CASTEISM** - T.M. Umar Farooq, - **Rs.50.00**
   English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam
2. **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media - **Rs.695.00**
3. **MUHAMMED THE PROPHET FOR OUR TIME** - **Rs.325.00**
   Karen Armstrong
4. **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi - **Rs.350.00**
5. **WHO KILLED KARKARE** - **Rs.300.00**
   The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS,
6. **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif - **Rs.275.00**
7. **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION** - **Rs.60.00**
   Kamaluddin Ahamed
8. **MUSLIMS AGAINST PARTITION OF INDIA** - **Rs.280.00**
   Shamsul Islam, Pharos Media
9. **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN** - **Rs.25.00**
   (EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed
10. **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE** - **Rs.150.00**
    Nilofar Suhrawardy
11. **Innocent Prisoners** - **Rs.495.00**
12. **Brahminists Bombed Muslims Hanged** - **Rs.350.00**
13. **Kodikkal- TheLiving Witness of Social Justice** - **Rs.300.00**

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - **ரூ.60.00**
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - **ரூ.30.00**
    கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002